# தி. ஜானகிராமன்

# கமலம்

ஐந்திணைப் பதிப்பகம்

கமலம்



தி. ஜானகிராமன்

ஐந்திணைப் பதிப்பகம்

முதற் பதிப்பு : 1963
மறுபதிப்பு : மே-1994

ஐந்திணை — 55

உரிமை பதிவு

விலை : ரூ. 23-00

Published by
KUZHA. KATHIRESAN

Phone : 84 94 10
AINTHINAI PATHIPPAGAM
279, Pycrofts Road
Triplicane, Madras-600 005

அச்சிட்டோர் :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்,
7/40 கிழக்குச்செட்டித் தெரு,
பரங்கிமலை, சென்னை - 16.

# பதிப்புரை

தமிழ்ச் சிறுகதை, நாவல் உலகில் தனக்கென்று ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு, தேர்ந்த எழுத்தாற்றலால் பிரபலமடைந்து புகழ் மகுட மணிந்த அமரர் தி. ஜானகிராமன் அவர்களின் 'கமலம்' மறுபதிப்பாக வெளிவருகிறது.

'அம்மா வந்தாள், மோகமுள்' ஆகிய நாவல் கள் மூலம் வாசகர்களாலும் விமர்சகர்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்ற, சாஹித்ய அகா தெமிப் பரிசு பெற்ற திரு. தி. ஜானகிராமன் அவர்களது படைப்புகள் அனைத்துமே மென்மை யானவை. படிப்போர் நெஞ்சைப் பரவசப்படுத்து பவை.

சுதேசமித்திரன் தீபாவளி மலர்களில் வெளி வந்த 'கமலம்', 'தோடு' இரு நெடுங்கதைகளுடன், சென்னை வானொலியில் தி. ஜானகிராமன் அவர் களால் படிக்கப் பெற்ற 'அவலும் உமியும்' தொடர் சித்திரமும் இதில் இடம் பெற்றுள்ளன.

பேராதரவு நல்கி வரும் வாசகர் பெருமக்க களுக்கும் திருமதி. தி. ஜானகிராமன், திரு. சாகேத ராமன் ஆகியோருக்கும் இந்நூலை விரைந்து அழகுற அச்சிட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகத் தாருக்கும் நன்றி.

சென்னை-5
10-5-94

அன்புடன்,
**குழ. கதிரேசன்**

## உள்ளே...


| | |
|---|---|
| கமலம் | 5 |
| அவலும் உமியும் | 55 |
| தோடு | 86. |


# கமலம்

நானும் மாமாவும் காற்றுக்காக வாய்க்கால் மதகில் உட்கார்ந்திருந்தோம். சாலையையும் ஊருக்குள் போகிற பாதையையும் இணைக்கிற மதகு இது. கீழே வாய்க்கால் வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. சாலையின் அக்கரை முழுவதும் மண்டி இருண்டு கிடந்த மூங்கில் கொல்லைகள் மாலையின் நிசப்தத்தைக் கிர்கிர்ரென்று முள்ளால் கீறிக் கொண்டிருந்தன. காக்காய்களின் கரையல் கூட அடங்கி விட்டது. இந்த ஊரில் காண்கிற காக்காய்கள் நாலைந்து மைலில் உள்ள காக்காய்த்தோப்பு என்னும் ஊரிலிருந்து வருபவை. காலையில் வந்து மாலையில் திரும்பிவிடும்.

குருவிகளைக் கூடக் காணவில்லை. எப்போதாவது மீன் குத்தி ஒன்று வாய்க்கால் தண்ணீருக்குமேல் ஒரு ஆள் உயரத்தில் நின்று செங்குத்தாக ஒரு முழுக்குப் போட்டு விட்டு நீர் மட்டத்தோடு பறந்து செல்லும்.

மாமாவும் நானும் பேச ஒன்றுமில்லாமல் உட்கார்ந்திருந்தோம். இந்த நிசப்தத்தின் ஆழத்தில் நான் முழுகிக் கிடந்தேன். நான் ஊருக்கு வந்து நாலு நாளாகிவிட்டது. பேசுவதெல்லாம் பேசித் தீர்த்தாகிவிட்டது. திருவல்லிக் கேணி ஹைரோடு வீட்டின் முன் போகிற பஸ்ஸுகள், டாக்ஸிகள், லாரிகள், முன்னும் பின்னும் கேட்கிறபடி ரேடியோக்கள் ஆகிய எல்லாவற்றிலிருந்து எழுப்பி இந்த நிசப்தத்தில் வந்து குதித்திருந்தேன் நான். ஆகவே அது

ஒன்றுதான் என் மனத்தில் உரைத்தது. மாமாவுக்கு இது புதிது இல்லை. என்ன நினைத்துக் கொண்டிருந்தாரோ!

'என்ன இன்னும் ஆறரை பஸ் வரலெ?—கிழக்கே போற பஸ்ஸு?' என்றார் அவர்.

'இப்ப என்ன அந்தக் கவலை?'

'கவலை ஒண்ணுமில்லெ. மூணு மணி ட்ரிப்பிலே ட்ரைவர் உத்ராவதி போனான். அவன் கிட்ட ஒரு ரூபா பணத்தைக் கொடுத்துப் பொடி வாங்கிட்டு வாடான்னு சொல்லிருக்கேன். வல்லேன்னா, ராத்திரி தூக்கம் வராதே' என்றார் கவலையுடன்.

'நான் வாங்கிட்டு வந்தது ஆயிட்டுதா?'

'ஆமா அளகா வாங்கிட்டு வந்தியே! நீயும் என் தங்கச்சி மவன்னு பேர் வச்சிக்கிட்டு, ஒரு தோலா வாங்கிட்டு வந்தே பாரு! அப்பறம் மூணு அணாக்கு வாங்கிப்பிட்டேன் நான். பட்டணத்திலிருந்து வறவன் ஒரு அஞ்சு பலம் டின்னா வாங்கிட்டு வந்தா, அளுகியா போயிரும்?'

'காரம் போயிடுமோன்னு நெனச்சேன், மாமா!'

'காசிலேன்னு சொல்லு. தொட்டுக்க தொடச்சுக் கன்னு தானே இருக்கு. மருமான் பாடு! நீயும் தான் பதினைஞ்சு வருசமாச் சம்பாரிக்கிறே' என்று மாமா புன்சிரிப்புச் சிரித்தார். அந்தப் புன்சிரிப்பின் எகத்தாளம் எனக்குத்தான் புரியும். 'கெக்கே' காட்டுகிற புன்சிரிப்பு அது.

படித்தவரல்ல அவர். அந்த நாளில் பெருமாள் கோயில் முகப்புச் சார்ப்பில் குப்புசாமி வாத்தியாரிடம் வாசித்ததைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி, வாக்குண்டாம், நாலு திருப்புகழ், காளமேகம் சிலேடைப் பாட்டு, ஒரு ஏழெட்டு ராமலிங்கர் அருட்பா, நாலு காணி முந்திரி வாய்பாடு—இவ்வளவு தான் அவர் படிப்பு. இரண்டே வருஷத்தில் இவ்வளவும்



முடிந்துவிட்டது. இங்கிலீஷ் தெரியாது. ஆனால் சொத்து நில சமபந்தமான சட்டங்களெல்லாம் தலைகீழ்ப்பாடம். மாசத்துக்கு நாலு தடவை கும்பகோணம் கச்சேரிக்குப் போகாமல் இருக்க மாட்டார். அவரிடம் நூறு ஆயிரம் என்று கடன் வாங்கி விவசாயக் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழே பதுங்கி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிற தகல்பாஜிகளைக் கண்ணில் விரல்விட்டு ஆட்டிக் கொண்டேயிருப்பார். இப்போது அவருக்கு இருக்கிற இரண்டு வேலி நிலமும் அவரே சொந்தப் பாடுபட்டு இரண்டு ஏக்கராவைப் பெருக்கின பெருக்கு. அவருக்கு வக்கீல் வேண்டிய அவசியமில்லை. ஆனால், கச்சேரியில் வக்கீல் என்று ஒருவன் வேண்டியிருக்கிறதே. அதற்காகத் தான் வைத்துக் கொள்வார். அதனால்தான் பெரிய வக்கீல்களிடம் அவர் போவதில்லை. ஆளுக்கு ஒரு அணாவென்று நாலு பேராக ஒரு மாட்டு வண்டியைப் பேசிக்கொண்டு கச்சேரிக்கு வந்து பிழைப்பு நடத்துகிற எத்தனையோ வக்கீல்களில் ஒருவரை, ஓய்! கும்பேச்வரய்யரே, இங்க வாங்க. ஒரு பாயிண்டு இருக்கு. பேசறீரா?' என்று அதட்டுவார். என்ன பேச வேண்டும் எப்படிப் பேச வேண்டும் என்று அவரே சொல்லிக் கொடுப்பார். பேசியானதும் இரண்டோ மூன்றோ அவர் கையில் வைத்துவிட்டு, வெற்றி வாகையோடு ஊருக்குத் திரும்பிவிடுவார். இந்த மாதிரியாக அவர் சாமர்த்யத்துக்கு ஆயிரம் சொல்லலாம். மலை மாதிரி பொறுமை. அதைமீறி வருகிற கோபமும் மலையாகத்தான் வரும்; வந்து அமர்ந்து ஆளை எறும்பாகத் தேய்த்துவிடும். தான் இத்தனை பெருமை உள்ளவர் என்ற உணர்வும் உண்டு, அவருக்கு. அதற்கு மாறாக, எம்.ஏ. படித்த் அப்பாவியாக நான் இருப்பதும் அவருக்குத் தெரியும். அந்தப் புன்சிரிப்பில் உதிர்கிற எகத்தாளம் அதுதான் ஆனால் வெறும் எகத்தாளப் புன்சிரிப்பு இல்லை. 'பாவம்' என்று இரக்கமும் பரிவும் கலந்த எகத்தாளம்தான் அது. செல்லமாகப் படிக்க வைத்து வளர்த்த குழந்தை என்கிற ஒரு அன்பு.

அவருக்குப் பதில் சொல்லிப் பேச்சை வளர்க்க நான் விரும்பவில்லை. நான் காசு மிச்சப்படுத்தாததைப் பற்றி அவரும் நானும் வாதப் பிரதிவாதம் செய்துசெய்து வாய் நோவெடுத்து விட்டது. அவர் இடுக்கு அகப்பட்ட போதெல்லாம் கிண்டாமலும் இருக்கமாட்டார். நான் தான் இப்போதெல்லாம் பதில் பேசாமல் அந்தப் பேச்சை அணைத்து விடுகிற வித்தையைக் கையாண்டு வருகிறேன்.

'பஸ் வறாப்போலிருக்கே' என்றார் திடீர் என்று.

'எங்கே, மாமா?'

'சத்தம் கேக்குதே!' என்றார். பத்து நிமிஷம் முன்னா லேயே கேக்கிற காது அவருக்கு. எனக்குக் கேட்கவில்லை.

'எங்கே, மாமா?'

'வருதுடா' என்றார் அவர்.

ஐந்து நிமிஷத்திற்குப் பிறகுதான் எனக்குக் கேட்டது. கடைசியில் அவர் எதிர்பார்த்த 'கிழக்கே போகிற' பஸ் வந்தேவிட்டது. சரக்கென்று ப்ரேக் போட்டு நின்றது.

'வேலுப் பிள்ளையா! இந்தாங்க, புடியுங்க' என்றான் ட்ரைவர். மாமாவுக்கு முகம் மலர்ந்தது. 'அப்பாடா!' என்றார். வாங்கிக் கொண்டு பல்லாண்டு கூறி விட்டு, 'சரி, போயிட்டு வா' என்றார்.

'இருங்க, உங்க ஊருக்கு விருந்தாடி வருது, இறக்காமப் போயிடறதா?' என்றார் ட்ரைவர்.

'விருந்தாடியா! யாரு?' என்று கூறியபடியே பஸ்ஸை வளைத்துக் கொண்டு படிக்கட்டின் பக்கம் போனார் மாமா.

'அடெடெ! யாரோன்னில்ல நெனச்சேன்! சாமி நாதனா? வா, தம்பி' என்றார் மாமா. எனக்குக் குரல் மட்டுமே கேட்டது. பஸ் அவரை மறைத்திருந்தது.



பஸ் நகர்ந்ததும், சாமிநாதன் மட்டும் இல்லை—இரண்டுபேர் சாலையில் நின்றார்கள். அவனோடு ஒரு பெண்ணும் நின்று கொண்டிருந்தாள். வெளிர் நீலப் புடவை, மாநிறத்துக்கும் மேலான வர்ணம். எடுப்பான ஒரு தோற்றம். நல்ல உயரம், உயரத்துக்குத் தகுந்த கட்டு. கையில் இரண்டே இரண்டு வளைகள். இடது கையில் ஒரு 'வாலெட்,' காலில் ஒரு வெல்வட்டுச் செருப்பு. பெரிய இடத்து முகம். மட்டம், உயர்த்தி என்று முகத்திலேயே தெரியுமே,— அடியெடுத்து வைப்பது, பார்ப்பது, புன்னகை பூப்பது, பேசுவது, சொரிந்து கொள்வது—எதிலேயும் தெரியுமே— அந்த எல்லாம் சேர்ந்த தன்மை அவள் பெரிய இடத்துப் பெண் என்று அந்தச் சாலை யிலேயே நிறுத்தி வைத்துச் சொல்வது போலிருந்தது.

இந்த முகக்களை. நடை உடை, வர்ணம்— எல்லாம் பட்டணத்தில் பார்த்தது. ஒரு வாரமாக இதையெல்லாம் பார்க்காத என் கண்ணுக்கு என்னத்தையோ கண்டு விட்டாற் போலிருந்தது. பார்த்துக்கொண்டேயிருந்தேன். மாமாவும் அவளைப் பார்த்துக்கொண்டே நின்றார்.

'இப்பத்தான் வறியா?' என்றார் மாமா, சாமி நாதனிடம்.

''ஆமாம்.''

'எங்கேருந்து?'

'கல்கத்தாவிலேர்ந்து.'

'—? —, ஒன்றும் கேட்காமல் பார்வையால் அடுத்த கேள்வியைக் கேட்டு விட்டார் மாமா.

இவங்கதான் எங்க ஐயா வீட்டு இவங்க... நான் வேலையா இருக்கேன்ல...'' என்றான் சாமிநாதன்.

'ஆமா, ஆமா—'

'அந்த ஐயா வீட்டவங்க.'

'அப்படியா வணக்கம்!'

'வணக்கம்' என்று இருவாட்சி விரல்களை எடுத்துக் கூப்பினாள், அந்தப் பெண். பெண் என்றால் பதினேழு பதினெட்டு வயதில்லை, முப்பத்து நாலு முப்பத்தைந்து இருக்கலாம், அதற்குக் குறைவில்லை. முப்பத்தெட்டுக்கு மேலிராது என்று தோன்றிற்று எனக்கு, கன்னத்தையும் உடலையும் பார்த்தபோது.

சாமிநாதன் சொன்னான் : 'அம்மா திருநெல்வேலிப் பக்கம்னு பேரு. நம்ம சனங்கதான். பிள்ளைமார்தான். ஆனாப் பேருதான் அப்படி. பொறந்து வளந்துது எல்லாம் பட்டணத்திலே. அப்புறம் ஐயாவோட பம்பாயி, டில்லி, ஐதிராபாத்— இப்படியே வடக்கேயேதான் இருக்காங்க... அங்கேயும் திடீர்னு சீமைக்குக் கிளம்பிடுவாங்க, ஐயா வோட. போன வருசம்கூட அமெரிக்கா போய் வந்தாங்க. போய்ட்டு, போன மாசி மாதம்தான் திரும்பினாங்க.'

'ம்!' என்று கண்ணகல வியர்ந்தார் மாமா. 'பின்னே போகாம என்ன செய்யிறது? ஐயாவுக்கு ரொம்ப பெரிய உத்தியோகம்- அந்த அந்தஸ்துக்கு ஏத்தாப்பல அம்மாவும் போகத் தானே வேணும்? ராமன் இருக்கிற இடம் அயோத் தின்னு சொல்ற பழக்கம் தான். ஆனாலும் ராமன்மாதிரி அந்தஸ்து இருக்கிறவங்களுக்குத்தான் அந்த வார்த்தை ரொம்பத்தகும். பெரிய ஆபிஸர்னா அதுக்குத் தகுந்தாப் பல அவங்களோட இருந்துக்கிட்டு எத்தினி பேரைப் பார்க்கணும், பேசணும், காரிய மெல்லாம் நிர்வாகம் பண்ணணும்!' என்று உற்சாகமாக, அந்தஸ்து என்று சொல்லும்போதெல்லாம் இரு தோள்களையும் உடலையும் அந்தஸ்தாகவே இப்படியும் அப்படியும் லேசாக அசைத்துக் கொண்டு பேசினார் மாமா.

'இந்தத் தடவை அவசர அவசரமா ரண்டு மூணு மகா நாடுன்னு அவசரமாச் சேதி வந்திச்சு, ஒடனே புறப்பட்டு நாலுநாள் முன்னாலே சீமைக்குப் போனாங்க ஐயா. வரத் துக்கு நாலு வாரம் செல்லும். அம்மாவும் நம்ம கிராமங் கள்ளாம் பார்த்ததேல்லியே. போய்ட்டு வரலாமேன்னேன், சரின்னாங்க.'



'வாங்க, வாங்க. நாங்கள்ளாம் கொடுத்து வக்யணுமே. ஆனா சீமை, கல்கத்தா மாதிரியெல்லாம் இருக்குமா இஞ்ச? பட்டிக்காடு, படிக்காத சனங்க. ஆனா அங்கே இல்லாததும் இங்கே இருக்கும். காவேரி இருக்கு; நல்லா அமுங்கிக் குளிக்கலாம். நல்லா எள எளன்னு காயும் கறி யும் கிடைக்கும். நல்ல பாலு கிடைக்கும்... நிம்மதியா இருக்கலாம்... ஆனா எத்தினி நாளைக்கின்னு நம்ம பையனைக் கேளுங்க...ம்... என் தங்கச்சி பையன். ரயில்வேலே சூப்ரிண்டா இருக்கான். லீவு எடுத்துக்கிட்டு வந்திருக்குறான்' என்று நடுவில் என்னை அறிமுகப் படுத்தினார் மாமா.

'ஐ ஸீ.'

''ம்... அதெல்லாம் நல்லாத்தான் இருக்கும்... காசு மாத்ரம் சேக்கத் தெரியாது.'

அந்த அம்மா சிரித்தாள்.

'ஆரமிச்சிட்டீங்களா, மாமா?'

'சரி அதைச் சொல்லப்படாது அவனுக்கு— எதுக்குச் சொன்னேன்னா, ஒரு வாரமாச்சு வந்து. பையனுக்கு இருப்புக் கொள்ளலே. போகணும் போகணும்னு முனுங்க ஆரமிச்சாச்சு. இன்னிக்கிக் காலமேருந்து.'

'நான் அப்படி அவசரப்படமாட்டேன். நான் நாட்டுப் புறத்திலேயே இப்பதான் காலெடுத்து வைக்கிறேன்' என்று அந்தஅம்மாள் சிரித்தாள். என்னைப்பார்த்து ஆங்கிலத்தில் சொன்னாள்? 'என்ன அழகான கிராமம்! எத்தனை பச்சை! எத்தனை தினுசுப் பச்சை! இந்த நிசப்தத்தைப் பாருங்களேன். நீங்கள் நன்றாக அதைக்கேட்கவே முடியும் போலிருக்கிறதே! எனக்கு கேட்க முடிகிறது. இந்தமாதிரி ஒரு நிமிஷம் உட்காரத்தான் முடியுமா கல்கத்தாவிலேயும்

பம்பாயிலேயும்? என்ன மௌனம்! என்ன மௌனம்! அப்புறம் இவரைப் பாருங்கள். என்னை முன்னேப் பின்னே பார்த்ததில்லை— எவ்வளவு அன்பாக, எவ்வளவு பரிவாகப் பேசுகிறார்! ம்!

என்னமோ, இந்த பஸ்ஸிலிருந்து இறங்கி இந்த மண்ணில் கால் வைத்ததுமே எனக்குப் பிரயாணத் தொல்லையெல்லாம் மறந்து விட்டது. என் மனம் லேசாக, மிதப்பதுபோலிருக்கிறது. அந்தப் பட்சியைப்போல எனக்கு இந்த நீரின் மேலேயே பறக்க வேண்டும்போலிருக்கிறது. அவ்வளவு ஆனந்தமா யிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் மாமாவை எனக்கு மிகவும் பிடித்து விட்டது.' பிறகு அவரைப் பார்த்தாள் அந்த அம்மாள்.

'உங்களைப் பத்தித்தான் மாமா சொல்றாங்க. என்று ஒன்றும் புரியாமல் என்னைப் பார்த்துக்கொண்டு ஆவலாக நின்ற மாமாவிடம் சொன்னேன். 'நீங்கள் எவ்வளவு பிரியமா, ஆதரவாப் பேசறீங்கங்கறாங்க. உங்களைப் ரொம்பப் பிடிச்சிருக்காம்.'

'ரொம்ப நல்லாருக்கே! வராதவங்க வந்திருக்கீங்க, உங்களுக்கு எவ்வளவோ செய்யணும்.'

நான் விசாரித்ததில் அந்த அம்மாளின் கணவர் மத்திய சர்க்காரில் மூவாயிர ரூபாய் சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரி என்றும், ஏதோ தூதுகோஷ்டியில் முக்ய அங்கத்தினராக வெளி நாடுகளுக்குச் சென்றிருக்கிறார் என்றும் ஊகிக்க முடிந்தது.

''அவங்களுக்கு நாடாறு மாசம், சீமை ஆறு மாசம்' என்று முடித்தாள் அவள்.

'என்ன செய்யறது? தேசத்தை ஆள்ற பொறுப்பு முக்கியம் இல்லீங்களா? எங்க மாதிரி நாட்டுப்புறத்துத் தவளைங்களாருந்தா சரி; வீடு வாசல்னு பந்தல் கால்லெ நாக்குட்டி முடங்கிக் கிடக்கறாப்பல கிடக்கிறோம் நாங்க.



அவங்க என்ன செய்ய முடியும்? உலகம் முளுக்க, வீடு; போற இடங்கள்ளாம் வீடு வாசல்னு நெனச்சுக்க வேண்டியதுதான்' என்றார் மாமா.

சொல்லிக்கொண்டே கீழே சாலையிலே வைத்திருந்த பெட்டி படுக்கைகளைப் பார்த்தார். 'ஏலே நல்லமுத்து!'' என்று கிழக்கே பார்த்து ஒரு இரைச்சல் போட்டார்' அப்பால் சாலையில் டீக்கடையிலிருந்து 'வந்திட்டேங்க. என்று குரல் வந்தது. சற்றுக்கழித்து நல்லமுத்துவே ஓடி வந்தான்.

'இதெல்லாம் எடுத்துக்கிட்டுப் போயி நம்ம சாமி வீட்டிலெ கொண்டு வையி. என்னடா முளிக்கிறே—நம்ம சாமிநாதண்டா...இலுப்பக்குடியார் வீட்டு சாமி...கல்கத்தாவிலேந்து வந்திருக்காரு—'

'அடேடே!...வாங்க—இந்த பஸ்ஸிலேதான் வந்தீங்களா? அடையாளமே புரியலே, 'முதல்லே' என்று வியப்புடன் சொல்லிக்கொண்டே பெட்டி படுக்கைகளைத் தூக்கிக் கொண்டான் நல்லமுத்து.

'நான் வர்றேன். அப்பறம் சந்திக்கிறேன்' என்றாள் அந்த அம்மாள்.

'சரிங்க...நல்லா வெந்நீர் போட்டுக் குளிச்சு ரெஷ்ட் எடுத்துக்குங்க. எவ்வளவு தூரம், எத்தினி நாளு பிரயாணம்!

'வர்றேன், வேலு மாமா' என்று சாமிநாதனும் சொல்லிக்கொண்டான்.

மாமா இருவரையும் பார்த்துக்கொண்டே நின்றார்— தெருத் திருப்பத்தில் மறைகிறவரையில்.

'இந்த அம்மாவையும் இவங்க புருஷனையும் இவங்க வீட்டிலெ போயி லேசிலே பார்த்திட முடியுமா? எத்தினி காவல்! எத்தினு சேவகன்! பேட்டியே கிடைக்காது. அதுக்காக, வேண்டியபட்டவங்களை விட்டுக் கொடுக்கறாங்

களா? பாத்தியா? இந்தப் பய சமைச்சுப் போடற பய தானேன்னு ஏதாவது தப்பா கடுமையாப் பேசினாங்களா? என்ன கௌரவமா நடந்துக்கிறாங்க பாரு! பெரிய இடம்னா பெரிய இடம்தான்!' என்று பழைய மாதிரியே தோளையும் தலையையும் 'அந்தஸ்தாக' அசைத்துக் கொண்டே சொன்னார் மாமா.

'மெய்தான், மாமா. எங்க ஆபீசரைப் போய் நான் லேசிலே பார்க்க முடியாது. ஆனா அவங்க வீட்டுச் சமையக்காரனைப் பாருங்க. எங்க ஆபிசிலே இருபது பேரை வேலைக்குக் கொண்டு வச்சுட்டான்—எசமான் கிட்ட சொல்லி' என்றேன்.

'ஏன், நம்ப சாமிநாதன் தான் என்ன? இலுப்பக் குடியார் கும்பலுக்கு அஞ்சு வீடு. அந்த அஞ்சு வீட்டிலெ பொறந்து வளர்ந்த அத்தினி புள்ளேஙகளும் இப்ப கல்கத்தா, டில்லி, பம்பாய் அப்படீன்னு வேலைக்குப்போயி ஆளுக்கு முந்நூறு நானூறுன்னு சம்பாரிக்கிறானுக—எல்லாம் இந்தப் பயலாலதானே? அப்படியில்ல உறவு சனத்துக்கு செஞ்சிருக்கான் பய! இந்த அம்மாவாகட்டும், இவங்க புருசனாகட்டும்—இவன் ஒண்ணு கேட்டான்னா இல்லைன்னு சொல்றது கிடையாதாம். அப்படி ஒரு நம்பிக்கை—ஒரு மதிப்பு ஏற்படுத்திக் கிட்டிருக்கான். பதினாயிரக்கணக்கிலெ வரவு செலவை ஒப்படைச்சிருக்காங்க. கார்கூட இவன் பார்த்து சரின்னாத்தான் வாங்கு வாராம் அவரு. அதெல்லாம் ஒரு ஜாதகம்னு வச்சிக்க. அப்படி'ம்யாண்ணும் வயசும் ஆயிடல்லெ...இருபத்திரண்டு தான் ஆவுது. உன்னைவிடப் பதிமூணு வயசு சின்னவன். ஏழு வருசம் முன்னாடி புறப்பட்டுப் போனான், ஊரை விட்டு. படிப்பு வல்லெ. சமைச்சுப் போட, வீட்டுக் கணக்கு கிணக்கு பார்த்துக்க பம்பாயிலே ஒரு ஆபீசருக்கு ஒரு ஆள் வேணும்னாங்க. இவன் அப்பன் 'போடாலெ'ன்னு இவனை அனுப்பிச்சான். போயி ஏழு வருசத்திலே என்ன பண்ணியிருக்கான், தெரியும்ல? வீடு முளுக்க பிரிச்சு புது



சாக் கட்டிப்பிட்டான். ஆறாயிர ரூவா செலவு, போன வருசம் நாலு ஏக்கரா நெலம் வாங்கிப்பிட்டான், ஏழாயிரத்து இருநூறு ரூவாய்க்கு. கையிலே வேற மூணு நாலு ரூவாரொக்கம் இருக்கும்னு சொல்லிக்கிறாங்க. எல்லாம், ஏழு வருசத்துக்குள்ளாரடா. இருபத்து மூணு வயசுக் குள்ளாரடா, பாத்துக்க! அவன் எம்.ஏ.யும் படிக்கலே, ரயில்லெ சூப்ரிண்டு வேலையும் பாக்கலெ' என்று கொம்பை என்பக்கம் திருப்பினார் மாமா.

'நானும் ஒண்ணு செய்யலாம்னு இருக்கேன், மாமா.'

'என்ன?'

'இந்த வேலைக்குக் கால் கடுதாசை நீட்டிப்பிட்டு' சமையல் வேலை கத்துகிட்டு நானும் கல்கத்தா, டில்லின்னு ஒரு ஆபீசர் வீட்டிலெ போய் உக்காந்துக்கறேன் '

'அது நடக்காதுரா.'

'ஏன் நடக்காது?'

'இடுப்புலே சோமனைக் கட்டிக்கிட்டு, கையாலெ வாயை பொத்திக்கிட்டு நிக்கத் தெரியணும். பெரிய மனுசங்க தயவு வேணும்னா, வீட்டுத் திண்ணையிலே அவங்க உட்கார்ந்திருக்கறப்ப நீ கீழே பந்தல் கால்லெ கண்ணிலெ பட்டதும் படாததுமா அப்படி தள்ளினாப்பல நிக்கிணும். நீ இன்னமே சமையல் பண்ணப் போனாலும் எம்.ஏ. பாஸ் பண்ணின சமையக்காரன்னு மனசிலியாவது சட்டை பூட்ஸெல்லாம் மாட்டிக்கிட்டு நிப்பே. இப்படியெல்லாம் குளைய முடியுமா உன்னாலெ? அதுக்குத் தைரியம் இருக்குமா?' என்று யதார்த்தமாகப் பேசுவதுபோல் கேட்டார் மாமா. பிறகு 'போடா உங்க படிப்பும் நீங்களும்' என்று மதகினின்று எழுந்தார்.

அந்தி மங்கல் கருத்துக் கொண்டிருந்தது. சோலை நிரம்ப கோட்டான் கூவிற்று. காவேரியை நோக்கி நடந்தோம்.

# 2

'அப்படியெல்லாம் குனிஞ்சு குளஞ்சு பாடுபடாட்டி இந்த இலுப்பைக் குடியானுங்களும் இன்னிக்கு இப்பிடி தலை நிமிர்ந்து நாலு பேர் போய்ப் பளகிக்கொள்ளும்படியான அந்தஸ்துக்கு ஒசந்திருக்க முடியுமா?' என்றார் மாமா—கால் மணி நேர மௌனத்திற்குப் பிறகு படித்துறையில் கால் கழுவிக் கொண்டே. இன்னும் அதையே சுற்றி அவர் நினைவு வட்டமிட்டுக் கொண்டிருந்தது போலும்!

'இப்பவும் அப்படி என்ன தலை நிமிந்துக்கும்படியா ஆயிடிச்சு அவங்களுக்கு—அந்தக் கூட்டத்திலே ஒத்தொத்தரையா நினைச்சுப்பாத்தா, அப்படி என்ன தலைநிமிந்துக்கும்படியா இருக்கு அங்கே?' என்று மாற்றுக் கேள்வி போட்டேன்.

'அப்படிச் சொல்லாதே. அவனவன் ஒரு வீடு வாசல்னு சொந்தத்துக்குப் பண்ணிக்கிட்டானா, இல்லியா?' என்றார் மாமா. எப்பேர்ப்பட்ட மகா புருஷனாயிருந்தாலும், திருமாலாக இருந்தால்கூட, பணம் இல்லாவிட்டால் குப்பையில் தூக்கிப்போட்டு விடுவார் அவர். அதைப்பற்றி அவருக்குத் தீர்மானமான முடிவு உண்டு. இந்தக் கொள்கையில் எந்தச் சிந்தனையையும் தத்துவதாதியையும் மண்டையை உடைக்கத் தயார் அவர்.

இலுப்பைக்குடியார் வீடு, என்று ஐந்து வீடுகள், இந்த ஊரில் என்னுடைய மாமாவின் வீட்டுக்குக் கிழக்கே இரண்டு வீடு தள்ளி, சேர்ந்தாற்போல மூன்று வீடுகள். எதிர்த்த வீட்டுக்கு மூன்று வீடு தள்ளி, சேர்ந்தாற்போல ஒரு இரண்டு வீடுகள். இலுப்பைக்குடியார் வீடு என்று ஐம்பது வருடங்களுக்கு முன்னால் ஒரே ஒரு வீட்டுக்குத்தான் பெயர். ஆனால், அங்கே பிறந்தவர்கள் இப்போது இன்னும் நாலு வீடுகளில் விழுதுவிட்டு வேரூன்றி குலப் பெயரை இந்த நாலு வீடுகளுக்கும் சம்பாதித்துக்



கொடுத்து விட்டார்கள். அடையாளம் புரிவதற்காக
மாடி வீடு, பெரிய வீடு, கிணறு வீடு, சுப்பக்கா வீடு என்று
ஊரார் சொல்வது வழக்கம். இந்த சுப்பக்கா வீடுதான்
இலுப்பைக் குடியார்களின் பழைய காலத்துப் பரம்பரை
வீடு. நீளமும் அகலமுமாகப் பெரிய திண்ணைகள். உள்ளே
இருநூறு இலை போடக்கூடிய கூடம், தாழ்வாரம், முற்
றம் எல்லாம் உண்டு. சுப்பக்காவின் பிள்ளைதான் சாமி
நாதன்.

இந்தச் சுப்பக்காவின் கொள்ளுப் பாட்டனார் மகா
சிவபக்தர். தலம் தலமாகச்சென்று சிவன்மீது பலபாடல்
கள் பாடிய மகான் என்பார்கள். அவருடைய புதல்வரான
சாம்பசிவன், அந்தக் குடும்பமே, அந்த ஊரே, சுற்று வட்
டாரமே செய்யாத, கனவில் கூடச் செய்ய துணியாத ஒரு
தொழிலை மேற்கொண்டான், நாலு மைலுக்கு அப்பால்
உள்ள ஒரு ஊரைச் சேர்ந்த நரசிங்கராயனுடனும் அபூபக்
கர் ராவுத்தனுடனும் கூட்டுச் சேர்ந்துக்கொண்டு
தீவட்டிக் கொள்ளைத் தொழிலை மேற்கொண்டான்.
சாம்பசிவன் என்றால் சிரிக்கிற பிள்ளை அழும் என்பார்
கள். முப்பது மைல் சுற்றுக்கு பெரிய பெரிய, நானூறு
ஐநூறு வேலிப் புள்ளிகளை எல்லாம் ஒரு கை பார்த்திருக்
கிறான். அவன், கடைசியில் பிடிபட்டு ஜெயிலுக்கு போ
னான். அவன் சிறையில் இருந்தபோது அவன் பிள்ளைகள்
இரண்டும் இரண்டு தவசிகளுக்குக் கையாளாகப் போனார்
கள். அந்தச் சமையல் தொழில் குலத்தொழிலாக நிலைத்து
விட்டது. அதையும் உள்ளூரில் செய்யவில்லை. பட்டணம்
என்ன, மதுரை என்ன' திருச்சி என்ன என்று எங்கெங்
கேயோ செய்து பிழைத்து வந்தார்கள்.

எல்லாமாக சேர்ந்தால் ஐந்து வீட்டிலும் எட்டு ஆண்
கள், பெண்டுபிள்ளைகளோடு அங்கங்கே பிழைப்பு,
ஆனால் இங்கே ஒவ்வொரு வீட்டிலும் ஒரு விதவை
அக்காவோ, தாயாரோ' கடைசித் தம்பியோ வீட்டைக்
கவனித்துக் கொண்டிருப்பார்கள். ஏழெட்டு மாதங்களுக்

கொரு தடவை கலகலவென்று இருக்கிற முறை ஒவ்வொரு விட்டுக்கும் வருவதுண்டு. பட்டணத்திலிருந்தோ, கொச்சியிலிருந்தோ ஒரு குடும்பம் வரும். குழந்தைக்குத் தலைமுடி, ஊர் அம்மனுக்குப் படையல் என்று செய்துவிட்டு, ஓரிரண்டு வாரம் இருந்துவிட்டுத் திரும்பிவிடும்.

சிறிது வேடிக்கையையும் ஊர் ஆவலையும் தூண்டுகிற குடும்பங்கள்தான் எல்லாமே. ஏனென்றால், இலுப்பைக்குடியார் வீட்டுப் பெண்கள் யாருமே சாதாரணப் புடவையைக் கட்டியிருக்க மாட்டார்கள். ஒரு சாணிலிருந்து இரண்டு சாண்வரை ஜரிகையுள்ள பட்டுப் புடவையைத்தான் பார்க்கமுடியும்; பட்டணங்களில் வருகிற புது மாதிரிப் பட்டுகளையெல்லாம் அவர்கள் உடம்பில் பார்க்கலாம். ஊரில் படிக்கிற தங்கை மகளுக்கோ' மகனுக்கோ மாசத்துக்கு ஒருமுறை இரண்டு பட்டுப் பாவாடைகளோ கால் சட்டைகளோ வராமல் இராது. இவர்கள் சமைக்கிற வீடுகள் எல்லாம் பெரிய இடங்கள், அங்கே போடுகிற மிச்சம் மீதியோ அல்லது போரில் பிடுங்கினதோ?— ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

இலுப்பைக்குடியார் வீட்டு மருமகள்களில் ஓரிரண்டு பேர் பார்க்க எடுப்பாக இருப்பார்கள். அவர்கள் வீட்டிலும் பங்கும் மனையுமாக ஏறிக்கொண்டிருந்தது.

'சங்கரன் தவசி வேலை பாக்கறான். எசமானுக்கு அவன் பேரிலே பிரியம், அவளும் போயி கூடமாட எசமானிக்கு செஞ்சு போடுவா— அதெல்லாம் எத்தினியோ இருக்கும்' என்று மாமா பூடகமாக இந்த ரகசியங்களை எல்லாம் விசாரித்து, பூடகமாகவே வெளிப்படுத்துவதும் வழக்கம்.

பொதுவாக இலுப்பைகுடியார் வீட்டுப் பெண்கள் எல்லாரைப் பற்றியுமே இப்படி ஒரு பேச்சு உண்டு ,சமையல் பண்ணிப்போடறவன் ஊரிலே இப்படிச் செலவழிச்சு ஒரு வீட்டைக் கட்டறதுன்னா, அது என்ன சமையல் மாத்



திரம் பண்ற சாமார்த்யமா?' என்று ஒரு மாதிரியாக இழுத்து விட்டு, கற்பனைக்கு நிறைய இடம் கொடுத்துப் பேசிக் கொண்டிருப்பார்கள் எல்லோரும். மாமாவும் பொடிவைத்துப் பேசுவதிலே ராஜா. ஆனால், கூடவே, ,எப்படியிருந்தா என்ன? இப்ப பாரு, கும்பிக் கவலை கிடையாது. கிணத்து வீட்டுப் பேத்தியை கோயமுத்தூரில் ஒரு மில் மானேசருக்குத் கொடுத்திட்டான். ஏகப்பட்ட சீரு. கலியாணமும் அப்படி நடத்தினான், கச்சேரி, பேண்டுன்னு ரகளை பண்ணிப்டானா? பாதிச் செலவைப் பட்டணத்திலெ இருக்காராமே, ஜட்ஜி— அவரே போட்டு நடத்திட்டாரு...ஜட்ஜி கொடுத்தாருன்னு பொண்ணோட அப்பன் தான் சொன்னானா? இல்லே, பிள்ளை வீட்டுக்காரன்தான் ஏது பணம்னு கேட்டானா? அதையெல்லாம் யார் கவனிக்கறாங்க! அந்தப் பெண்ணுக்கு தனி பங்களாவாம். பெரிய காராம். என்னமோ இந்தப் பயலுகள்ளாம். குசு குசுன்னு பேசிட்டு நிக்கிறானுவ. இவர்களை யாரு கேக்கறா?' என்று மாமா மன்னித்து விடுவார்.

இத்தகைய இலுப்பைக்குடியார் வீடுகளில் முதல் வீட்டைச் சேர்ந்தவன்தான் சாமிநாதன்—சுப்பக்கா மகன்.

சுழியிட்டு ஓடிற்று ஆறு. கிர்கிர் ரென்று கரையிலிருந்த மூங்கில் கொல்லைகள் முனகிக்கொண்டிருந்தன. அந்த நிசப்தத்தில் மாமா விபூதியைப் பட்டையாகப் போட்டுக்கொண்டு முருகாற்றுப்படையை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். வார்த்தைகள் ஓடிச் சிதறுகிற வேகத்தைப் பார்த்தால் அவர் மனது அதில் இல்லை போலிருந்தது. முடித்து, ஒரு கும்பிடு போட்டுவிட்டு 'இந்தப் பயலைப் பாரேன். ஏழு வருசம் ஆகலே போய்! ஓரேடியா ஏறிப்பட்டானே — இவ்வளுண்டுப் பய—அம்! ஆரம்பித்துக்கொண்டே எழுந்தார். நன்றாக இருட்டிவிட்டது. வானம் முழுக்க நட்சத்ரங்கள் முளைத்துக்கிடந்தன.

'பாத்துவா, செவ்வட்டை ஓடுது' என்றார் மாமா.

வேலியோரத்திலும், பாதை நடுவிலும் பளீர் என்று நீலமாக வெளிச்சம் அடித்தது. செவ்வட்டைக்கள்தான் அப்படிவெளிச்சம்போட்டு ஊர்ந்து கொண்டிருந்தன. 'இதுக பாளாப்போக! பாத்தா என்ன அளகா இருக்கு வெளிச்சம்! ப்ளூ ஜாகர்மாதிரி மேலே பட்டுதோ வந்துது ஆபத்து. தோலெல்லாம் பெரு வியாதி புடிச்சாப்பல ஆயிடும்' என்றார் மாமா. இதை அவர் எத்தனையோ தடவை சொல்லிச் சொல்லி, என் மனசிலே பெரிய பீதியைப் பயிர் செய்திருந்தார்.

செவ்வட்டை ஒளியைக் கண்டாலே எனக்கு முதுகில் கொஞ்சம் நடுங்குகிற வழக்கம், பார்த்துப் பார்த்து அடி வைத்து வந்தேன். அங்குமிங்கும் பளீர் பளீர் என்று அடிக்கிற அந்த அழகிய ஒளியைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை.

எவ்வளவு அழகான வெளிச்சம்! ஆனா, கிட்ட ஆண்ட முடியலியே' என்றேன்.

'பதிவிரதைகள்ளாம் அப்படித்தாண்டா இருப்பாங்க. தொட்டியோ போச்சு.'

'ஏன் மாமா, பெரிய வீட்டு சங்கரன் பொஞ்ஜாதி இப்டித்தானே இருக்கா?'

'எலே, மெதுவாகப் பேசுராலெ. இருட்டு-எவனாச்சிம் கேட்டுக்கிட்டு வரப்போறான்...' என்று குரலைத் தாழ்த்திக்கொண்டார் மாமா.

தெருவுக்குள் திரும்பி வீட்டுக்குள் நுழைந்தபோது 'யாரு?' என்றார் மாமா, நடையில் ஒதுங்கிக் கொண்ட உருவத்தைப் பார்த்து.

'நான்தான்.'

'யாரு? சுப்பக்காவா?'

'ஆமாம்.'

'மகன் வந்திருக்கானே! பார்த்தேன்.'



'ஆமா—அதுக்குத்தான் பாலுக்குச் சொல்லலாம்னு வந்தேன். ராத்திரி பால் சாப்பிடாம இருக்கமாட்டாங்களாம், அந்த அம்மா. காலமே சாப்பாட்டுக்கு முன்னாடியே ரண்டு தடவை காப்பி குடிக்கணுமாம். சாயங்காலம் ரண்டு தடவையாம். அதுக்குத்தான் காலமே ரண்டு சேரு, ராத்திரி ரண்டு சேரு, அவங்க இருக்கற வரைக்கும் பால் கொடுக்க முடியுமான்னு கேக்க வந்தேன்.'

'அட. உனக்கில்லாமியா—'

'அதான் கொடுக்கறேன்று சொல்லிச்சு, பர்வதம்,'

'வாயேன், போகலாம்' என்று மாமா அழைக்கவே உள்ளே வந்தாள் சுப்பக்கா.

'இந்தா, சுப்பக்காக்கு நாளையிலேந்து பால் வேணு மாமே' என்று உள்ளைப் பார்த்துக் குரல் கொடுத்தார் மாமா.

'சொன்னேனே—கொடுக்கறேன்னு.'

'சொன்னியா, சரி, சரி, சரி' வா, சுப்பக்கா. உன் மகனைப் பார்த்து ரண்டு வருஷம் ஆச்சில்ல...?ம் எப்படி இருககானாம்?'

'நல்லாருக்கான். எல்லாம் உங்க கை முகூர்த்தம் தான். அவன் வேலைக்குப் போறப்ப வேலு மாமாகிட்ட கைச் செலவுக்கு வாங்கிட்டுப் போடான்னேன். நீங்க கொடுத்தீங்க, நாப்பது ரூவா. உங்க கையி, உங்க மனசு—ஏதோ நல்லபடியா இருக்கான்' என்று சொல்லும் போது சுப்பக்காவின் குரல் தழதழத்து விட்டது.

'அ! என் கையாவது, காலாவது சுப்பக்கா!...அவன வன் லிபி நல்லாருக்கணுமில்ல? உம் மவனுக்கு நல்ல பணிஞ்ச குணம்—அடக்கம், பொறுப்பு எல்லாம் நெறஞ்சிருக்கு; அதெல்லாம் தான் காப்பாத்துதுன்னு வச்சுக்க.'

'இருக்கட்டும், அதுக்காக உங்க கைராசியில்லேன்னு ஆயிருமா?...என்னமோ...அதே கையோட நீங்களே ஒரு நல்ல பொண்ணாப் பார்த்துக்கட்டி வச்சிருங்க.'

'அதையும் செஞ்சிர வேண்டியதுதான்...அவனுக்கு என்ன? நல்ல இடமெல்லாம் வரப்போவுது.'

'நல்ல இடம் எல்லாம் சரி! நாம பாத்துப் பளகின இடமா இருந்தாத்தானே பாங்காயிருக்கும்?'

'ஏன்? நீ யாரையாவது மனசிலே வச்சிட்டிருக்கியா?'

'இருக்கு. நீங்க மனசு வச்சா நடக்கும்.'

'சொல்லு.'

'நம்ம அர்ணாசலம் மவளைத்தான் சொல்றேன்.'

'கப்பக்காரரு பேத்தியா?'

'ம்ம். அதான்.'

'செஞ்சிப்பிடலாம். பொண்ணு லச்சணம், அடக்கம் இருந்தாலும் இன்னும் கொஞ்சம் நல்ல இடமாப் பாத்தா நல்லதில்லியா? அவன் டில்லி, கல்கத்தான்னு போயிட்டுருக்கான், கொஞ்சம் படிச்ச பொண்ணா...'

'ம்' படிப்பு தானா வருது. அங்கங்கே போயி, பளகினாச் சரியாப்பூடுது. எனக்கு என்னமோ இந்த ஆசை ரொம்ப நாளாயிருக்கு.'

'சரி, முடிச்சிப்பிடறேன்' என்று சொல்லிவிட்டார் மாமா.

'அர்ணாசலம் ஒரு போக்கு. நீங்க சொன்னாக் கட்டுப்படுவாருன்னு எனக்கு ஒரு நெனப்பு.'

'கட்டுப்படுவானா! அவனுக்குக் கொஞ்சமாச் செஞ்சிருக்கேனா!'

'ம்.'

'அதெல்லாம் நான் பாத்துக்கறேன், போ...உம் மகனாலே இப்ப பதினஞ்சு குடும்பம் போலப் பிளைக்குது. இத்தனை பேருக்கு வேலை பண்ணி வச்சிருக்கான்—அதுவும் இந்தச் சின்ன வயசிலே. அவன் வயசுப் புள்ளெங்கள்ளாம் படிச்சுப்பிட்டு வேலை வேலைன்னு ஆலாப் பறந்துகிட்டிருக்கு. இந்த வயசிலெ இப்படி உவகாரம் பண்ணியிருக்கான். யாருக்கு மனசு வரும்? அந்தப் பையனுக்குப் பண்ணாம வேற யாருக்குப் பண்ணப் போறேன்?'



'அந்த அம்மாளும் வந்திருக்காங்க இப்ப. அவங்க முன்னாலேயே பண்ணிப்பிடுவோம். மகாலச்சுமி மாதிரி அவங்க ஆளாக்கியிருக்காங்க, இந்தப் புள்ளையை. அவங்களே மகாலச்சிமியா இருந்து வாள்த்தட்டும். அவங்க முன்னாலேயே நடத்திப்பிடுவோம். இந்த வைபோகத்தை.'

'ஜாம் ஜாம்னு நடக்கும். கவலைப்படாதே. உம் மகன் மனசுக்கு எது நடக்காது? இதை முன்னாடி முடிச்சிட்டுத்தான் மறு காரியம், நீ வேணாப் பாரு.'

அது மாமாவின் இயல்பு. பிறர் காரியம் என்றால் தலைப் பொறுப்பாகப் போட்டுக்கொண்டு அலையோ அலை என்று அலைவார். அதுவும் சாமிநாதனுக்கா அலைய மாட்டார்?

மறுநாள் காபியைச் சாப்பிட்டதுமே என்னை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டார். அடுத்த ஊருக்குப் போனோம், அடுத்த ஊர் என்று பெயர்தான் மங்காபுரத்திற்கு. ஆனால் இந்த ஊரின் மேலக்கோடி திருப்பினால் குளம். குளத்தைத் தாண்டினால் ஒரே ஒரு வயல், அதையும் தாண்டியவுடனே மங்காபுரம் கீழ்க்குளம். குளத்தைத் தாண்டினால் தெரு. அடுத்த ஊர் என்பதற்குப் பதிலாக அடுத்த தெரு என்று சொல்ல வேண்டிய இடம். அருணாசலத்தின் வீட்டுக்குப் போனோம். அவர் ஊரில் இல்லை. தங்கைக்கு உடம்பு சரியாயில்லை என்று அவளைப் பார்ப்பதற்காகத் திருச்சிக்குப் போயிருந்தாராம், இரண்டு நாளாகுமாம் திரும்பி வர. ஆகவே இரண்டு நாள் கழித்து வருவதாகச் சொல்லிவிட்டுத் திரும்பிவிட்டோம்.

'மகா உவகாரிடா இந்தப் பய. இதை எப்படியாவது முடிச்சி வச்சிரணும்...பொண்ணு எப்படி?' என்று கேட்டார், மாமா.

'எந்தப் பொண்ணு?' என்றேன்.

'அதான் வாசல்லெ உட்கார்ந்து தேங்காப் பருப்பு கீறிக்கிட்டிருந்திச்சேடா...!'

'அப்பவே சொல்லியிருக்கப்படாது? நல்லாப் பாத்திருப்பேனே.'

'நீ நல்லாக் கவனிக்கிறியா சொல்றியான்னு விட்டுட்டேன். என் தங்கச்சி மகன் எப்படியிருக்கான்னு நான் தான் தெரிஞ்சிக்க வாணாமா?'

எனக்குப் பெண்ணைப் பார்த்த ஞாபகம் இருந்தது. சிலுவையான உடலும் சிவப்புச் சிற்றாடையுமாக உட்கார்ந்திருந்த அந்தப் பெண்தான். களையான முகம். சற்று நீண்ட முகம் சிற்றலை ஓடுகிற தலை—அவ்வளவு தான் நினைவில் பதிந்திருந்தது எனக்கு. மொத்தமாக லட்சணம் என்று சொல்லவேண்டிய பெண்தான் லட்சணக் குறைவில்லை என்று நிச்சயமாகச் சொல்கிற அளவுக்கு நினைவு உதவிற்று.

'ரண்டாயிர ரூபாய்க்கு நகை பண்ணி வச்சிருக்கானாம் அருணாசலம், கலியாணத்துக்குன்னு, என்ன?'

'எப்படியிருந்தாலும் சரி, மாமா. பொருத்தமாயிருக்கும்போலத்தான் படுது.'

'இல்லாட்டி, சுப்பக்கா அப்படி மாஞ்சு போயிடுவாளா? அருணாசலம் ஒரு போக்குத்தான். தோசிப்பய—அப்படி இப்படின்னு ஏதாவது உளறுவான். ஆனா, நான் முடிக்காம விட்டிறப் போறேனா இதை?' என்று சொல்லிவிட்டு, அப்படி முடியாட்டி இத்தினி நாளா முருகாத்துப் படை சொல்றதுக்கு என்ன பிரயோசனம்னு அந்த சுப்பிரமணியனையே ஒரு வார்த்தை கேட்டிரமாட்டேனா?' என்று பேசிக் கொண்டே வந்தார் மாமா.

ஊருக்குள் வந்ததும் நேராக வீட்டுக்குப் போய்விடவில்லை. சுப்பக்கா வீட்டுக்குள் தான் நுழைந்தோம்.



நடையில் போனதுமே 'வாங்க' என்ற குரல் கேட்டது நடையிலுள்ள முன்னறையிலிருந்து வந்தது குரல். திரும்பினோம்.

அந்த அம்மாள் எங்களை வரவேற்றாள். சாய்வு நாற்காலியில் சாய்ந்து கால்களை ஒரு தூணில் உதைத்துக் கொண்டிருந்தவள் விசுக்கென்று எழுந்து நின்றாள்.

'நீங்க உக்காருங்க— நீங்க ஏந்திரிக்கப்படாது' என்றார் மாமா.

'பரவாயில்லை.'

'நீங்க அதிலே உக்காந்தாத்தான்.'

இப்படி அரை நிமிஷச் சண்டைக்குப் பிறகு 'சரி, எல்லாருமே கீழே உட்காந்துடறது' என்று கீழேயே உட்கார்ந்து விட்டாள் அந்த அம்மாள்.

நான் சற்றுத் திகைத்தே போய்விட்டேன். அந்த மேனியையும், நிறத்தையும், முக— உடல் அமைப்பையும், பார்த்துத்தான். குளித்து விட்டுத் துல்லியமானதொரு சேலையை அணிந்திருந்தாள் அவள். நடுவில் எடுத்திருந்த வகிட்டின் இரு பக்கங்களிலும் காட்டருவி மாதிரித் தலை மயிர் அலைந்து நீள விழுந்து கிடந்தது. பளபளவென்று பழத்தோல் வண்ணம். எனக்கு இந்தப் பெரிய மனிதர்கள் ப்ரிஜிடேரிலிருந்து எடுத்து எடுத்துச் சாப்பிடுகிற ஆப்பிளும் ஆரஞ்சும், பாலும் தயிரும் தான் நினைவுக்கு வந்தன. அந்த ஊட்டம் இல்லாவிட்டால் இந்த மேனி ஏது? கையில் தான் என்ன குழைவு சரிவு! உள்ளங்காலில்கூட அழுக்குப் படாத ஒரு பளபளப்பு. நான் காலைப் பார்த்ததைக் கவனித்ததும் அவள் தலைப்பால் அதை லாவகமாக மூடிக் கொண்டாள்— அவளுக்கு நேற்று மாலை முப்பத்தெட்டு வயது மதிப்புப் போட்டேன். இப்போதோ ஒரு மூன்று வயது குறைந்தேயிருந்தது.

'ராத்திரி நல்லாத் தூங்கினிங்களா?'

'நல்லாத்தான் தூங்கினேன்.'

'இதென்ன, பளம் புஸ்தகங்களாயிருக்கே? மீனாட்சி அம்மைக்குறம், பாரத வசனம், அல்லி அரசாணிமாலை—' என்று நாற்காலிக்குப் பக்கத்தில் வைத்திருந்த அடுக்கைப் பார்த்தார் மாமா.

'இந்த ஊருக்கு வந்தா இதைத்தான் வாசிக்கணும். நம்ம சாமியோட தாயாரு 'உனக்குப் பொழுதே போகாது, இதுங்களை வேணும்னா வாசின்'னு கொண்டு வந்து வச்சாங்க. இந்த மாதிரி நல்லதெல்லாம் அங்கே எங்கே கிடைக்கப் போவுது? இதுதான் புஸ்தகம். எழுத்திலேதான் என்ன அழகு! என்ன வேகம்! குழந்தைக்கூடப் புரியறாப் பல ஒரு நேர்ப் பேச்சு... இத பாருங்க, இன்னும் இது மாதிரிப் பழசெல்லாம் எனக்கு வேணும் — நீங்கதான் தரணும்.

'அதுக்கென்ன? எங்க வீட்டிலெ இருக்கறதெயெல்லாம் கொண்டுவந்து போட்டுப்பிடறேன். நீங்க அறிவாளி, உங்களுக்கு இதெல்லாம் எப்பேர்ப்பட்ட புதையல்னு தெரியுது, இந்த ஊரிலேகூட இப்ப இதையெல்லாம் திரும்பிப் பார்க்க ஆள் இல்லாமல் போயிருச்சே. ஆங் காலம் என்ன வேகத்தில்லே போவுது, பாருங்க.'

'ஆமாம்— உங்களுக்கு என்ன வயசு?' என்றாள் அவள் திடீர் என்று.

'என் வயசா? இந்த ஆனிக்கு அறுவது முடிஞ்சிரிச்சி.'

'எனக்கு இந்தப் புரட்டாசிக்குத்தான் நாப்பது முடியப் போவுது. உங்களுக்கும் எனக்கும் இருபது வருஷம் வித்யாசம், உங்க மகளை, 'வாங்க போங்க'ன்னு தான் நீங்க கூப்பிடுவீங்களா?'

'அதுக்காகவா!... நல்லாருக்குது! வயசாயிடிச்சின்னா நான் பெரியவனாப் போயிருவேனா! மடத்தவளை நான்... நல்லாருக்கே நீங்க சொல்றது!'



'என் பேரு, கமலம்; நீங்க என்னை 'கமலம்; வா—போ'ன்னுதான் கூப்பிடணும். இல்லாட்டி உங்களை உள்ளே விடமாட்டேன்' என்று சிரித்தாள் கமலம்.

ஐயையோ,... நீங்க சும்மா இருங்க, கிடக்கு...காப்பியெல்லாம் ஆச்சா?' என்று பேச்சைத் திசை மாற்றினார் மாமா.

கமலத்தோடு அரை மணி பேசுவதற்குள் எனக்கே இரண்டு மூன்று புத்தகம் வாசித்துவிட்டாற்போலிருந்தது. ஜெட்விமானப் பயணத்தில் ஏற்படுகிற கிளர்ச்சி, லண்டன் வாழ்க்கை, வடநாட்டு மனிதர்கள், ஐரோப்பாவில் உள்ள பன்றிப் பண்ணைகள்— என்று தான் கண்ட அனுபவங்களையெல்லாம் பேசுகிறவாக்கில் சொல்லிக் கொண்டே போனாள் அவள். எதையும் கூர்ந்து நோக்கிப் பதித்துக் கொள்கிற சுருக்கு, எதிராளி பேச்சில் ஒரு வார்த்தை விடாமல் கேட்டு ஞாபகம் வைத்துக்கொள்கிற புத்தி, தடங்காத பேச்சு, அதை எதிராளி ஏற்றுக் கொள்ளும்படியான நயமும் உறுதியும்— இவ்வளவும் அவளிடம் நிறைந்திருந்தன. ஊரில் வயல் எல்லாம் பார்த்து விவசாயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசை அவளுக்கு. நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஜன்னலில் வந்து எட்டிப் பார்த்துச் சிரிக்கும் குழந்தைகளைக் கூப்பிட்டு ஒரு பெப்பர் மிண்டைப் கொடுப்பாள். பண்பட்ட பெரிய மனுஷி. இன்று உள்ள பல பெரிய மனிதர்களையெல்லாம் தன் கணவனுடன் சந்தித்திருக்கிறாள். கிராமத்துவீடுகளின் அமைப்பு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆரோக்யத்துக்கு மட்டுமில்லாமல் இந்த வீடுகள் விருந்துகளுக்கும், பந்து ஜனங்கள் வந்து வசதியாகத் தங்கள் வீடென மதித்துத் தங்குவதற்காகவும் கட்டப்பட்டவை என்றும், நம்முடைய முன்னோர்களின் வாழ்க்கையில் தம்மைவிடப் பிறர் நலம்தான் தட்டோங்கி நின்றதென்றும் அவள் கூறியதைக் கேட்டு மாமாவுக்குப் பரவசமாகப் போய் விட்டது. 'ஏ அப்பா, நீங்க எப்படியெல்லாம் பேசறீங்க!

நானும் பெரிய மனுஷங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனா, இவ்வளவு ஒரு ஒரு... ஒரு இதோட, நான் பார்த்ததில்லே' 'இது'விலேயே தன் மெய் மறதியைத் தெரிவித்தார் அவர்.

'ஆரமிச்சிட்டீங்களா? என்று சற்றுக் கோபித்துக் கொண்டாற்போலத் தொடங்கினவள், 'அட சாமி வந்திட்டானே!' என்று நடையைப் பார்த்தாள்.

சாமி ஒரு பை நிறையச் சாமான்களுடன், கையில் சுதேசமித்திரன் பத்திரிக்கையோடு வந்து நின்றான்.

'எங்கே போய்ட்டு வரே, சாமி?'

'அக்கரைக்கு மாமா.'

அக்கரையிலும் மஞ்சக்காடுதான் இந்த ஊருக்குப் பட்டணம். கடைகண்ணி, நெல் மிஷின், தபாலாபீஸ் — எல்லாவற்றுக்கும் அங்குதான் போகவேண்டும்.

'ஐயா வியன்னாவிலே இருந்தாங்களாம், முந்தாநத்து. இன்னக்கி ஸூரிச்சுக்குப் போறாங்களாம்— பேப்பரிலே வந்திருக்குது' என்றான் சாமி.

''எங்கே' என்று ஆவலோடு கணவனையே கையில் வாங்கிக் கொள்வதுபோல் பத்திரிகையை வாங்கிப் படித்தாள் கமலம். 'ஆமாம், இன்னிக்கி ஸூரிச்சிலேதான் இருப்பாங்க. நாம இங்கே காவேரி டெல்டாவிலே இருக்கோம். அவங்க பனிமலைகளையெல்லாம் பாத்துக்கிட்டு, கம்பளிச் சட்டையைப் போட்டுக்கிட்டிருப்பாங்க' என்று இரண்டு மூன்று தடவை செய்தியை வாசித்தாள்... 'இங்கிலீஷ் பேப்பரே கிடைக்கலியா?'

''இல்லேம்மா. சந்தாக்காரங்களுக்குத்தான் சைக்கிள்ளே நேரிலே கொண்டுவந்து கொடுப்பாங்களாம். ஒரு மாசத்துக்கு பணம் கட்டிட்டு வந்திருக்கேன். நாளையிலேந்து போடறேன்னிருக்கான்.''



சரி போடட்டும். சாமி, இவங்க வந்து அரைமணியாச்சு, நான் ஒண்ணுமே கொடுக்கலெ, நான் பேசிப்பேசி இவங்க காது நோவெடுத்திருக்கும்.'

'என்ன ...என்ன...என்ன!' என்று குறுக்கே விழுந்தார் மாமா.

'ஏதாவது சாப்பிடக் கொண்டா சாமி!'

'இதோ' என்று ஒரு கணத்திற்குள் ஒரு தட்டில் அயல்நாட்டு பிஸ்கட்டுகளில் பத்துப் பதினைந்து நிரப்பிவந்து எங்கள் முன்னே வைத்து மரியாதையாக ஒதுங்கி நின்றான்.

'நீ போய்க் குளி, சாமி.'

'சரி' என்று கிளம்பிவிட்டான் அவன்.

'நம்ம சாதிக்கு இந்த மாதிரி நல்ல மனுசங்க கிடைச்சிங்களே, அதை நெனச்சுதான் நான் சந்தோஷப்பட்டுக் கிட்டிருக்கேன்' என்றார் மாமா.

'எங்களுக்கும் சந்தோஷம்தான். நல்ல அடக்கம், சூரத்தனம், நம்பிக்கை-இந்த மாதிரி ஒரே ஆள்கிட்ட எல்லாம் சேந்து இருக்கறது கஷ்டம். இப்ப அவன்தான் எங்களுக்கு எல்லாம் அவன் இல்லாம ஒண்ணுமே நடக்கிறதில்லெ. அந்த மாதிரிப் பண்ணிப்பிட்டான்' என்றாள் கமலம்.

'ஏதோ ஆண்டவன் வெளிச்சம் காமிச்சுப்பிட்டான். அவன் அம்மாளுக்கு இருக்கற ஆசையும் நிறைவேறிடிச் சின்னா நிம்மதியாயிருப்பா. நீங்க திரும்பிப் போறதுக் குள்ளாரவே அவனுக்கு ஒரு கலியாணத்தையும் முடிச்சிப் பிட்டாத் தேவலாங்குது. அது எல்லாம் உங்க முன்னாடியே நடக்கட்டும்.'

'கலியாணம் பண்ண வேண்டியதுதான். ஆனா இருபத்திரண்டு வயசுக்குள்ளார கலியாணம் பண்ணி யாரு என்னத்தைக் காணப் போறாங்க? ஓட்டை பக்கெட்டிலே தண்ணி ரொப்பறாப்பல சம்பாரிக்கிறதெல்லாம் குடும்பத்

துக்கே செலவாகிக்கிட்டிருக்கும். நல்லா சம்பாரிச்சு கொஞ்சம் காசை மிச்சப்படுத்திக்கிட்டு நிமிர்ந்த அப்பறம் அதைப்பத்தி யோசிக்கலாம்னு எனக்குத் தோணுது.'

'எனக்கும் அப்படித்தான் நெனப்பு. ஆனா, என்னமோ சுப்பக்கா சொன்னா நேத்து ராத்திரி சொன்னேன்.

இவ்வளவு சின்ன வயசிலே கலியாணத்தைப் பண்ணினா, அந்த பொண்ணுக்குத்தான் என்ன சுகம்? இவனுக்குத்தான் என்ன சுகம்? சடசடன்னு நாலு குழந்தையைப் பெத்துப்பிட்டு, அது இருபத்தஞ்சு வயசுக் குள்ளே அப்பாடா அக்காடான்னு கையும் காலும் ஓஞ்சு முப்பது வயசுக்குள்ளே மூப்பை எட்டிப் பாக்க ஆரமிச்சிடும். இவனும் கவலையைக் கண்ணிலியும் மனசிலியும் சுமந்துக்கிட்டு அலையணும்'

'லட்சத்திலே ஒரு வார்த்தை! ஆனா இந்தப் பட்டிக் காடுங்களுக்கு அது எங்கே தெரியுது?'

'நீங்கள்ளாம் வயசானவங்க, அனுபவம் உள்ளவங்க. நீங்கதான் சொல்லணும்...என்ன, உங்க தங்கச்சி மகன் பேசவே மாட்டேங்கறாங்களே, ரொம்ப சங்கோசக்காரர் போலிருக்கு.'

'எனக்கு எப்பவும் கேக்கறதுதான் பிடிக்கும், பேசினா...'

'பேசினா?'

'என் சாயம் வெளுக்கிறதை நானே பாத்துக்கிட்டிருப்பேனா?''

'ஏம்பா, பொல்லாதவராயிருக்காரே!' என்று என் உத்தியோகம், வீடு, எல்லாவற்றையும் விசாரிக்கத் தொடங்கி விட்டாள் கமலம்.

'பொதுவாப் பிளைக்கிற பிள்ளை இல்லே. ஏதாவது கேட்டா, என்னென்னமோல்லாம் பேசறான். பணமி



ருந்தா ஒரு தெம்பு, மனசிலே ஒரு பலம். உன்னைப்போய் கொள்ளையடிக்கச் சொல்லலே. லஞ்சம் வாங்கச் சொல்லலே. மாசம் ஒரு அம்பது ரூவா மீறுடா'ங்கறேன். அம்பது ரூவா மீக்கறது கிடக்கட்டும். மாசம் அம்பது ரூவா கடன் வாங்கறானே—அதைப் பண்ணாம இருந்தாப் பத்தாதா?... நான் சொல்றது இப்ப தெரியாது. கொஞ்சம் வயசாச்சினா இப்ப மாதிரி வேலை செய்ய முடியாது. அப்ப என்ன செய்வோம்னு நெனச்சுப் பாக்கணும், நீ பிஞ்சின் வாங்கறப்ப பாதி காசுதான் வரப்போவுது. அப்ப என்ன செய்வே? அதுக்குத்தான் ஒரு வீட்டைக் கட்டிப் போட றாங்கறேன். ஹ்ம், எங்கே?' என்று அலுத்துக்கொண்டார் மாமா.

'சர்க்கார் வேலையிலே பூந்தமோ, ஆறம்பத்திலெ வாங்கற சம்பளம்தான் கடைசி வரைக்கும். அறுவது ரூவா சம்பளத்திலே நுளஞ்சேன், பதினஞ்சு வருசத்துக்கு முன்னாலே, இப்ப முன்னூறு ரூவா வருது. அந்த அறுபது ரூவா மதிப்புத்தான் இதுக்கு. நான் ரிடயராறப்ப அறு நூறு ரூவா வாங்கறேனோ என்னவோ. அப்பவும் அந்த அறுபது ரூவா மதிப்புத்தான் அதுக்கு. சர்க்கார் வேலைக்கு அதுதான் ராசி. ஜனங்களுக்கு சேவை பண்ற சர்க்காரிலே ஒரு ஆளாயிருந்துக்கிட்டு, இதை ஒரு குறைன்னு சொல்ல லாமான்னு சந்தேகமாயிருக்கு' என்று நான் விளக்கியது மாமாவுக்குப் பிடிக்கவில்லை.

'நல்லா, வாகிளியப் பேசத் தெரியுது. இந்த சாமர்த்யத்தை நாலு காசு மீக்கறத்திலே காமிக்கலாம்' என்று எழுந்தார் மாமா. 'ஒரே ஒரு சந்தோசம்; புள்ளை ஊருக்கு வரத்துக்காவது காசில்லாம பாஸ்லெ வந்துப்பிடறான். சவாரிச் செலவு மிச்சம்...சரி, அப்ப வர்றோம்.'

'வாங்க' என்று கமலமும் எழுந்தாள்.

'நம்ம வீட்டிலே ஒரு நாளைக்குச் சாப்பாடு வச்சுக் கணும்.,

'உங்க வீட்டிலே சாப்பிடாமியா?'

எனக்கு வெகுநேரம் வரையில் அவள் பேச்சு என் உணர்வைத் தாக்கின இனிமையை மறக்க முடியவில்லை. இந்த உலகத்தில் அழகாக இருக்க என்றேசிலர் பிறந்திருக்கிறார்கள். இவர்கள் பேசுவது அழகு. செய்வது அழகு. நடப்பது அழகு. கையைத் தூக்குவது அழகு' ஒவ்வொரு அசைவும் அழகுதான். எதையும் மனதில் வாங்கிக்கொள்ளும்போது, அதிலே ஒரு தனித் தன்மை: தனக்கென்று ஒரு தனிப்போக்கு. ஆனால் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய போக்கு, என்ன வந்தாலும் நிதானம் இழக்காத ஒரு பெருமிதம் —உணர்ச்சி பொங்கி அலை மோதாத ஒரு அமைதி. வெகுகாலப் பயிற்சியில், வெகுகாலத் தவத்தில் வரவேண்டிய சொத்துக்கள் இவை. அந்தப் பயிற்சிக்கு வசதி கொடுத்திருப்பது எது? பணமா? அல்லது எப்போதும் எல்லோரும் வந்து தன்னை வணங்கி மரியாதை செய்ய, தான் யாரையும் அண்டி நிற்க வேண்டிய தேவையில்லாமல் வாழ்க்கை நடத்த உதவியிருக்கிற நிலையா?— இல்லை, இப்படியும் சொல்ல முடியவில்லை. அந்தப் பதவியும் பணமும் பலபேரைப் பறைத் தம்பட்டமாக அடித்திருக்கின்றன. படைப்புச் சக்திக்கு ஏதோ, எப்போதோ தோன்றின நல்ல புத்தியின் விளைவாகத்தான் இருக்க வேண்டும் இது.

## 3

'சுப்பக்காவானா அப்படிச் சொல்றா; இந்தக் கமலத்தம்மாவானா இப்படிச் சொல்றாங்க, என்ன செய்யலாம்? என்று இரண்டு கட்சிகளுக்கும் இசைவாக மாறி மாறி வாதம் செய்து கொண்டேயிருந்தார் மாமா. 'பெத்தவளுக்கு மஞ்சவேட்டியும் மங்கிலியமுமாப் பாக்கணும்னு இருக்கு. வளத்தவங்க 'விவேகத்தோட வளரட்டும். வேருனிக்கட்டும்கறாங்க...ம் என்று மூன்றுநாள் குழம்பினார். 'உனக்கென்ன தோணுது?, என்று என்னைக் கேட்டார்.



நான் என்னத்தைச் சொல்லப் போறேன்! நான் செல்லப்பிள்ளை. உலகம் தெரியாதவன். இரண்டு பேர் சொல்லுகிறதிலும் நியாயம் இருக்கிறது என்று தொல்லறிவாளர் கையாளும் நடுநிலையைத் தழுவிக் கொண்டேன் பரம்பொருள் ஒன்றில்தான் உண்மை என்பது இருக்கிறது. அதைத் தவிர மீதியெல்லாம் துவைதம்தான். இரண்டுதான். இரண்டுமட்டுமில்லை. இரண்டும் சரி, இரண்டும் நியாயம்! பாபத்தைப்போல் புண்ணியமும் தீயது. இல்லாவிட்டால் 'பாப புண்யங்களிலிருந்து என்னை விடுவி' என்று ஏன் தொண்டர்கள் அழவேண்டும்?

மூன்று நாள் குழப்பிவிட்டு நாலாம் நாள் காலை, மறுபடியும் அருணாசலத்தைப் பார்ப்பதற்காக என்னை அழைத்துக் கொண்டு போனார், மாமா. நடுவில் சுப்பக்கா தினம் ஒருமுறை வந்து 'போனியா? போனியா?' என்று நச்சரித்துப் போய்விட்டாள்.

பேச்செடுத்ததும் மாமாவையே தோற்கடிக்கும்படியான ஒரு எகத்தாளப் புன்னகை பூத்தார். அருணாசலம், 'தரையிலே கிடந்தவங்க பாயிலே ஏறவேண்டியதுதான். இருந்தாலும் இலுப்பைக்குடியார் கும்பலுக்காக நீங்க!, வந்தீங்க பாருங்க-போயும் போயும் நீங்க!' என்றார் அவர்.

'போயும் போயும் நீங்கன்னு இப்ப சொன்னியே, அதைச் சொல்லு மறுபடியும், இவனுக்குக் கொள்ளுப் பாட்டன் தீவட்டிக் கொள்ளையடிச்சான், நமக்குத் தெரிஞ்சிருக்கு. ஆனா நம்ம முப்பாட்டனுக்கு முப்பாட்டன் எப்படியிருந்தான்? அவன் கொள்ளைக்காரனா, கர்ணப் பிரபுவா, இல்லை, பைத்தியமா, சித்தா. சொல்லேன். நானும் தெரிஞ்சுக்கறேன்' என்று மடக்கினார் மாமா.

'......'

'எம் முப்பாட்டனுக்கு முப்பாட்டன் பேருகூட எனக்குத் தெரியாதுப்பா தெரிஞ்சா சரி. இந்தப் பயலோட

கொள்ளுப் பாட்டன் கொள்ளையடிச்சான். ஆனா அவனோட அப்பன் காலிலே சைவக்குலம் முளுக்க விளுந்து கும்பிட்டுது. அவன் பாடின பாட்டுக்கூட ஒண்ணு ரண்டு சுப்பக் காபாடிக்கிட்டிருக்கிறாளா, இப்ப! இதிலே எது தத்துவம்—எது மெய்யி?'—மாமாவுக்கு இந்தத் தந்திரம் எல்லாம் அற்றுபடி. திடீரென்று ஒரு பெரிய வார்த்தையாகப் போட்டு, சாதாரண வாதப் பிரதிவாதத் தரத்துக்கு மேலே பேச்சை உயர்த்திவிடுவார்—உயர்த்துவதுபோல் பொடி ஊதுவார்.

'சொல்லேண்டா, அருணாசலம். இப்ப இந்தப் பயகிட்ட பொட்டிச் சாவி முதக்கொண்டு கொடுத்துப்பிட்டு ஒரு பெரிய இடத்துக் குடும்பம் விசாரமில்லாம பொளுதை ஓட்டிக்கிட்டிருக்கு. அவுங்களுக்கு இவன் பாட்டனைப் பத்தித் தெரியுமா? அட, அப்படித்தான் தெரியட்டும், அதுக்காக சாவியைப் புடிங்கி வச்சிரப் போறாங்களா? அவங்களுக்குத் தெரியாதா, சேத்திலே அல்லி பூக்குதுன்னு. என்னடா பேசாம இருக்கறே—ஏய் அர்ணாயலம்!''

'ஏன் மாமா?'

'இப்படியே உக்காந்திருந்தா? நான் சொல்றது காதிலே உளுதா, இல்லியா?'

'உளுது மாமா.'

'அடுத்த வருசம் அவங்களோட சீமைக்கு என்ன சீனா என்ன, சப்பான் என்ன, சிங்கப்பூர் என்னன்னு சுத்தப் போவான் இவன். பாடிகார்டு மாதிரி வச்சிக்கிட்ருக்காங்க. திடீர்னு உம் பொஞ்ஜாதியையும் அளச்சிட்டு வாடான்னு சொன்னாலும் சொன்னதுதான் இந்த எலந்துார் களர் மண்ணிலே பொறந்த எந்தப் பயலுக்குடா இதெல்லாம் கிடைக்கப்போவுது?...இத பாரு...உலகம் எப்படி எப்படியெல்லாமோ மாறிக்கிட்டு வருது, நீ என்னமோ இஞ்ச உக்காந்துக்கிட்டு காளாஞ்சேரி கைலாசய்யரு மாதிரி மாரைப் பாத்துக் கிட்டிருந்தா, தானா வந்த அதிர்ஷ்டம்



ஓடிப்போயிரும். அப்புறம் உம்பாடு' என்று வளைத்து வளைத்து எல்லாப்பக்கங்களிலிருந்தும் தாக்கினார், நெருக்கினார், மடக்கினார், மாமா.

அருணாசலம் இன்னும் பேசவில்லை.

'நான் இன்னக்கி முடிவாச்சொல்லிப்பிடறேன்னு சுப்பக்காகிட்டச் சொல்லிட்டு வந்தேன். அந்த அம்மா கிட்டவும் சொல்லிப்பிட்டேன். உம்மக நேத்து பேயம் பளச்சிப்பை எடுத்துக்கிட்டு அத்தை வீட்டுக்குக் கொடுக்க வந்திருந்தா. அப்ப அந்த அம்மா அது வாசலோட போறதைப் பார்த்து அப்படியே ப்ரமிச்சுப்பூட்டாங்க. யாரு இதுன்னாங்க. நான் சொன்னேன், இந்த மாதிரி நம்ம சிநேகிதன் மகதான்னு 'ஏ அப்பா!'ன்னாங்க. என்னான்னேன். பட்ணத்துப் பொண்ணுக்கெல்லாம் இந்த மாதிரி லச்சணம் எங்கே இருக்கப் போவுதுன்னாங்க பாரு—நான் அப்படியே அசந்து போய்ட்டேன்' என்று மாமா வாய் போனவாறு புளுகத் தொடங்கினார். அருணாசலத்தின் பிகு துவண்டுவிட்டது.

'எதுக்கும் அவக்கிட்டவும் ஒரு வார்த்தை கேட்டுப் பிட்டா நல்லதுன்னு நெனக்கிறேன்' என்றார் அவர்.

'யாருகிட்ட?'

'வீட்டுக்காரி கிட்டதான்.'

'நல்லா...நல்லாக் கேளு—மொதல்லே கேளு.'

அருணாசலம் உள்ளே போனவர், அரை மணியாகியும் வெளியே வரவில்லை. மாமா கற்றுக் கொடுத்த அத்தனை சாமர்த்யத்தையும் அங்கு காட்ட வேண்டிய அவசியம் வந்ததோ என்னவோ?

அரை மணி ஆயிற்று. அதன்பின்பே அருணாசலம் வந்தார். அவர் பெண்சாதியும் மலர்ச்சியும் நாணமும் புன்னகையுமாக வந்து கதவுப் பக்கம் நின்றாள்.

'இவங்க சொன்னா, நல்லா யோசிக்காமியா சொல்லு வாங்க? ஆனா அதையும் ஒரு வார்த்தை கேட்டுப்பிட்டாத்தேவலாம், இல்லையா?' என்று மாமாவுக்கு ஒரு பாராட்டோடு தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டாள் அவள்.

'அது வாணாம்னா நான் சொல்லப்போறேன்? நல்லாக்கேளுங்க. குடித்தனம் பண்ணப்போறது அதுவா, நாமளா? நல்லாக் கேளுங்க!'

அருணாசலத்தின் மனைவி உள்ளே தளர்நடையாகப் போனாள். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் திரும்பி வந்தாள்.

'அது என்னாங்க. நமக்கு மாறாச் சொல்லப் போவுதா?' என்றாள்.

'பலேடாய்ய!' என்று எழுந்தார் மாமா.

'அருணாசலம்! பணம் கிணமெல்லாம் ரெடி பண்ணி வச்சுக்க, நான் வெள்ளிக்கிழமை காலமே வறேன்' என்று சொல்லிவிட்டுப் படியிறங்கினார்.

வீட்டுக்கு வந்ததும் மனைவியைக் கூப்பிட்டு சுப்பக்காவைக் கூட்டிவரச் சொன்னார்

'சுப்பக்கா, உன் கவலை தீந்துது.'

'என்ன?'

'அருணாசலம் சரின்னு சொல்லிட்டான்.'

'சரின்னிட்டாரா!'

'இதோ, கேளேன், இவனை? அப்படியே பாக்குவட்டியிலே வச்சில்லே அவனை நெருக்கினேன்!'

'என்ன சொன்னாரு?'

'அதெல்லாம் இப்ப சொல்லிக்கிட்டிருக்கணுமா? நான் இத்னி நாளிபேசினது பத்தாதா? காரியம் பளம். பாக்கு வெத்திலை மாத்தறதுக்கு ஏற்பாடு பண்ணு...ம்...போ'



என்று செல்லமாக அதட்டினார் மாமா. உடனே 'இரு' என்று எல்லாவற்றையும் சொல்லவும் சொல்லிவிட்டார்.

அவள் போன அரை மணி நேரத்திற்கெல்லாம் சாமிநாதன் வந்தான்.

'என்ன மாமா இது? கூத்துக்கட்டி அடிக்கிறீங்க?' என்று பதிச்சிரிப்பும் பாதி வேதனையுமாக வரும்போதே வேகமாக வந்து நின்றாள்.

'சரிடா சரி கலியாணம்ல வருது! சிரிப்பு வராது உனக்கு?'

'கலியாணச் சிரிப்பா இது! நீங்க பாட்டுக்குப் போயி யாரையும் கலக்காம பேசிட்டு வந்திட்டீங்களே?

'ஏண்டலெ, நான் இன்னும் உங்க அம்மாகிட்டவே முளுச் சேதியும் சொல்லலியே.'

'எல்லாம் சொல்லிச்சு அது!'

'என்ன சொல்லிச்சு?'

'எல்லாம் தான்.'

'பின்னே பேசாம இரு.'

'நீங்க யாரைக் கேட்டுக்கிட்டுப் போயிப் பேசினீங்க?'

'எலெ! என்னடா து?'

'நான் இன்னும் அஞ்சு வருசத்துக்குக் கலியாணங்ற பேச்சே எடுக்கப் போறதில்லே தெரியும்ல?'

'அஞ்சு வருசம் என்னடா! அறுபது வருசம்னுதான் சொல்லேன், அஞ்சு வருசம் என்னடா கணக்கு?'

'இப்ப ஐயாவுக்கு ரொம்பப் பொறுப்பான, கஷ்டமான வேலை. சர்க்கார்லே இன்னொரு லாக்காவுக்கு அவரைக் கொடுத்திருக்காங்க. வருசத்திலெ ஆறு மாசம், ஒம்பது மாசம்னு அவரு சீமைக்கும் அமெரிக்காவுக்குமாப்

போயிட்டிருக்காரு. இன்னும் அஞ்சு வருசத்துக்கு இந்த வேலை பாக்கியிருக்கு. அதுவரைக்கும் வீட்டுக் காரியம், கணக்கு வளக்குன்னு என்னைக் கவனிச்சுக்கச் சொல்லி யிருக்காரு. எனக்கு மூச்சு விடநேரமில்லெ. வாயிலே ஈ பூந்தது தெரியாம அலைஞ்சிக்கிட்டிருக்கேன். இந்த அஞ்சு வருசத்துக்கு நான் கலியாணம், குடும்பம்னு ஒண்ணும் நினைக்கிறதுக்கு இல்லெ, அப்புறம் அவங்க வச்ச நம்பிக்கை, பொறுப்பு எல்லாம் என்ன ஆகும்?'

'அதுக்கும் இதுக்கும் என்னடா?'

'மாமா, உங்களுக்குத் தெரியாது. அதுக்கும் இதுக்கும் என்னன்னு கேட்டுட்டுப் போற சங்கதியில்லே இது.'

'எலே, நானும் கணக்கு வளக்கெல்லாம் பார்கறவன் தாண்டா.'

'மாமா, இது வேற, உங்களுக்குச் சொன்னாப் புரியாது.'

'எனக்காப் புரியாது?'

'எனக்கான்னா? இப்ப உங்களுக்குப் புரிஞ்சதெல்லாம் எனக்குப் புரியுமா? நீங்க பேசினா இந்த ஊர்க் குடிபடை எல்லாம் கேக்குது. நான் சொன்னாக் கேக்குமா? மத்த வங்க சொன்னத்தான் கேக்குமா? ஏன்னு கேக்க முடியுமா இதிலெ? ஒருத்த ஒருத்தருக்கு ஒரு சாமார்த்தியம், ஒரு வேலை... அந்த மாதிரித்தான் எனக்கும்.'

'அதனாலெ'

'இப்ப கலியாணப் பேச்சே பேசாதீங்கங்கறேன்.'

'நெசந்தானா?'

'பின்னே பாரேன்' என்று என்னைப் பார்த்தான் சாமிநாதன், 'இவங்க பாட்டுக்கு என் காதிலெ சேதியையே போடாம போயிட்டு, இப்படிக் கோவிச்சுக்கிட்டுப் பாக்கறாங்களே— நீங்கதான் சொல்லுங்கண்ணா.'



'ஏண்டால, இதுக்காவா நான் ரண்டு மூணு நடை அலஞ்சேன்?'

'நீங்க முன்னாடியே என்னைக் கேட்டிருக்கணும்.'

மாமாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. 'சரி என்று எழுந்து வேகமாக நடந்தார். சுப்பக்கா வீட்டின் நடை அறைக்குள் நுழைந்தார். கமலத்தம்மாளையே கேட்டு விட்டார்:

'நான் எல்லாம் பேசிட்டுவந்தப்புறம், சாமிநாதன் இப்படிச் சொல்றானே?'

'இப்ப கலியாணம் பண்ணிக்கப்போறது அவன்தானே? அவனையும் ஒரு வார்த்தை கேட்டிருக்கவாணாமா நீங்க?'

'நீங்களும் இப்படியே சொல்றீங்களே?'

'பின்னே வேற என்ன சொல்லட்டும்?'

'கலியாணம் பண்ணிக் குடித்தனம் பண்ண முடியாம அவ்வளவு வேலையா இவனுக்கு வச்சிட்டுப் போயிரு வாங்க, உங்க ஐயா?'

'வேலை செய்றவன் அவன். வேலை அதிகம்னு அவன் சொல்றான். இதிலே நாம என்ன சொல்ல இருக்கு?'

இந்த சம்பாஷணையை மாமா என்னிடம் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டே வந்து சொன்னார்.

'இதப்பாரு— இக்கட்டிலே கொண்டு நிறுத்திப்பிட் டான் என்று பொருமினார் அவர்.

சமயம் பார்த்து மாமாவின் மனைவியும் சாட்டை கொடுத்தாள்' 'சுப்பக்கா வந்து சொல்லிச்சின்னா இஞ்ச தான் அப்படி என்ன அவசரம்? குடுகுடுன்னு ஓடினாங்க' என்னமோ செஞ்சாங்கம்பாங்களே, அந்த மாதிரி போய்ப் பேசுவானேன்! அப்புறம் இவன் வாண்டாங்கறான்னு காயுவானேன்' என்று காய்ச்சினாள் மாமாவை.

மாலையில் சுப்பக்கா வந்து ஒரு பாட்டம் கண்ணால் நீராகக் கொட்டினாள். 'அஞ்சு வருசம்' அஞ்சு வருசம் கறானே, பாவிப்பய. எனக்கு உடம்பே சரியில்லே. ஒண்டியா இப்படிப் பொங்கித் தின்னுட்டே நான் அஞ்சு வருசம் இருக்கவே போறதில்லெ' என்று விக்கி விக்கி அழுதாள்.

'நீ இப்படி அளறே! உன் வயத்திலே பொறந்த புள்ளைக்கு உன் மனசு தெரியலியே, நான் என்ன பண்ண. சொன்னத்தைக் கேக்கற புள்ளைன்னு நெனச்சேன்.'

'நீங்க இப்படியே சொல்லி கையைக் கழுவிடாதீங்க, அவனை எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லி சம்மதிக்கச் செய்யணும்' என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சுப்பக்கா.

ஐந்து வருஷமாக அவள் விதவை. பிள்ளையும் பக்கத்தில் இல்லாமல் போகவே அந்தப் பெரிய வீட்டின் தனிமை அவளைப் பயமுறுத்தியிருந்தது. இன்னும் ஐந்து வருஷம் என்று நினைக்கும்போதே அவளுக்குக் கிலிப்பிடித்து விட்டது. மாமாவைப் பேதைத் தனமாகக் கெஞ்சினாள்?

மாமாவும் விடவில்லை. கமலத்தம்மாளைச் சாப்பிட அழைத்தது இரண்டு நாள் கழித்துத்தான் பலித்தது. கமலம் சாப்பிடும்போது அவள் சாப்பிடுகிற நயத்தையும்: பெரிய தனத்தையும் பார்த்துப் பார்த்து எனக்குக் கண் எடுக்க முடியவில்லை.

'அன்னிக்கி அந்த விஷயத்தை அப்படி ஒரு தினுசாச் சொன்னீங்கள்ள?' என்று ஆரம்பித்தார் மாமா.

'எது?' என்று நிமிர்ந்தாள் கமலம்.

'அதான், கலியாணம்தான்.'

'அவன்தான் வேண்டாங்கறானாமே?'

'நீங்க சொன்னாக் கேக்கமாட்டானா?'



'சரி, நான் சொல்றேன். இன்னிக்கி கட்டாயமாகச் சொல்றேன்.'

'நல்லா மனசிலே பதியும்படியாச் சொல்லணும். அவன் அம்மாவைப் பார்த்தா எனக்கு வேதனையாயிருக்கு.'

'எனக்குந்தான் கஷ்டமாயிருக்கு. நான் சொல்றேன். ஆனா அவன் கேக்கலேன்னா?'

'நீங்க சொல்லுங்க. அவன் கேக்காமலா போயிருவான்? பார்த்துப்பிடறது.'

'சரி. சொல்றேன்' என்று குஞ்சாலாடு பூந்தியை நாசுக்காக வாயில் போட்டுக் கொண்டாள் கமலம்.

## 4

அவள் அன்று கட்டாயம் சொல்லியிருப்பாள். ஆனால் பலிக்கவில்லை என்றுதான் தோன்றிற்று. மறுநாள் காலையில் சுப்பக்கா வந்து மாமாவைக் கெஞ்சின கெஞ்சலில் அது தெரிந்தது.

'நான் என்ன செய்வேன், சுப்பக்கா? இப்ப எனக்கே எப்படி அருணாசலம் மூஞ்சிலே முழிக்கிறதுன்னே புரியல்லே' என்று வயலுக்குப் புறப்பட்டு விட்டார் மாமா.

சுப்பக்கா அரை மணி பொறி கலங்கினாற்போல உட்கார்ந்துவிட்டு, மூக்கைச் சிந்திக் கொண்டு எழுந்து வீட்டுக்குப்போனாள்.

''பெத்தவ இப்படிக் கண்ணீர் விடறா! இந்தப் பயலானா மனசிலேயே போட்டுக்க மாட்டேங்கறானே, அத்தை?' என்று மாமாவின் மனைவியிடம் கேட்டேன்.

மாமா எதிலியும் தோத்ததே கிடையாது. ஆனா இந்தப் பயலை அசைக்க முடியலியே, ஏன், அத்தை?'

ஆமா, உங்க மாமாவுக்கு என்ன புரியப் போவுது. கோர்ட்டு வியாஜ்யம்னா அரைக்கைச்சட்டையும், நம்பர்

கட்டும் கொடையுமா அலைவாங்க! ஜப்திக்குப் போவாங்க, அமீனாவைக் கொண்டாந்து வெரட்டுவாங்க. பயிர்ச் செலவுக்காரன், கூலிக்காரன் எல்லாரையும் வெரட்டு வாங்க. சாமிநாதனைக் கேக்காம இவங்க போகலாமா? அவன் சொல்றதிலேதான் என்ன தப்பு? ஏகப்பட்ட பொறுப்பை அவன் தலையில் சுமத்தியிருக்காங்க. சமையல் வேலை, கணக்கு எளுதறது, கடைகணணிக்குப் போறது, அம்மாவுக்கு எண்ணெய்தேச்சு விடறது, கால் பிடிச்சு விடறது— எல்லாம் அவன்தான் செய்ய வேண்டியிருக்கு? மாங்கு மாங்குனு வேலை இருக்கறப்ப அவன் வேலையைப் பாப்பானா, குடித்தனம் நடத்துவானா?'

அத்தையை நான் நிமிர்ந்து பார்த்தேன்— நேராக.

'என்ன அத்தை இது?'

'என்ன?'

'எண்ணெய்கூட அவங்களுக்கு இவன் தான் தேய்க் கணுமா?'

ஆமாம், அவன்தான் தேய்க்கறான்னு தெரிஞ்சுது, நேத்து யோகாம்பாளை கீரைக்கட்டு கொடுத்திட்டு வரச் சொன்னேன், சுப்பக்காகிட்ட. அப்ப கொல்லைக்கட்டிலே அவங்களை மணையிலே உக்காத்திவச்சு சாமிநாதன் எண்ணெய் தேச்சுக்கிட்டிருந்தானாம். இவ சட்டுனு இந்தாண்டை வந்துப் பிட்டா.'

'நெசமாத்தானா?'

'ஏன் நெசமாயிருந்தா என்ன? எதோ அவங்களுக்கு உடம்பிலே தெம்பில்லே, தேச்சுக்க முடியலே. அவன் தேச்சுவிட்டா என்ன? இவ்வளவு செய்யறப்ப இது கூடச் செய்யப் படாதா அவன்?

அத்தையின் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். ஒன்றும் தெரியவில்லை. அத்தையின் நெஞ்சு அதளபாதாளம். எதிருந்தாலும் தெரியாத இருட்டாழமாக இருக்கும்.



பழகிப் பழகி, அவள் கிண்டல் புன்னகையில்லாமல், சிரிக் காமல் ஏதாவது சொன்னால், உண்மைபோல ஒன்றைச் சொன்னால் அதற்கு நேர் மாறாக இருக்கும் என்று எனக்கு ஒரு அனுபவம். மற்றவர்கள் செய்கிற விஷமப் புன்னகை அவளைக் கட்டியடித்தால்கூட அவள் உதட்டில் வராது. ஆனால் என்னையே இப்படி ஏமாற்ற முடியுமா?

நான் நன்றாக அவளைப் பார்த்தேன். 'அத்தை என்னைக் கொஞ்சம் பாரேன். கொஞ்சம் குறும்பாச் சிரிச்சுக்கிட்டுச் சொன்னா நான் சட்னு புரிஞ்சுக்குவேன்.,

'நீ ஒண்ணு! குறும்பு என்னடா குறும்பு இதிலே? ஏதோ அவங்க ரண்டுபேருக்கும் பளக்கம். பெரிய மனிசங்க வீட்டிலெ நம்ம மாதிரி யெல்லாம்தான் இருப்பாங்கன்னு நெனக்க முடியுமா? அவங்க அப்படியிருக்கிறதிலே தான் என்ன தப்பு?' என்று அதே பழைய முகத்துடன் சொன் னாள் அத்தை

'உன் நெஞ்சைச் சுட' என்று மனத்திற்குள்ளேயே அத்தையைப் பார்த்துப் பல்லைக் கடித்துக் கொண்டேன்

இரவு தூக்கம் பிடிக்கவில்லை. வாசலில் கட்டிலில் உடல் படுத்துக் கிடந்தது. மனசு சுப்பக்கா வீட்டு நடை யுள்ளுக்கும் கொல்லைக் கட்டுக்குமாக அலைந்துக் கொண் டிருந்தது. யாரோ மணைமீது அமர்ந்து கூந்தலை அவிழ்த்து எண்ணெய் தேய்த்துக் கொள்ளத் தலையைக் காட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தவாறு நின்றது. நின்று கொண்டேயிருந்தது. ஆவல் என்னும் பைசாசம் என்னுள்ளே எழுந்து கண்ணை மூடவிடாமல் ஆடிக் குதித்தது.

சுப்பக்காள் மறுநாள் வந்து அழவில்லை ஆனால், அழுததாக நான் நினைத்துக் கொண்டேன். அதே மறு நாள் மாலையில் சாமிநாதன் அக்கரைக்குப் போவதைப் பார்த்துப் பின்னாலேயே போனேன். தெரு திரும்பியதும்

பிள்ளையார் கோயிலாண்டை வேகமாக நடந்து அவனைப் பிடித்துவிட்டேன்.

'எங்கே சாமி, பையும் கையுமாக் கிளம்பிட்டே?'

'அட அண்ணனா!—வாங்கண்ணா. சும்மாத்தான் மஞ்சக்காடுவரைக்கும் போறேன். சர்க்கரை ஆயிரிச்சு. அண்ணன் எதுவரைக்கும்?'

'நானும் மஞ்சக்காடுதான் போறேன். ஹோட்டல்ல வாங்கித்திங்கலியா, ரண்டு வாரம் போல, நாக்கு செத்துக் கிடக்கு.'

'வாங்க அப்ப ரண்டுபேரும் சாப்பிடுவோம்.'

'உனக்கும் ஓச்சல் ஒழியல் இல்லியே, வந்ததிலேந்து! நானும் பார்த்துக்கிட்டிருக்கேன்.'

'ஆமா, அண்ணா.'

'இங்கியே இப்படியிருக்கு. வேலை செய்ற இடத்தில் எப்படியிருக்குமோ.'

'அங்கியும் இப்படித்தான்.'

இப்போதுதான், அவனைத் தனியாகப் பார்த்து நாலு வார்த்தை பேச வாய்ப்புக் கிட்டிற்று எனக்கு. இந்த இந்தியாவில், முக்கியமாக வட இந்தியாவில் அவன் சுற்றாத இடம் இல்லை என்று தெரிந்தது. 'இப்ப மூணு வருஷமாத்தான் அலைச்சல் அதிகம் இல்லை. கணக்கு வளக்கு தெரிஞ்சிக்கிட்டப்பறம் வீட்டிலேயே இருக்கறேன்' என்றான் சாமிநாதன்.

மூங்கில் பாலத்தைக் கடந்து போகிற வரையில் பேசாமல் போனோம்.

'எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனா, உன் தாயார் படற கஷ்டம்தான் எனக்குப் பொறுக்கலே. அவளும் ஒண்டியா எத்தினி நாளைக்குத்தான் இருப்பா, இந்தப் பெரிய வீட்டைக் கட்டிக்கிட்டு?'

'என்னண்ணா செய்யிறது?'



'கலியாணத்தைப் பண்ணிக்கிறது; ஆறு மாசத்துக்கு ஒரு தடவை வந்து பத்து நாள் இருந்திட்டுப் போறது.'

'இதெல்லாம் என்ன பேச்சு, அண்ணா?'

'இத பாரு, எனக்கு மனசிலே பட்டதைச் சொன்னேன். நீ தப்பா நெனச்சுக்காதே. எனக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? ஒண்ணுமில்லை. ஆனாலும், உங்கம்மா வந்து கண்ணாலெ தண்ணிவிடறப்பல்லாம் சங்கடமாயிருக்கு... நானும் யோசிச்சு யோசிச்சுத்தான் பார்க்கறேன். நானும் அந்த மாதிரி பெரிய ஆபீசர்ங்களோட பழகறவன்தானே? அவங்க வீட்டிலே குமாஸ்தா இல்லியா? தவசி இல்லியா? அப்படியா வேலையிருக்கும்? நல்லா. விளக்காட்டமா ஒரு பொண்ணு வருது, கலியாணம் பண்ணிக்கிறேன்னு— அதைக்கூட வேண்டாங்கும்படியா!'

சாமிநாதன் பதில் பேசாமல் நடந்தான்

'இருக்கிறது ஒரு பிள்ளை, அதுவும் ஆயிரம் காதத்துக் கப்பாலெ.'

'——'

'நமக்கெல்லாம் ஒரு கடமை, தர்மம், இதெல்லாம் இருக்கா, இல்லியா?'

'——'

'நீ பேசவே மாட்டேங்கறியே?'

கட்டுக்கரையை விட்டு இறங்கியவுடன் ஒரு ஆலமரம். அதன் கீழ் ஒரு அனுமார் உண்டு. வெகுகாலமாகப் புகழ் பெற்ற அனுமார் அவர். கோயில் கிடையாது. இந்தப் பெரிய ஆல நிழல்தான் அவருக்கு எல்லாம். கலியாணம் ஆகாத பெண்களுக்கெல்லாம் காரியசித்திக்காக இங்கு வந்து வேண்டிக்கொள்ளும் இந்த பிராந்தியம் முழுவதும். எனக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றிற்று! 'சாமிநாதா, இந்த அனுமார் கலியாண அனுமார், இந்த வட்டாரத்துக்கு. நீ இவர் சாட்சியாச் சொல்லு, பார்ப்பம்.

'எனக்கு இன்னும் அஞ்சு வருஷம் கலியாணம் பண்ணிக்க முடியாம உண்மையாவே வேலை நிறைய இருக்கு'ன்னு சொல்லேன், பார்ப்பம்' என்றேன்.

சொல்லுகிறபோது மரத்தடிக்கருகில் வந்து நின்றிருந்தோம்.

'அட போங்கண்ணா, பேசாமவாங்க நீங்க' என்று நகர்ந்தான் சாமிநாதன்.

'அப்படின்னா, உன்னை நான் நம்பமாட்டேன். நீ என்னமோ தெய்வத்தையும் மதிக்காம மறைக்கப் பாக்கிறே?'

நடமாட்டமில்லாத இடம். சுற்றிலும் கரும்புவயலும் நெல்வயலும், தென்னந்தோப்புமாகத் தனியாக இருந்த இடம்.

சாமிநாதன் முகத்தில் வெளிர் படர்ந்தது.

'என்ன அண்ணா இது?' என்று முகத்தைச் சுளுச்கினான்.

'ஆமா. நீ உண்மையைச் சொல்லலேன்னுதான் எனக்குத் தோணுது'

'ஆமாம், சொல்லலே. அதுக்கு என்ன இப்ப?'

'என்ன இப்பவா? அப்படின்னா நாங்க நெனைக்கிறாப்பல நீ அவ்வளவு நல்லவன் இல்லியா?

'இல்லே.'

'உன் தாயார் மனசு இப்படி வெதும்புதே!'

'எனக்குத் தாயாரே கிடையாது.'

'என்னது?'

'ஆமாண்ணா...எனக்கு யாருமே இல்லே.'

'யாரும் இல்லேன்னா, இங்க ஏன் வந்தே?'

'தாயாரைப் பார்க்கக்கூடவா வரப்படாது?'

'எனக்கு ஒண்ணும் விளங்கலெ.'



'அஞ்சு வருஷமில்லேண்ணா, அம்பது வருஷமானாலும் எனக்குக் கலியாணம் கிடையாது. சாமி முன்னாலெ கேக்கறீங்க. உண்மையைச் சொல்லிப்பிடறேன்- நீங்க ஒருத்தர் கிட்டவும் சொல்லப்படாது. வாங்க போவம்...'

கூடவே நடந்தேன்.

'எனக்குக் கலியாணம் கார்த்தி எல்லாம் ஆயாச்சு' என்றான் அவன்,

'எங்கே?'—திடுக்கிட்டு கேட்டேன் நான்.

'ஆனாப்போலத்தான். இந்தக் கமலத்தைவிட்டு 'எது வந்தாலும் அந்தாண்டை போறதில்லை, கலியாணம் பண்ணிக்கிறதில்லே'ன்னு நான் சத்தியம் பண்ணிக் கொடுத்திட்டேன். போதுமா?'

'என்னடாது! நிஜமாவா?'

'ஆமாண்னே. அவ என்னைச் சாதாரணமா வச்சுக் காப்பாத்தலே, பெரிய சீமான் வீட்டுப் புள்ளைக்குக்கூட அப்படி ஊட்டமும் கவனிப்பும் கிடையாது. நான் ரண்டு நாள் இல்லாட்டி அவ செத்துக்கூடப் போயிடுவா... அந்த வீட்டிலெ நான் வச்சதுதான் சட்டம், நான் கீறின கோட்டை யாரும் தாண்ட முடியாது. இன்னக்கி நான் பதினஞ்சு பேருக்கு வேலை பண்ணி வச்சுருக்கேன்னா பெரிசா, அந்த புண்யத்துக்கெல்லாம் இந்தப் பாவம்தான் மூலம். இன்னும் எத்தனையோ புண்யமும் இப்படி இருந்துக்கிட்டுச் செய்ய முடியும்.'

'என்ன சாமி இதெல்லாம்?'

'அதான், அண்ணா! நான் கலியாணம் பண்ணிக்கலே உன் கண்ணை விட்டு, உன் காலடியைவிட்டு அகல மாட்டேன்'னு கைமேலே அடிச்சுக் கொடுத்தாச்சு...மகாபாவம் தான். நான் என்ன செய்வேன்? ஐயாவுக்கு எங்கசேதியெல்லாம்தெரிஞ்சும் ஒண்ணும் செய்ய முடியலே. அப்பேற்பட்ட பதவி அவருக்கு. சீமை கீமைன்னு சுத்தறதெல்லாம்

வேலையாலே மட்டுமில்லே. இஞ்ச இருக்க முடியாத வேதனையினாலேதான். தன் வீட்டிலே தானே வேலைக்காரன் போல இருக்கறதுன்னா, சம்பாரிச்சு மட்டும் போட்டு விட்டு, வெறும் சோத்தைத் திங்கற உரிமை மட்டும் தான் ஒருத்தனுக்கு உண்டுன்னா, அவனுக்கு அந்த வீட்டிலே கால் எப்படித் தரிக்கும்? வெளியிலேயும் சொல்ல முடியலே நானும் என்னக்கி குண்டு விளப் போவுதோன்னு பயந்துக் கிட்டே தான் இருக்கணும். அந்த ஆபத்து எப்படி வரப் போறதோ? துப்பாக்கிக் குண்டா அவ மேல பாயப் போறதோ' என் மேல பாயப் போறாதோ? இல்லை, ஊர் சிரிச்சுக் கலியாண ரத்தாக முடியபோவுதோ?—ஆனா சில சமயம் யோசிச்சா—இரண்டுமே நடக்காதோன்னுதான் தோணுது. நேரா பாத்தப்பறமே ஒண்ணும் செய்யாதவரு இனிமேலா ரோசத்தோட கிளம்பப் போறாரு?'

'நேராப் பாத்தாரா?'

'கதவைத் தாப்பாப் போட்டுக்கிட்டு இருந்தோம். 'இருங்க,ன்னு கதவைத் திறந்தா அவ. எனக்கு பகீர்னுது தலையைக் குனிஞ்சிட்டு நின்னேன். அவர் பாத்திட்டு. கொஞ்சம் நின்னிட்டு அப்பாலே போயிட்டாரு. அப்புறம் அந்த இலை மறைவு காய் மறைவு கூடப் போயிட்டுது.'

,அடப் பாவி!'

'நான் என்ன செய்வேன்? ஆனா நானும் ஒப்புக்கறேன் எனக்கும் அவளை விட்டுட்டு இருக்க முடியலே. அவர் வந்து யாரைச் சுட்டுக்கொல்லப் போறாரோ. அன்னக்கித் தான் இது அறுந்து போவும்.'

'நீ அவரைக் கொல்லும்படியா அவ உன்னைப் பண்ணாம இருக்கணுமேன்னு இருக்கு எனக்கு.'

,அதைக் கட்டாயம் செய்ய மாட்டேன். சமையல். திருட்டு—ரண்டுபோதும். கொலை வேற வேண்டாம்... நான் இதெல்லாம் யார்கிட்டே சொல்றது? உங்களுக்கு ஆணை வச்சிட்டேன். இதைக் கேட்டதை மறுகாதாலே



விட்டுப்பிட்டு மறந்திருங்க, என்று நடந்து கொண்டே சொன்னான் சாமி.

எனக்கு அவன்மீது வந்தது கோபமா, பொறாமையா என்பது புரியவில்லை. புகைத்துகொண்டே, எரிந்து கொண்டே அவனோடு நடந்தேன். மஞ்சக்காடு பஸ் ஸ்டாண்டு காபி கிளப்பில் எனக்கு ராஜோபகாரம் செய் தான்.

திரும்பி வரும்போது சவுக்குத்தோப்புகளின் 'உய் உய்.' என்ற ஓசையுடன் இருள் மண்ணை மிதித்துக்கவிந்து கொண்டிருந்தது. வயல்களில் அமுங்கிக் கிடந்த பசுந்தாள் நொதிப்பின் மணம் மூக்கை நிறைத்தது. மேற்கில் மட்டும் மாலையின் கடைசி ஒளி, அயர்கிறவன் கண்ணை விழித்து மூடுவது போல் மினுக்கிற்று.

'சாமி, இருந்தாலும் நீ ரொம்பக் கொடுத்து வச்ச வண்டா' என்று என் பொறாமையைக் கொட்டிவிட்டேன்

கரும்பு, மஞ்சள் கொல்லைகளைக் கடந்துகொண்டு மறுபடியும் அனுமார் நிற்கிற ஆல் வழி வந்தோம், அந்தி மயக்கின் படுதாவில் பரந்து கவிழ்ந்த ஆலின் குடையும் விழுதுகளும் சித்திரம் போட்டுக்கொண்டிருந்தன.

பையைக் கீழே வைத்து, செருப்பைக் கழற்றி அனுமாரைக் கையெடுத்து கும்பிட்டான் சாமி.—இவர்களுக் கெல்லாம் தெய்வ பக்தி எப்போதுமே அதிகம்!
'இந்த அனுமார் வேடிக்கையான சாமில்லே, அண்ணா?' என்று கேட்டான் சாமி.

ஏன்?' என்றேன்.

'குரங்கு மூஞ்சி. ஆனா' நல்ல படிப்பு. ஊசிமாதிரி அறிவு. வாயை தொறந்துபேச ஆரமிச்சா தட்டுத்தடங்க லில்லாம, அவசரமில்லாம, நிதானமா' அமர்க்களமாப் பேசும். வாயைத் தொறந்து இன்னி முழுக்கக் கேட்டுக் கிட்டேயிருக்கணும். உடம்பிலே வலுவோ சொல்ல வேண்

டியதில்லே, அதோட நடுவிலே குரங்கு புத்தி. இல்லாட்டி ராவணன் அந்தப் புரத்திலே போய், அலங்கோலமா மேல் துணி போனது தெரியாம தூங்கிட்டுக் கிடக்கிற மண்டோதரியைப் பாத்துப்பிட்டு 'கண்டேன், சீதையம்மாவை'ன்னு கிலிகிலின்னு இளிச்சிக்கிட்டுத் தூண்மேல் ஏறி உத்தரத்திலே வாலைச் சுருட்டிக்கிட்டுத் தொங்கியிருக்குமா? ஆனா, புத்தியிருக்கில்ல! உடனே முளிச்சுக்கிட்டுது. 'சேச்சே, என்ன இப்படி குரங்குப்புத்தி வந்திருச்சே'ன்னு ஆயாசப்பட்டுதாம், ஒருநாளிப்போது. ஒம்பது சாஸ்திரம் படிச்சாலும் குரங்கு குரங்குதானே?' என்றான் சாமி.

'நல்லா ராமாயணம்லாம் படிச்சிருக்கியே!'

'படிக்கலேண்ணா, கல்கத்தாவிலே இங்கேருந்துதான் ஒரு அய்யர் வந்து சொல்லிக்கிட்டிந்தாரு. கேட்டேன்.

இரவு முழுவதும் நான் தூங்கவில்லை. சாமிநாதனின் அதிர்ஷ்டத்தை நினைத்து நினைத்து என் உடல் எரிந்தது.

இலுப்பைக் குடியார் வீட்டு முன்னறையில் நள்ளிரவு வரை வெளிச்சம் தெரிந்தது. பிறகு இருள் அடைந்து ஒளியை விழுங்கிற்று. அந்த இருளில்...

மண்ணில் நடக்கிற எத்தனையோ துரோகங்களைப் பார்த்துக் கொண்டு கலங்காமல் அலுங்காமல் ஊர்கிற நட்சத்திரங்களையும் மேகங்களையும் பார்த்துக்கொண்டே வாசல் கட்டிலில் படுத்துக்கிடந்தேன்.

காலையில் சாமி வந்தான். தினமும் ஆங்கிலத் தினசரியை—தான் பார்த்த பிறகு—எனக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள் கமலம், சில நாளாக. அதைக் கொடுக்கத்தான் வந்திருந்தான்.

'மாமா இல்லே?'

'இல்லியெ—கும்மாணம் போயிருக்காங்க, ஈரங்கி இன்னைக்கி.'



'அப்படின்னா இதைக் கொடுத்திட்டு வரச் சொன்னாங்க, அம்மா. தனியாப் பாத்துப்பிட்டு, நீங்களே நேரக் கொண்டாந்து கொடுத்திருங்கண்ணே' என்று ஒரு காகித உறையை நீட்டினான் அவன்.

'என்ன இது?'

'தெரியலியே' என்று திரும்பிச் சென்றான் அவன்.

கவர் ஒட்டவில்லை. அப்படியே கவிழ்த்தேன். ஒரு கையகலப் புகைப்படம் விழுந்தது. கவரைத் தட்டினதும், ஒரு மடித்த கடுதாசி வேறு விழுந்தது.

எக்ஸ்-ரே படம், மார்புக் கூட்டின் படம். புகைப்படத்தில் ஒரு பையன் மாலைத் தொப்பியுடன் அரைச் சட்டையை அரைக்கால் சட்டைக்குள் விட்டு காலுறையும் பூட்ஸுமாக நின்று கொண்டிருந்தான்.

ஒன்றும் விளங்கவில்லை.

கடுதாசைப் பிரித்தேன்.

தலையில், 'உங்கள் பார்வைக்கு மட்டும்—படித்தவுடன் திருப்பியனுப்புவதற்காக' என்று எழுதியிருந்தது—

'ராஜசுந்தரம் அவர்களுக்கு,

கிணற்றுத் தவளைகளில் இரண்டு விதங்கள் உண்டு. சின்னக் கிணற்றில் வாழ்கிற தவளை, எம். ஏ. படித்துவிட்டு சென்னை போன்ற பெரிய கிணற்றில் வாழ்கிற தவளை. ஆனால், குணம் இரண்டிற்கும் ஒன்றுதான்.

நான் அன்று சொன்னாற் போலவே நாட்டுப்புறத்தை இப்போதுதான் முதலில் பார்க்கிறேன். வந்த நாலு நாட்களுக்குள்ளாகவே என் காதுபட, ஆனால், ரகசியம் போலப் பேசப்பட்ட பேச்சுகள் என்னைக் கவர்ந்தன.

எனக்கு வயசு நாற்பது. சாமிக்கு வயது இருபத்திரண்டு. ஆயினும் இவ்வளவு குறைந்த வயதுள்ள வாலிபனுடன் சரீர உறவு வைத்துக் கொள்ளலாம்; வைத்துக்

கொள்ள முடியும்—சில ஸ்திரீகள் அப்படி நடந்து கொண்டும் வருகிறார்கள்.

ஆனால், சாமியும் நானும் அந்த உறவில் பழகவில்லை. இதோ இருக்கிற புகைப்படம், என் புதல்வனின் புகைப் படம். இப்போது இருந்தால் சாமியைவிட ஒரே வயது குறைவாக இருப்பான். பத்து வருடங்களுக்கு முன்னால் பம்பாயில் நீந்துகிற தொட்டியில் விழுந்து பலியாகிவிட் டான் இந்தப் பையன். அன்றிலிருந்து இந்த உலகத்தில் எந்தப் பையனைப் பார்ந்தாலும் அந்தக் குழந்தையின் ஜாடை இருப்பது போலவே படுகிறது. அந்த பிரமையி லிருந்து நான் இன்னும் விடுபடவில்லை. சாமியைப்போல எத்தனையோ சோக்ராக்கள் எங்களிடம் வேலைக்கு இருந்ததுண்டு. சாமி பதினைந்து வயதுப் பையனாக வேலைக்கு வந்தபோது என் பையனைப்போல இருந்த தாகப்பட்டது எனக்கு. மூக்கையும் கண்ணையும் பாருங் கள், இந்த ஒப்புமை இருக்கிறதோ என்னவோ எனக்கு இருக்கிறாப்போல்தான் தோன்றிற்று. அந்த உணர்வு வளர்ந்தும் விட்டது. அது முற்றின பிறகுதான் சாமியை வேலைக்காரப் பையன் என்ற நிலையிலிருந்து நீக்கி விட்டுக் குழந்தையாக மாற்றிக்கொண்டேன்.

நாலைந்து நாட்களுக்கு முன்னால் நீங்கள் சாமிக்காகப் பார்த்த பெண்ணின் தகப்பனார், என் காதுபட 'அதை'ச் சொல்லிக்கொண்டு போனார். சமையல்காரர்களை எஜமானிகள் ஆசைநாயகர்களாக வைத்துகொள்வதில் அப்படியொன்றும் புரட்சியோ புதுமையோ இல்லை. விக்ரமாதித்ய ராஜா காலத்துக்கும் முன்னாலிருந்தே நடந்துவருகிற சாதாரண விஷயம்தான் அது. சமையல் காரப் பையன் வீட்டுக் குழந்தையாக மாறுவதுதான் அதிர்ச்சிதரும் புதுமை என்பது என் சொந்த எண்ணம்.

சாமிக்கு இப்போது கலியாணம் தேவையே இல்லை. காசம் அவனது இரண்டு விலா எலும்புகளைத் தொட்



டிருக்கிறது. அவனுக்கு ராஜ வைத்யமாகவே நடந்து வரு கிறது. இன்னும் ஐந்து வருடங்களுக்குக் கலியாணம் தேவையில்லை. அவசரக் கலியாணம். அவன் உயிரைத் தின்றாலும் தின்றுவிடும்.

யார் யாரோ என்னென்னமோல்லாம் பேசுகிறார் கள் என்று போன வாரம் என்னிடம் அழுதான் சாமி. 'எதற்காகடா அழுகிறாய்? கொஞ்சம் வேடிக்கை பார்ப் போமே! இந்த ஊரில்தான் சினிமா இல்லை, நாடகமும் இல்லை; பொழுது போகவேண்டுமே!' என்று சொல்லி வைத்தேன். அதற்காகத்தான் சற்றுப் பகிரங்கமாகவே— அதாவது, இலை காய் மறைவாக அவன் கையாலேயே எண்ணெய் தேய்த்துக் கொண்டேன். நல்ல வேளையாக வேலைக்காரியும் அந்த சமயம் வந்து பார்த்துவிட்டுப் போனாள். நாடகம் களைகட்டிவிடும் என்பதை உடனேயே உணர முடிந்தது. நேற்று அனுமாருக்கு முன் கடைசிக் காட்சிவரையில் நாடகத்தைப் போட்டுக் காட்டி விட்டதாகச் சொன்னான் சாமி— திரும்பி வந்தவுடன்.

அவன் கலியாணத்தைப் பற்றி உங்கள் மாமாவைக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். அவர் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு நன்றி. ஐந்து ஆண்டு களுக்குப் பிறகு அவன் என் அண்ணன் மகளையே மணப்பான்.

சாமி கல்கத்தா பல்கலைக் கழகத்தில் இரவுக் கல்லூரி யில் படித்து பி. ஏ. தேறிய செய்தி உங்களுக்குத் தெரிந் திராது. இப்போது அவன் அதே கல்லூரியில் எம். ஏ.க்குப் படிக்கிறான்.

அதிகப் பிரசங்கித்தனமாக இந்த வேடிக்கை செய்த தற்காக மன்னிக்க வேண்டும். கடுதாசையும், புகைப் படத்தையும்' தயவு செய்து தாங்களே நேரில் கொண்டு வந்து கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள
கமலம்

இரண்டு மணி நேர உழைப்புக்குப் பிறகு எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு கமலத்தைப் பார்க்கச் சென்றேன்.

'வாங்க' என்று வரவேற்றாள் கமலம். செவ்வட்டை போல் ப்ளூஜாகர் தோடு காதில் ஜொலித்துக் கொண்டிருந்தது. கவரைக் கையில் வாங்கிக் கொண்டு 'அவசரமில்லை, உட்காருங்கள். கொஞ்ச நேரம் கழித்துப் போனால் போகிறது' என்று ஸ்டூலை எனக்கு நகர்த்திப் போட்டாள் அவள். □

# அவளும் உமியும்

## 1

## முதல் ஆஹாக்கு

ஏலக் கொத்தா ஏலேலா,
தகிடுதத்தம் ஏலேலா,
தாருபாச்சி ஏலேலா,—
தென்னை மரம் ஏறுடா
தேங்கா புடுங்கிப் போடுடா!
ஏலக் கொத்தா ஏலேலா,
மாமரத்துலெ ஏறுடா
மாங்கா புடுங்கிப் போடுடா!
ஏலக் கொத்தா ஏலேலா,
வாளமரம் ஏறுடா
வாளக்காயைப் புடுங்குடா
ஏலக் கொத்தா ஏலேலா,
தகிடுதத்தம் ஏலேலா
ஜிஞ்சாஞ்சகடி ஏலேலா!...

...ஒன்றுமில்லை. காயாப்பிள்ளை பேரப்பிள்ளையைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறார். அதோ பாருங்கள், கூடத்தில் மல்லாக்கப் படுத்துக்கொண்டு, இரண்டு கால்களையும் மேலே தூக்கிக்கொண்டு பாடுகிறாரே அவர்தான் காயாப்பிள்ளை. பேரப் பிள்ளையின் வயிற்றில் இரண்டு உள்ளங்கால்களையும் கொடுத்து அப்படியே மேலே தூக்கியிருக்கிறார். அந்தப் பையனின் இரண்டு கைகளையும் தன் இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு கொஞ்சுகிறார். பையன் அந்த மனுஷத் தென்னை மரத்தில் படுத்தவாறு சிரிக்கிறான்.

"போருமாடவெ?" என்று கேட்கிறார் காயாப் பிள்ளை. பேரப்பிள்ளையை இறக்கிவிடுகிறார். உடனே அந்தப் பயல் ஓடிவிடாமல், பிடித்து இழுத்து மேலே சாத்திக் கொள்கிறார். மொச்சு மொச்சு என்று மாற்றி மாற்றி இரண்டு கன்னங்களிலும் முத்தமிடுகிறார். உச்சி முகர்கிறார். உச்சி குளிர்கிறார். பேரப்பிள்ளை திமிரி ஒருபாடாக விடுதலை செய்துகொண்டு சிரித்துக்கொண்டு நிற்கிறான், அவனுக்குக் கொஞ்சம் வயிறு பெரிது. சூணா வயிறு என்பார்களே—அதுதான். உள்ளங்காலில் வைத்துத் தூக்க வாகாக இருக்கும் போலிருக்கிறது. அதனால்தான் காயாப்பிள்ளை இந்தத் தென்னை மரத்தில் ஏற்றித் தேங்காய் பிடுங்கிப் போடுகிற விளையாட்டே விளையாடுகிறார் என்று தோன்றுகிறது. கையும் காலும் சூம்பின அந்தக் குழந்தையை அந்த மாதிரி தூக்கி விளையாடுவதற்கும் ஒரு தனி ஆற்றல் இல்லாவிட்டால் முடியாது. காயாரோகணம் பிள்ளையால்தான் முடியும்.

"தாத்தா, தாத்தா! என்னையும் அந்த மாருதி தூக்கு தாத்தா" என்று ஒரு சின்னக் குரல் கேட்கிறது. காயாப் பிள்ளை திரும்பிப் பார்க்கிறார். எதிர்க்கட்டில் குடியிருக்கிற செல்லையாவின் பிள்ளை ஏகாமபரம். காயாப் பிள்ளையின் பேரப்பிள்ளையின் வயதுதான் அவனுக்கும், அதாவது நாலரை வயது. காயாப்பிள்ளையின் முகம் சுளிக்கிறது. காதில் விழாதது போல தன் பேரனை "எலா, இஞ்ச வாடான்னா" என்று கூப்பிடுகிறார். ஏகாம்பரம் மறுபடியும், "தாத்தா, என்னையும் லச்சுமணனைத் தூக்கினாப்பல தூக்கு தாத்தா" என்று அருகே வருகிறான், காயாப்பிள்ளையின் முகம் மறுபடியும் சுளிக்கிறது. கண்ணை அகட்டி முழி இரண்டையும் உருட்டி சுட்டுவிடுகிறாற் போல வெறித்துப் பார்க்கிறார். ஏகாம்பரத்திற்கு அது புரியவில்லையோ, புரிந்து கொண்டு தான் தென்னை மரத்தில் ஏறுகிற சுகத்தை நினைத்து புரியாததுபோல் பாவனை செய்கிறானோ, மறுபடியும்



கேட்கிறான். "தாத்தா, தாத்தா, என்னையும் தூக்கு தாத்தா." காயாப்பிள்ளைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னமோ செத்த எலியைத் தொடுவது போல வேண்டா வெறுப்பா அவன் கையைப் பிடித்து தூக்கப் பார்க்கிறார். ஒரு முக்கு முக்கிவிட்டு "யப்பா! என்னாலே முடியாது" என்று தள்ளிவிடுகிறார்.

"ஏன் தாத்தா?"

"இப்ப வாண்டாம். அப்பறமா தூக்குறேன் போ."

"இப்ப தூக்கு தாத்தா!" என்றான் ஏகாம்பரம்.

அதற்குள் காயாப்பிள்ளையின் சம்சாரம் சாலாட்சி அம்மாள் ஒரு தட்டில் தேன்குழலுடன் வருகிறாள்.

"பாத்தில்ல இதை. ஈயக்குண்டு மாதிரில்ல கனக்குது. இதென்ன புள்ளையா, அம்மிக் கல்லாங்கறேன்" என்று சம்சாரத்திடம் சொல்கிறார்.

"அம்மிக்கல்லா — அது திங்கறதைப் பாக்கணுமே. அது நாலு வயசு புள்ளையாவா திங்கிது. ஆத்தாடி— இம்மாஞ் சோறுல்ல வேண்டியிருக்கு" என்று கையை பானையளவுக்கு அகட்டிக் காட்டுகிறாள்.

ஏகாம்பரத்திற்கு இந்தப் பேச்சு காதில் விழவில்லை. அவன் பட்சணத்தட்டைப் பார்க்கிறான்; எனக்கு பாட்டி" என்கிறான்.

"பார்த்தீங்களா! வர்றதுக்கு முன்னாடி!" என்றாள் சாலாட்சி.

"காயாப்பிள்ளைக்கும் புகைந்து கொண்டு வருகிறது. "பாரேன்... கொண்டாரதுக்கு முன்னாலெ எனக்குப் பாட்டி ...ம் ... மூஞ்சியப்பாரு ... குடுத்தேன்னா தெரியுமா..." என்று உதட்டைக் கடித்துக்கொண்டு, "சரி. உள்ர எடுத்துக்கிட்டுப் போ— அங்கே வந்து தின்னுக்கறேன்" என்று பேரப்பிள்ளையைத் தள்ளிக்கொண்டே எழுந்து உள்ளே போகிறார்.

"குடுத்தேன்னா தெரியுமா?" என்று கொடுக்காமல் கொடுத்து கையை ஓங்காமல் ஓங்கின அந்த ஜாடையைப் பார்த்து ஏகாம்பரம் மெதுவாக அடிமேல் அடிவைத்து திரும்பிப் போகிறான்.

உள்ளே போன காயாப்பிள்ளையும் சாலாட்சியும் எதிர்த்த கட்டுக்குக் காதில் விழுந்துவிடாமல் கசமுசு வென்றும் இரைந்தும் பேசிக் கொள்கிறார்கள்.

"அதட்ட அதட்டப் போவுதா, பாத்தில்லா! நாலு வயசுக்குள்ளார எத்தனை அளுத்தம்? என்ன நெஞ்சுரப்பு. அப்படியே அப்பன் ஆயி ரண்டு பேரையும் உரிச்சு வச்சிருக்கு. கல்லுலிமங்கன் மாதிரில்ல நிக்கிறான் அந்த பய— தூக்கு தூக்குன்னுது. ஏதுறா விடாது போல்ருக் கேன்னு தூக்கப் போனன்... ஆறு மரக்கா அரிசி மூட்டையைத் தூக்கறாப்பல ஆயிட்டுது."

"நீங்க ஏன் தூக்கப்போனிங்க! கையி மெருகிக்கிடப் போவுது. அப்புறம் அவதிப்படப் போறீங்க... அது முளி யும் உடம்பும். மதுரவீரன் முளிக்கிறாப்பல..."

"ம்... பாரேன். நாலு வயசுப் புள்ளையா இது. ஏழு வயசுக்கு குறச்சு யாராவது மதிப்புப் போட முடியுமா?"

காயாப்பிள்ளை, சாலாட்சி அம்மாள், இரண்டு பேருக்குமே கோபம். போயும் போயும் வாடகை கொடுத்துக் குடியிருக்கிற செல்லையாவின் குழந்தைகள் இப்படி மொழு மொழுவென்றிருக்கலாமோ.

வீடு காயாப்பிள்ளையின் வீடு. மாடிகூட உண்டு. வாசலிலிருந்து நுழைந்து நடையைக் கடந்ததும் வலது பக்கம் ஒரு கட்டு— இடது பக்கம் ஒரு கட்டு. வலது கட்டில் தான் காயாப்பிள்ளையின் குடும்பம் வாழ்கிறது. இடது கட்டில் முன் பக்கத்தில் செல்லையா குடியிருக்கிறார். அவருக்குக் கோயிலில்- சந்துமுழுவதும் நடந்து மேல வீதி யில் ஏறித் திரும்பினால் தெரிகிறதே— அந்த புவனேச்வரர் கோயிலில் கணக்குப்பிள்ளை உத்தியோகம். இடது பக்கத்



தின் பின் கட்டில் முனிசிபல் பள்ளிக்கூடத்தில் வாத்தியார் உத்தியோகம் பார்க்கிற கங்காதரசாமி குடியிருக்கிறார். அவருக்கு இரண்டு குழந்தைகள். இரண்டுக்கும் வயிற்றில் கட்டி. ஆகவே காயாப்பிள்ளைக்குக் கோபம் வரவில்லை. செல்லையாவின் குழந்தைகளைக் கண்டால்தான் அவருக்கு வயிற்றைப் பிடுங்கிக்கொண்டு வரும். அதுவும் மொழு மொழுவென்று அரைஞாணில் நாய்க்காசுகளும் தலையில் சுருளச் சுருள மயிருமாக அந்த ஏகாம்பரம் வந்து நிற்கும் போது அவருக்குத் தாங்கவே தாங்காது. தன் பேரன் சூணா வயிறு லச்சுமணனைப் பார்த்துப் பார்த்து ஏங்கிப் போவார். ஏகாம்பரத்தின் மேனி பொலிவை எடுத்துக் காட்டுவதுபோல இடுப்பில் ஒரு கறுப்புப் பட்டு அரைஞாண் கட்டியிருக்கும். அதில் நாய்க்காசுகள் கட்டித் தொங்கும். பளீர் என்று கண்ணைக் கவர்கிற அந்த இடுப்பைப் பார்த்ததும் காயாப்பிள்ளைக்கு உடம்புகாயும். உதட்டைக் கடிப்பார். பல்லைக் கடிப்பார். உருட்டி உருட்டி முழிப்பார். ஏகாம்பரம் ஏதோ வேடிக்கை பண்ணுகிறார் என்று சிரிப்பான். வாய்விட்டுச் சிரிப்பான்.

"ஒரு வேளை சோத்துக்கு விதி கிடையாது. நாக்காசு பட்டுக் கயிறு..." என்பார் காயாப்பிள்ளை.

"அய்யா சம்பாரிக்கிறது அர்ணாக்கொடிக்கே காணா துன்னு வஜனம் சொல்லுவாங்கள்ள, அந்த மாதிரியே. சம்பாரிக்கற காசெல்லாம் இந்த குந்தாணிக்கு அர்ணாக் கொடியாவே பண்ணிப் போட்டாங்க போல்ருக்கு புருசனும் பொஞ்சாதியுமாச் சேந்துகிட்டு" என்று சாலாட்சியம்மாளும் சேர்ந்து கொள்கிற வழக்கம்.

பிற்பகல் வீடு முழுவதும் தூங்கிக் கொண்டிருக்கும். காயாப்பிள்ளையின் மகன்-கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா- ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போயிருப்பார். செல்லையா கோயிலுக்குப் போயிருப்பார். கங்காதரசாமி பள்ளிக் கூடம் போயிருப்பார். பெண்ஜாதிகள் சாப்பிட்டுவிட்டுத் தூங்குவார்கள். சாலாட்சி அம்மாள்கூட பூனைத் தூக்க

மாக நடையில் தூங்கிக் கொண்டிருப்பாள்—பக்கத்தில் பேரன் லட்சுமணனைப் போட்டுக் கொண்டு. காயாப்பிள்ளைக்கு பிற்பகலில் ஒரு பசி பசிக்கும்—சின்னப் பசி. அடுக்களை அலமாரியைத் திறந்து இரண்டு தேன் குழல் அல்லது முறுக்கை எடுத்து ஒரு தட்டில் வைத்துக் கொண்டு கூடத்தில் வந்து உட்காருவார். சத்தம் கேட்காமல் வாயில் ஊறவைத்து, ஊறவைத்து உதடுகளை இறுக்க மூடி தின்ன ஆரம்பிப்பார். எதிர்க்கட்டுச் சமையல் அறையில் அம்மாவின் பக்கத்தில் படுத்துக்கொண்டிருக்கிற ஏகாம்பரத்திற்கு இது காதில் விழுமோ என்னவோ அம்மா கண்ணயர்கிற மட்டும் காத்திருந்துவிட்டு, அவள் கைத் துவண்டு விழுந்து தூங்க ஆரம்பித்ததும் எழுந்து வருவான். அன்று அப்படித்தான் கூடத்திற்கு வந்து, காயாப் பிள்ளை முறுக்குத் தின்பதைப் பார்த்துக் கொண்டு நின்றான். முறுக்கையும் அவரையும் மாறி மாறிப் பார்த்தான். காயாப்பிள்ளையின் முகத்தில் மிளகாய்ப் பொடி வெடித்தது. முகத்தைச் சுளித்தார்.

''ம்...ம்...'' என்று அப்பால் போகச் சொல்லி விரலால் ஜாடை காட்டி விரட்டினார்.

ஏகாம்பரம் நகரவில்லை.

''ச்சீ...போ...ம்...போடா...ம்!...சை...'' என்று துரத்தினார் காயாப்பிள்ளை. ஏகாம்பரம் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே நின்றான். விரட்ட விரட்ட நகரவில்லை. ''கண்ணப் பாரு, கோட்டான் மாதிரி'' என்று காயாப் பிள்ளை திரும்பி உட்கார்ந்து கொண்டார். அதாவது அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டு தின்ன ஆரம்பித்தார். ஏகாம்பரம் விடவில்லை. மெதுவாக நடந்து வந்து பக்கத்தில் நின்றான். இப்போது காயாப்பிள்ளைக்கு முன்னால் இருப்பது சுவர்தான். ஆகவே நேராக முன்னால் நிற்க இடமில்லை. சற்றுத் தள்ளினாற் போல சாய்ந்து நின்றான்.

''சீ...போ ... போடான்னா ... கொன்னுப்புடுவேன்'' என்று விரட்டினார். அவன் நகரவில்லை. காயாப்



பிள்ளைக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. மிச்சமிருந்த முறுக்கை இடது கையில் எடுத்துக் கொண்டு தட்டால் ஓங்கி குழந்தையின் நெற்றியைப் பார்க்க அடித்தார். அவ்வளவுதான் ''வீல்'' என்று ஒரு சத்தம் பீறிட்டுக் கொண்டு கிளம்பியது. குலை நடுங்குகிற அலறல்.

திடீர் என்று கேட்ட இந்த வீறல் வீட்டில் உள்ள எல்லோரையுமே எழுப்பிவிட்டது. தூங்கிக்கொண்டிருந்த ஏகாம்பரத்தின் அம்மா அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து ஓடி வந்தாள். பின் கட்டிலிருந்த வாத்தியார் கங்காதர சாமியின் மனைவி ஓடி வந்தாள். நடையில் படுத்திருந்த சாலாட்சி அம்மாளும் ஓடிவந்தாள். மாடியில் அயர்ந்து கொண்டிருந்த காயாப்பிள்ளையின் மருமகளும் திடுதிடுவென்று மாடிப்படி இறங்கி வந்தாள்.

காயாப்பிள்ளை அவன் இப்படி அழுவான் என்று எதிர் பார்க்கவில்லை. அடித்தகணமே கிலி பிடித்துக் கொண்டது. ஒரு கணம் வெலவெலத்துப் போய்விட்டார். ஆனால் அவருக்கா தெரியாது? ''வேண்டாம்டா வேண்டாம்டா கண்ணு முறுக்கு இந்தா. தட்டோட வச்சுக்க'' என்று அவனை வாரியணைத்துக் கொண்டு முறுக்கைக் கையில் கொடுத்தார், மடியில் உட்கார்த்திக் கொண்டார். எல்லோரும் வருவதற்குள் இதையெல்லாம் செய்து முடித்து விட்டார்.

''என்னாடாது'' என்று குழந்தையின் தாயார் ஓடி வந்தாள். மற்றவர்களும் ''என்ன? என்ன?'' என்று ஓடி வந்தார்கள்.

''மீனாட்சி அம்மா, உம் பய ஊரையே வித்து தலையிலே முடிச்சிடுவான் போலிருக்கே? முறுக்குக் கொடுத்தேன் தட்டோட வேணும்னான். போடாலே மாட்டேன்னு வம்பு பண்ணினேன். உடனே செவுத்திலே னங்கு னங்குன்னு முட்டிக்கிட்டானே பார்ப்போம்...எல, எல... கல்லுளி மங்கா ...போண்டாம்...போண்டாம்...அழுவா

தேடா...'' என்று அவனை மடியில் வைத்துக் கொஞ்சினார். அம்மாவைக் கண்டதும் அழுகையை நிறுத்தாமலேயே அவளிடம் பாய்ந்துவிட்டான் குழந்தை.

''எலே பொல்லாது, செவுத்துலெ முட்டிக்கிட்டு அளுவ வேறு அளுவறியா? மீனாச்சியம்மா... நல்ல சமத்துப் புள்ளையா பெத்திருக்கிங்க. அம்... செவுத்துலெ முட்டிக்கிட்டு காரியத்தை சாதிச்சுக்கணும்னு தோணுச்சு பாரேன், அம்!'' என்று ஆச்சரியப்பட்டார் காயாப்பிள்ளை.

மீனாட்சி ஏகாம்பரத்தை இடுப்பில் தூக்கிக்கொண்டு உள்ளே போனாள். சாலாச்சியும், வாத்தியார் மனைவியும் வியப்புடன் சிரித்தார்கள்.

## 2

## ஆழாக்கு இரண்டு

செல்லையாவின் மனைவி மீனாட்சி, காயாப்பிள்ளை சொல்வதை அப்படியே நம்பிவிட்டாள். தன்மகன்தான், தாத்தா தட்டோடு முறுக்குக் கொடுக்காததற்காக சுவரில் ணங்கு ணங்கு ணங்கென்று தானே முட்டிக்கொண்டு அழுததாக நம்பிவிட்டாள்.

''போக்கிரி நாயி, பொல்லாத்தனமா பண்றே! இத்தினியூண்டு இருக்கே. அதுக்குள்ளார ஏயாத்தவா கிளம்பிட்டே? தூங்குடான்னு சொல்லிட்டிருக்கேன். என்னைத் தூங்க வச்சிட்டு, நீ கிளம்பிட்டியே! சுவத்துலே வேற முட்டிக்கிட்டு அளுவ வேறு அளுவறே— அம்... படு சொல்றேன் இப்படி'' என்று குழந்தையைக் கடிந்து பக்கத்தில் போட்டுக்கொண்டு மறுபடியும் படுத்தாள். ஏகாம்பரம் சிறிது நேரம் அழுது, சிணுக்கு அழுகையாகசிறிது நேரம் விக்கிக்கொண்டிருந்தான். ''இஞ்சபாரு ஒருகதை சொல்றேன், கேட்டுட்டுத் தூங்கணும். ஒரே ஒரு ஊரிலே ஒரு



காக்கா இருந்தது— அதுக்குப் பசியா இருந்தது. ஒரு பாட்டி வடை சுட்டுக்கிட்டிருந்தாங்க'' என்று அவள் சொன்ன கதையை முழுவதும் கேட்காமலே கண்ணயர்ந்துவிட்டான்.

அதேபோல சாலாட்சியும் திரும்பி நடைக்குப் படுக்கப் போய் விட்டாள். காயாப்பிள்ளையின் மருமகளும் மாடிக்குப் படுக்கப் போய்விட்டாள்.

தனியாக உட்கார்ந்திருந்த காயாப்பிள்ளைக்கு கொஞ்சம் உயிர் வந்தது. உற்சாகமும் பிறந்தது. எவ்வளவு சமயோசிதமாகச் சொல்லி சமாளித்துக் கொண்டோம் என்று நெஞ்சிலே ஒரு கிளுகிளுப்பு ஏற்பட்டது. அந்தக் காலத்தில் அவர் அத்தை ''ஓடற பாம்புக்குக் கால் என்ற பய இல்லெ இவன்'' என்று சொல்லுவது ஞாபகம் வந்தது. அவர் அறுபது வருஷங்களுக்கு முன்னால் சின்னப் பையனாக இருந்த காலத்தில் சொன்ன வார்த்தை அது. அந்த சாமர்த்யம் இன்னும் தன்னை விட்டுப் போய் விடவில்லை; சமயத்தில் திடீர் திடீர் என்று கடவுள் மாதிரி தோன்றி கைகொடுக்கிறது என்று முருகனுக்கு ஒரு கும்பிடு போட்டார்.

தூக்கம் வரவில்லை. தாழ்வாரத்து ஓரமாக உட்கார்ந்து வானத்தைப் பார்த்தார். மனசில் இன்னும் வேகம் அடங்கவில்லை. என்னதான் சமாளித்துக் கொண்டாலும் ஏன் அந்தக் குழந்தையை அப்படி அடித்தோம் என்று கொஞ்சம் பச்சாத்தாபம் வந்து படர்ந்து கொண்டது.

அவரும் படித்தவர்தான். கலெக்டர் ஆபீஸில் வேலை பார்க்கும் தன் மகனைப் போல எட்டாம் கிளாஸ் என்ன, மெட்ரிகுலேஷன் என்ன, டைபர்ட்டி என்ன, இதெல்லாம் படிக்காவிட்டாலும், அவர் திண்ணை பள்ளிக்கூடத்தில் படித்து, காணி முந்திரி வாய்ப்பாடு எல்லாம் தலைகீழாகப் பாடம் பண்ணினவர்தான். அதோடு நில்லாமல் திருவாலூர் நீலாம்பிகேச புள்ளவராயரிடம் நாலைந்து வருஷம் தமிழும் படித்தார். கம்பராமாயணம் என்ன, வில்லிபுத்தூரார் என்ன, கைவல்ய நவனீதம் என்ன, பிரபுலிங்க

லீலை என்ன, அருட்பா என்ன— இதெல்லாம் கூடப் படித்திருக்கிறார். சிவபூசை கூட செய்கிறார், தீட்சை எடுத்துக்கொண்டு. அப்புறம் லோக விஷயங்களையும் பேமாத்துக்களையும், சன்மார்க்கங்களையும் கலந்து குழைத்துச் சொல்லுகிற விக்ரமாதித்தராஜன் கதை என்ன, பஞ்ச தந்திரம் என்ன, இதெல்லாம் கூடப் படித்திருக்கிறார்.

எல்லாம் அவருக்கு ஞாபகம் வந்தது. தமிழ் வாத்தியார் நீலாம்பிகேச புள்ளவாராயரிடம் வெசவு கேட்டதும் உபதேசங்கள் கேட்டதும் ஞாபகத்திற்கு வந்தன.

என்ன, என்னவெல்லாம் படித்திருக்கிறோம்? இருந்தாலும் மனசிலே கோபத்தை அடக்க முடியவில்லையே! இந்தக் குழந்தையைக் கண்டு அசூயை வருகிறதே என்று சிறிதுநேரம் வேதனைப்பட்டார். சற்று உற்றுக் கவனித்தார் வீடு முழுவதும் அடங்கிவிட்டது. மத்தியானம் தூக்கத்தில் சுருண்டுகிடந்தது. எதிர்த்த கட்டில் அடுக்களையில் ஏகாம்பரம் கூட தூங்கிவிட்டான் போலிருக்கிறது. சிணுக்கு அழுகைகூட கேட்கவில்லை. சரி, அந்தப் பயல் எழுந்து வருவான். எழுந்து வந்தவுடன் ஏதாவது தின்னக் கொடுத்து சிரிக்க வைத்துவிடலாம் என்று முடிவு செய்தார். மெதுவாக எழுந்து அடுக்களைக்குப் போனார். அலமாரியைத் திறந்தார். குப்பியைத் திறந்து உலர்ந்த திராட்சை பழம் ஒரு பத்தும் பிஸ்கத்தும் எடுத்துக் கையில் எடுத்துக் கொண்டு மறுபடியும் தாழ்வாரத்தின் ஓரமாக உட்கார்ந்துகொண்டார்.

இதெல்லாம் அவர் சொந்தப் பேரப்பிள்ளைக்காக வாங்கி வைத்தது. ஊரில் உள்ள குழந்தைகள் எல்லாம் வெறும் கூழையும் கஞ்சியையும்— குடித்துவிட்டு ஸெல்லுலாய்ட் பொம்மை மாதிரி எலும்பு தெரியாமல், பச்சை நரம்பு தெரியாமல் மொழுமொழுவென்று, பளபளவென்று வளரும்போது அவர் பேரன் லச்சுமணன் சூம்பலும் சூண்ா வயறுமாக ஏன் இருக்கவேண்டும்? அவனை எப்படியாவது மொழுமொழுவென்று பார்த்துவிட வேண்டும்



என்று ஆசை. குறிப்பாகச் சொன்னால் இந்த செல்லையா மகன் ஏகாம்பரத்தைவிட அழகாக, ஆரோக்யமாகப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அற்காக அவர் அலையாத அலையில்லை. வாங்காத பண்டமில்லை. வாசலில் பேரிச்சம் பழத்திலிருந்து பேரிக்காய் வரையில் வாழைப் பழத்திலிருந்து இலந்த வற்றல் வரையில் எது வந்தாலும் வாங்கி பேரன் வாயில் திணித்துவிடுவார். காலையிலே ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போவார். இட்லி வாங்கிக் கொடுப்பார். பொங்கல் வாங்கிக் கொடுப்பார். வெங்காய பஜ்ஜியாக வாங்கிக் கொடுப்பார். உருளைக் கிழங்காக ஊட்டுவார். ஆனால் ஹோட்டலில் இருந்து திரும்பும் வழியிலேயே அந்தப் பாவிப்பிள்ளை எல்லாவற்றையும் கண்பிதுங்க, கக்கிக் கொண்டே வருவான் செலவழித்த ரூபாயையே அவன் கக்குவதாகச் சுருக்குச் சுருக்கென்னும் காயாப்பிள்ளைக்கு. அப்புறம் கூச்மாண்ட லேகியம் எல்லாம் வாங்கிக் கொடுத்தார். அந்தப் பயல் அதெல்லாவற்றையும் சாப்பிட்டான் ஆனால் சூணா வயிறு பெருக்கிறதே ஒழிய ஆள் பருத்த பாடில்லை.

அந்த லச்சுமணனும் ஒரே பிள்ளையாக இருக்கக் கொண்டு தானே இத்தனை கவலை! என்ன செய்கிறது! அதெல்லாம் வமிசவாகு! வருஷம் தவறினாலும் பிள்ளை தவறாது என்று எத்தனையோ குடும்பங்கள்! காயாப்பிள்ளையின் வம்சம் அப்படியில்லை. அவருக்குத் தெரிந்த தலைமுறைக் கணக்காக, இனத்துக்கு ஒன்றுக்குமேல் யாரும் பெற்றதில்லை. காயாப்பிள்ளையே ஒன்றைப் பிள்ளை அவர் தகப்பனார் ஒற்றைப் பிள்ளை. அவருக்கும் தகப்பனார் ஒரே ஒரு தங்கையோடு பிறந்தவர். அவருக்குத் தகப்பனும் ஒற்றைப் பிள்ளையாம். இப்போது காயாப்பிளை மாதிரி கலெக்டர் ஆபீசில் வேலை பாக்கிற மகனும் ஒரு பிள்ளை பெற்றிருந்தான். இதுவே நடக்குமோ என்றுகூட சந்தேகமாகிவிட்டது.

கடைசியில் ராமேச்வரம் பாம்பு பூஜை எல்லாம் ஆன பிறகு. காயாப்பிள்ளையின் மகனுக்கு முப்பத்தெட்டு வயதான பிறகு இந்தக் குழந்தை பிறந்தது. பிறந்தவுடனே 'அட சுப்பரமணியா, இப்பதான் உனக்கு மனசு வந்து தாக்கும் ஹ்ம். நீயும் ஒரு தெய்வம்னு பேர்வச்சுக்கிட்டிருக் யேப்பா' என்று பழனி சுப்ரமண்யரைப் பார்த்து பக்தி ஸ்வாதீனத்துடன் சிரித்தார் காயாப்பிள்ளை.

'அதைத்தான் நல்லபடியா வைக்கப்படாது? ஒண்ணே ஒண்ணு கொடுத்து, கொடுத்தேன்னு பேரு பண்ணினே. அதை இப்படியா வக்யணும்! குச்சிக் காலும் குச்சிக் கையுமா? உன்னை நினைக்காதவன் புள்ளையெல்லாத்தையும் கரளாக் கட்டை மாதிரி பண்ணி வச்சிருக்கியே' என்று இப்போது அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார், பிள்ளை.

தாழ்வாரத்து ஓரத்தில் வானத்தைப் பார்த்து உட்கார்ந்திருந்தவருக்கு இந்தப் பழைய ஞாபகம் எல்லாம் வந்து கொண்டிருந்தது. இனிமேல் பிறர் குழந்தைகளைக் கண்டு காயக் கூடாது என்று சங்கற்பம் செய்து கொண்டார். அதற்கு முதல் அடையாளமாக, எதிர்க்கட்டுக் குழந்தைக்காக உள்ளேயிருந்து எடுத்துவந்த திராட்சைப் பழங்களையும் பிஸ்கத்தையும் பார்த்துக் கொண்டார். அந்த ஏகாம்பரம் பயல் எழுந்து வந்ததும் இதையெல்லாம் கொடுத்து அவனைச் சிரிக்க வைத்து விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டார், ஏதோ பிராயச்சித்தம் செய்து கொள்ளுகிறாற் போன்ற உணர்வும் உள்ளே ஊர்ந்து கொண்டிருந்தது. அந்த நினைவிலேயே அவருக்கு கண்ணைக் கண்ணை அயர்த்திக்கொண்டு வந்தது, ஐந்தாறு நிமிஷங்களுக்கெல்லாம் நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டார்.

ஒரு மணி நேரம்தான் தூங்கியிருப்பார் அவர். தூக்கம் கலைந்து கண்ணைத் திறந்தபோது அவர் பேரன் லச்சுமணனே அவருடைய பக்கத்தில் அமர்ந்திருந்தான்.



''அடகண்ணு, இங்கியா உக்காந்திருக்கே'' என்று கொஞ்சினார். அவன் வாய்க்கடையெல்லாம் சற்றுப் பழுப்பு மாவாக இருந்தது. அவர் தன் கையைப் பார்த்தார். திராட்சைப் பழம், பிஸ்கத்து ஒன்றையும் காணவில்லை. தூங்கும்போது அவர் கை பிரிந்திருக்கிறது. தூங்கி முடிந்து, பாட்டியைவிட்டு எழுந்து வந்த லட்சுணன் பண்டத்தைச் சாப்பிட்டு விட்டான்.

''பிஸ்கத்து தின்னியா?''

''ம்.''

''தாச்சைப்பளம் தின்னியா?''

''உம்.''

''அட என் போக்கிரிக்கண்ணு'' என்று பேரனை முத்தமிட்டார். அந்த உற்சாகத்தில் திராட்சைப் பழமும் பிஸ்கத்தும் அவர் கைக்கு வந்த வரலாறெல்லாம் அவர் ஞாபகத்துக்கும் வரவில்லை.

சாயங்காலம் பேரனை அழைத்துக்கொண்டு ஹோட்டலுக்குப்போனார். கோயிலுக்குப் போனார். திருநீறு இட்டுக் கொண்டு ஸ்வாமியை தரிசனம் செய்தார் வீட்டுக்கு வரும்போது இருட்டி விட்டது.

இரவு எட்டு மணியிருக்கும் அவர் மகன் சாப்பிட்டு விட்டு ஆபீசில் செய்கிற வேலை போதாதென்று வீட்டு வேலைக்காக எடுத்து வந்திருந்த கலெக்டர் ஆபீஸ் பைல்களை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போய்விட்டார். காயாப்பிள்ளை சாப்பிட்டுவிட்டு கையலம்பும்போது எதிர்க்கட்டு மீனாட்சி வந்தாள்.

''தாத்தா, இன்னிக்கிக் கோவிலிலே கதையாம். கேட்டு வரேன். ரண்டு பயலுவளும் தூங்கிப் போயிட்டுது. பார்த்துங்க'' என்றாள்.

''நல்லாப் பார்த்துக்கறேம்மா...இத வந்து சொல்லணுமா? போய்ட்டு வாம்மா'' என்றார் காயாப்பிள்ளை.

ஒன்பது மணியிருக்கும், அவர் மருமகள் தூங்குகிற லச்சுமணனை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போனாள். காயாப்பிள்ளை மனைவியும் முன் அறையில் படுத்து உறங்கிவிட்டாள்.

பிள்ளை கொட்டு கொட்டென்று பெட்ரூம் விளக்கின் முத்தொளியைப் பார்த்து விழித்துக்கொண்டே படுத்திருந்தார். ஒரே நிசப்தம். சுவர்க்கோழி மட்டும் கத்திக் கொண்டிருந்தது. அந்த சமயம்தான் ஒரு சிணுக்குக் குரல் கிளம்பிற்று. எதிர்க்கட்டில்தான். ஏகாம்பரத்தின் சிணுக்கு அழுகை கிளம்பிற்று. அம்மா, அம்மா, என்று அழ ஆரம்பித்தான். அம்மாவைக் காணாத துக்கம் பயமாக மாறி பெரிதாக அழத் தொடங்கிவிட்டான். காயாம்பிள்ளைக்கு எரிச்சலாக வந்தது. எழுந்து போய்ப் பார்த்தார். குழந்தை எழுந்து உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். ''தூங்கு தூங்கு, அம்மா வந்துடுவாங்க'' என்றார். பிள்ளை... பையன் காதில் விழவில்லை. வீல் என்று ஆரம்பித்தான். தூங்கு தூங்கு, அம்மா கோயிலுக்குப் போயிருக்காங்க. இதோ வந்துடுவாங்க என்று சொல்லிப் பார்த்தார். வீட்டிலேயே அவள் இல்லை என்று கேட்டதும் பெரிய ஸ்தாயியில் ஆரம்பித்து விட்டான்.

''என்னாது?'' என்று எழுந்து நடந்து வந்தாள் காயாப்பிள்ளையின் மனைவி.

''அவ அம்மா கதை கேக்கப் போயிருக்கு.''

''கதையா? கல்லு கல்லா புள்ளையாப் பெக்கறவங்களுக்கு கதையும் பாட்டும் இல்லாமதான் குடி முழுகிப் போச்சா! இஞ்சயாரு பாத்துப்பாங்கன்னு உட்டுட்டுப் போறாளாம். என்ன நெஞ்சளுத்தம். இதைப் பாருங்க—முன்னாலெ கொண்ட கோயில்லெ கொண்டு விட்டுட்டு வாங்க. இங்கே என்ன தூங்கறதா, இந்தப் பலாக்கணத்தைக் கேட்டுக்கிட்டிருக்கறதா, நல்ல ஆகாத்தியக்காரங்கடி அம்மா'' என்றாள் சாலாட்சி.



காயாப்பிள்ளை சிவனே என்று ஏகாம்பரத்தைப் பார்த்து, வா அம்மாகிட்ட கொண்டு விடறேன் என்றார். அழுது கொண்டே எழுந்தான் அவன். பெட்ரூம் விளக்கின் ஒளியில் பளபளவென்று அந்த உடம்பையும் அர்ணாக் கயிற்றையும் நாய்க்காசுகளையும் பார்த்ததும் அவருக்குப் பற்றிக் கொண்டு வந்தது. தரதரவென்று அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே வாசலுக்குப் போனார். படியில் அதே வேகத்துடன் இறக்கினார். ஒரு தடவை கால் தவறி விழுந்தான் அவன். வீல் என்று அழுதான்; தூக்கு தூக்கு என்றான். பிள்ளைக்கு எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுகிறாற் போலிருந்தது. ''தூக்கு... தூக்கு!''...அழுது கொண்டே இந்த வேண்டுகோள் வேறு.

சந்தில் கும்மிருட்டு, குறுகலான சந்து. இரண்டு பக்கமும் சாக்கடை. ''தூக்கு தூக்கு, மயம்மாயிக்கு மயம்மாயிக்கு...''

பிள்ளை பல்லைக் கடித்தவாறே அவனைத் தூக்கிக் கொண்டார். அந்த மெல்லிய வழவழவென்ற உடல் உடலில் பட்டதும் அவருக்கு வெறி வந்துவிட்டது. இரண்டு கைகளாலும் இறுக அணைப்பதுபோல் இறுக்கினார். நெறிசல் தாங்காமல் குழந்தை அழுதது. போண்டம் போண்டாம்டா கண்ணு என்று கன்னத்தை நன்றாகக் கிள்ளினார். அளுகை ஊரே கேட்கும், அப்படி ஓங்கிற்று. வீதி வந்ததும் வேண்டாம் வேண்டாம்...என்று கொஞ்சிக் கொண்டே நடந்து கதை நடக்கிற இடத்தில் வந்தார். பையனின் கூச்சலைக் கேட்டு, எல்லாரும் திரும்பினார்கள். பாகவதர் நிறுத்தி பார்த்தார். கூட்டம் முழுவதும் பார்த்தது. வெளியே எடுத்துவிட்டுப் போமேய்யா என்று ஓரிருவர் முகத்தைச் சுளித்தார்கள். கூட்டத்தில் எங்கேயோ இருந்த மீனாட்சி அவசரம் அவசரமாக எழுந்து வந்தாள். ''எளுந்து ஆரமிச்சான்...எடுத்து வந்தேன்...'' என்று குழந்தையைக் கையில் கொடுத்தார். கதை கேட்க விருப்பமில்லை.

திரும்பி நடந்தார். அவருக்கு இப்போது அழுகையே வந்துவிட்டது. குழந்தையைச் சாதாரணமாகக் கிள்ளவில்லை. கிள்ளின வெம்பல் கன்னத்திலும் துடையிலும் தெரிந்தன.

சந்தில் வரும்போது இருளில் ஓங்கி ஓங்கி தன் மார்பில் குத்திக் கொண்டே வந்தார், இப்படி எச்சிக்கலை நாயாப் போயிட்டேனே-மத்யானம் புத்தி வந்தாப்பல இருந்துதே. மறுபடியும் கோபம் வந்திரிச்சே'என்று தன் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டார். கழுத்தில் குத்திக்கொண்டார். அழுகை வரும் போலிருந்தது. உள்ளே போக மனமில்லாமல் வாசற் படியிலேயே உட்கார்ந்து விட்டார். தெரு, மனசு எல்லாம் ஒரே இருளாகக் கவிந்துகிடந்தன.

## 3

## மூன்றாம் ஆழாக்கு

குழந்தையை சமாதானம் செய்துவிட்டு மீனாட்சி மறுபடியும் கதை கேட்க உட்கார்ந்தாள். ஆனால் அவளுக்குக் கதை கேட்கிறாற் போலவே இல்லை. மனதில் என்னமோ நெருடிக் கொண்டேயிருந்தது. அழுகை ஓய்ந்து விட்டாலும் சற்றைக்கொரு தடவை கேவிக்கொண்டே அவள் மடியில் உட்கார்ந்து சிறிது நேரம் கதை கேட்டான் அவன். அதாவது பாகவதரையும் அவர் கழுத்தில் தொங்கும் மாலையையும், காதுக் கடுக்கனையும், ஜரிகை வேட்டிப் பளபளப்பையும் பார்த்துக்கொண்டே இருந்தான். அது அலுத்துப் போனதும் பக்கத்தில் தூங்குகிற பாட்டியைப் பார்த்தான். அந்தப் பாட்டியின் பக்கத்தில் ஒரு கிண்டி. கிண்டி மூக்கை ஒரு சிறு துணிமீது சாய்த்து, அந்த ஈரத்தால் கண்ணைத் துடைத்தாள் பாட்டி. அடிக்கடி அவள் அந்த மாதிரி செய்ய வேண்டியிருந்தது. தூக்கத்துக்கும் ஈரத் துணிக்கும் அத்தனை போட்டி, அதெல்லாம் ஏகாம்ப



ரத்துக்குத் தெரியவில்லை. வாயிற் கட்டை விரலைப் போட்டுக் கொண்டே அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கன்னத்தில் சற்று கருரத்தம் கட்டினாற் போல படர்ந்திருந்தது. ஏன் ஏன் என்று அவள் உள்ளுக்குள்ளே ஒரு கேள்வி. சடேரென்று அவளுக்கு ஞாபகம் வந்தது. கொல்லைக்கட்டில் குடியிருக்கும் வாத்யார் கங்காதரசாமியின் மனைவி. ''அது பெரிய முரட்டுக் கிளம். அது உச்சந்தலையிலே இருக்கற வழுக்கையிலேந்து காலிலே இருக்கிற சொத்தை நகம் வரைக்கும் அசிகை' என்று அவள் எப்போதோ ஒரு தடவை சொன்னாள். குழந்தைகள் விஷயமாகவும் சொல்லவில்லை அதை. கோகுலாஷ்டமியன்று விடியற் காலையில் எழுந்து கோல மாவை நீரில் கரைத்து வாசலில் இருந்து கொல்லைவரைக்கும் மீனாட்சி கண்ணைப் பறிக்கக் கோலம் போட்டிருந்தாள். அதிலே அவளுக்கு ஒரு தனி லாகவம், ஆற்றல் எல்லாம் உண்டு, கங்காதரசாமியின் மனைவிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அப்போதுதான் இந்த எச்சரிக்கை செய்தாள். ''அந்தக் கிளத்தோட கண்ணெதிரே ஒண்ணும் செய்யாதீங்க. கண் அவ்வளவு நல்லதில்லே, அதான் சொல்லி வைக்கிறேன்'' என்றாள் அவள். வெகு காலமாக குடியிருக்கிற விரோதத்தினால் சொல்லுகிறாள் என்று நினைத்தாள் மீனாட்சி. அதை அவ்வளவாக லட்சியம் செய்யவில்லை.

திடீர் என்று மீனாட்சிக்கு இந்த ஞாபகம் வந்தது, குழந்தை அழுகிற அழுகையைப் பார்த்தாள். கன்னத்தில் படர்ந்த கறுப்பைப் பார்த்தாள். ஏதோ சந்தேகம் வந்து உடம்பு முழுவதும் பார்த்தாள். தொடையில் வேறு கறு ரத்தம். அடித்துவிட்டானா, கிள்ளிவிட்டானா பாவி! இந்தக் குழந்தை என்ன செய்தது உன்னை என்று மனசுக்குள்ளேயே கேட்டுக் கொண்டாள். கோபமும் துக்கமும் தொண்டையைக் கட்டிக்கொண்டு வந்தன. குழந்தை மடியில் படுத்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான்.

தூக்கத்திலேயே எப்போதாவது 'ஹ்...' என்று ஒரு கேவல் வரும். அவனைப் பார்த்துக் கொண்டே அவன் தலையைக் கோதினவாறே உட்கார்ந்திருந்தாள் அவள். திடீர் என்று ''ஹர ஹர மகாதேவா'' என்று கூட்டம் முழுவதும் கத்துவது கேட்டது. கதை முடிந்து விட்டாற் போலிருக்கிறது. நிமிர்ந்தாள். மணியோசை கேட்டது. படத்துக்குக் கற்பூரம் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு எழுந்தாள் மீனாட்சி. கணவர் செல்லையாவுடன் சேர்ந்துகொண்டாள்.

''தூங்கிப் போயிட்டானா பய? தாத்தா கொண்டு விட்டாரே அழுதானாமா?'' என்று மீனாட்சியின் தோளில் சாத்தியிருந்த குழந்தையைப் பார்த்துக் கேட்டார் செல்லையா.

''நாளையிலேர்ந்து நான் கதைக்கு வரப்போறதில்லை.''

''ஏன்?''

''ஆமா, குழந்தையை எடுத்துக்கிட்டு வரவாண்டாம், வரவாண்டாம்கிறீங்க. இத பாருங்க, குழந்தை உடம்பை. சரி, குழந்தை அழாமலா இருக்கும்? அதுக்காக இப்படியா போட்டுக் கிள்ளறது?'' என்று தெருவெளிச்சத்தில் குழந்தையைக் காட்டினாள். செல்லையா கையில் டார்ச்சை உயர்த்தி புத்தானை அமுக்கிக் குழந்தை மீது வீசினார்.

''பூரானோ என்னமோ கடிச்சாப்பல்ல இருக்கு'' என்றார்.

''பூரான் கடிச்சா—தடிக்கும். இப்படி கருரத்தம் கட்டாது. எனக்கு என்ன பைத்தியமா புடிச்சிருக்கு?''

''என்ன நீ அப்படிச் சொல்றே?''

''எப்படிச் சொல்றேனோ—எனக்கு நிச்சயமா அவரு அடிச்சிருக்கார்னுதான் தோணுது. இதபாருங்க, நான் கேக்கப்போறேன். நீங்க ஒண்ணும் குறுக்க விழுந்து என்னை இரையாதீங்க.''



''நல்லாத் தெரிஞ்சுக்காம கேக்கலாமா?''

''கன்னத்தைப் பார்த்தாலே தெரியுதே.''

''அப்படிச் சொல்லாதே. போனமாசம் எங்க ட்ரஸ்டி முத்தையாவோட மகனுக்கு திடீர்னு உடம்பு முழுக்க இப்படி தோல்மேலே கட்டி கட்டியா இருந்தது. ஏதாவது ஒரு இடத்திலே விரலாலே அழுத்தினாலெ அங்க ரத்தம் கட்டிக்கும், அப்புறம் டாக்டர்கிட்ட போய்ப் பார்த்தாங்க. 'போஷாக்கு இல்லே, கால்சியம், வைட்டமின்-இரண்டும் இல்லே. அதனாலே தான் ரத்தக் குளாய்ங்க தெறிச்சுப் போயி இப்படி வருதுன்னாராம்' டாக்டரு. மருந்து கொடுத்தாங்க. சரியாயிடிச்சு.'' என்று சமாதானம் சொன்னார் செல்லையா.

''என்னமோ—இதைத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் ஆகணும் எனக்கு. போஷாக்கு இல்லியாம்...அதுக்காக இப்படியா கேவும்?'' என்று கேட்டாள்.

''சரி. ஜாக்ரதையா பார்த்துப்போ'' என்று டார்ச் வெளிச்சத்தை வீசினார் செல்லையா. சந்து வந்துவிட்டது.

□

உள்ளே போகாமல் வாசற்படியிலேயே உட்கார்ந்திருந்த காயாப்பிள்ளைக்கும் உலகமே இருண்டு கிடந்தது. நட்சத்திரங்களைப் பார்த்தார். எல்லாம் குழந்தைகளைப் போலிருந்தன, அவர் மனதுக்கு தன் கையில் அகப்பட்டுக் கொள்ளாமல் ஓடிப்போய் எங்கோ தூர நின்று அவரைப் பார்த்து 'இப்ப என்ன செய்வே' என்று சிரிப்பது போலிருந்தன. சில நட்சத்திரங்கள், அவரைப் பார்க்கவே பயந்து, கண்ணைப் பொத்திப் பொத்திப் பார்ப்பது போல் தோன்றின.

வேறு எங்கேயாவது போகவேண்டும்; போவதுபோல் தோன்றிற்று. கதை அவருக்குப் பிடிக்காது. அவர் கேட்காத கதையா, படிக்காத கதையா? அதுமட்டும் இல்லை. கூட்டத்தைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. ஆகவே சந்திலேயே வீதிப்பக்கம் போகாமல், எதிர்ப்பக்கம் நடந்தார். கல்லெறி தூரம் நடந்ததும், ஒரு திண்ணையில் பிள்ளையார் ஒன்று உண்டு. மேலேயோ பக்கவாட்டி லேயோ, சுவரோ மண்டபமோ ஒன்றுமில்லாமல், மழை யிலும் வெயிலிலும், பனியிலும் நனைந்து காய்ந்து கொண்டு உட்கார்ந்திருக்கிற, பிள்ளையார். அவர் முன்னால் பத்துத் தோப்புக்கரணம் போட்டார். வள் என்று ஒரு நாய் குரைத்தது. இத்தனை நேரத்துக்குப் பிறகு பிள்ளையார்க்கிட்ட என்னையா வேலை என்று கத்துவது போல் குரைத்தது. பயத்தில் அவருக்கு கன்னம், கை காலெல்லாம் மணல் முளைத்துவிட்டது. விறு விறுவென்று திரும்பி நடந்தார். நாயும் ஓய்ந்து விட்டது.

வாசல் கதவை யாரும் சாத்தவில்லை. மெதுவாக படி யேறி நடையில் இருந்த திண்ணையிலே படுத்துக் கொண்டார். மனசில் உள்ளதை யாரிடமாவது சொல்ல வேண்டும் போலிருந்தது யாரிடம் சொல்கிறது? மனைவி சாலாட்சியிடம் சொல்லலாம். ஆனால் அதுக்கு எங்கே இதெல்லாம் புரியப் போகிறது? இந்த விஷயங்கள் ஒன்றுமே அதுக்குப் புரிவதில்லை. சமையல், சாப்பாடு, நகை இதைப் பற்றித்தான் பேசும். அம்மனுக்கு ரோஜாப் பூப் பாவாடை கட்டி அலங்காரம் பண்ணியிருந்தாங்க என்று கோவிலுக்குப் போய்விட்டு நாலு நாழி சொல்லும். ஆத்மீக விஷயங்கள் இந்த ரோஜாப்பூப் பாவாடைகளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறதற்குமேல் அதற்கு மண்டையில் ஏறினதில்லை. சொன்னாலும் புரியாது சமர்த்துக் கொஞ்சம் குறைவு. ஆகவே ஆங்காரமும் சுயமரியாதையும் ஜாஸ்தி. தனக்கு ஈடாக யாருமே கிடையாது...பேச்சில், காரியத்தில் என்று பேசிக்கொண்டிருக்கும். அப்பா



அம்மாவே அதைத் திருத்த முடியாமல் கழுவிவிட்டு விட்டார்கள். அதோடு போய் என்னத்தைச் சொல்லு கிறது? ஆகவே தன்னையே இரண்டு மனிதனாய் பண்ணிக் கொண்டு, அந்த இரண்டாம் மனிதனிடம் தன் பாபங் களைச் சொல்லி அழுதார் பிள்ளை. சிறிது நேரம் அந்த நினைவெல்லாம் கலைந்து மனது கொஞ்சம் சாந்தப் பட்டது.

வழக்கம்போல மனது எங்கெங்கேயோ அலைந்தது. ஒரு வாரம் முன்னால் மொட்டை மாடியில் கொத்தனார், வேலை செய்துவிட்டுப் போனார். காரையெல்லாம் பெயர்ந்து குண்டும் குழியுமாக இருந்ததைக் கெல்லிக் கொத்தி சிமிண்ட் போட்டு தளவரிசை போட்டுவிட்டுப் போனார். அது காய்ந்து கெட்டிப்படுகிற வரையில் காப்பாற்றுவது பெரும்பாடாக ஆகிவிட்டது

அதோ யாரு?...யாரோ அங்கே உட்கார்ந்திருக்கிறாற் போலிருக்கிறது. ஆமாம் ஏகாம்பரம் பயல்தான். ஒரு ஆணியை எடுத்து தளவரிசையில் குத்தி நோண்டிக் கொண் டிருந்தான். பதறிப் போய் அருகில் ஓடிப் பார்த்தார். என்ன அக்ரமம்? புதிதாக போட்ட தளவரிசையில் சிமிண்டு பால் போட்டு வழவழ வென்று தேய்த்த தேய்ப்பில் ஆணி யில் கொத்தி அங்குமிங்கும் பொக்கையாக அடித் திருந்தான் பயல். அவ்வளவுதான். திடீர் என்று உடல் அதிர்ந்தது. உள்ளே பொங்கிற்று. ஓங்கி அறை விட்டார் பிள்ளை. நாலு விரலும் முதுகில் படிந்து விட்டது. அலறலைக் கேட்டு மாடிப்படி ஏறி ஓடிவந்து பார்த்தார் செல்லையர்! அப்படியே வெட்கிப்போய் நின்றார் காயாப் பிள்ளை. ''இதுக்காகவா இப்படி அடிச்சிங்க குழந்தையை, எத்தனை செலவானாலும் பரவாயில்லை. நான் இன்ன சாயங்காலத்துக்குள்ளார கொத்தனாரை அழச்சிட்டு வந்து பழுது பார்த்து முன்னே மாதிரியே பண்ணிக் கொடுத்துடறேன்'' என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு போகிறார் செல்லையா.

குழந்தையை அடித்ததற்காக, செல்லையாவின் மனைவி ஆத்திரம் தாங்காமல் ஓடிவருகிறாள். கையில் தோசை திருப்பி, உனக்கு நரகம் அப்பறம் கிடைக்கட்டும். இப்ப இதை வாங்கிக்க என்று சுடச்சுட தோசை திருப்பி யால் காயாப்பிள்ளையின் தோள்பட்டையில் ஒரு இழுப்பு இழுத்துவிடுகிறாள் அவள்.

சுரீர் என்றது. பிள்ளை விழித்துக் கொண்டார். தோள் பட்டையைத் தேய்த்தார். கடுப்பாக கடுத்தது. எறும்போ கொசுவோ தெரியவில்லை. சேப்பெறும்பாகத் தான் இருக்க வேண்டும். அதைவிட கனவுதான் அவரை இம்சைப்படுத்தியது சொப்பனத்தில் வேறு குழந்தையை அடித்தோமா என்று திடுக்கிட்டு நின்றார்.

வாசல் கதவைத் தாழிட்டார்.

மறுபடியும் நடைத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்.

எப்படி இந்த மாதிரி சொப்பனம் வந்தது? தீராத ஆசையெல்லாம் சொப்பனத்தில் செய்து தீர்த்துக் கொள் வார்களாமே—? அது வா?...அப்படியானால் நான் இன்னும் இந்தக் குழந்தையை அடிக்கவேண்டும் என்றா ஆசைப்பட்டேன்? அரைமணியாச்சே அந்த ஆசை செத்துப்போய்? ஈச்வரா—முருகா.

கதவை யாரோ தட்டினார்கள். திறந்தார்.

டார்ச் விளக்கின் ஒளி குப்பென்று முகத்தில் அடித்தது.

நடையில் வந்ததும் வராததுமாக, "ஏன் தாத்தா, குழந்தையை அடிச்சிங்களா?" என்று வெறுப்பாக ஒரு குரல் கேட்டது.

மீனாட்சியின் குரல்தான்.

காயாப்பிள்ளைக்கு முகத்தில் யாரோ இருளில் ஓங்கி அறைந்தாற்போலிருந்தது. சற்று ஆடினார்.

"அம்மா மீனாட்சி, செல்லையா— உங்களுக்குக் கோடி புண்யம் உண்டு. தயவு செய்து நாளை சாயங்காலத்துக் குள்ளார வீட்டைக் காலி பண்ணிடுங்க" என்று கும்பிட் டார் காயாப்பிள்ளை. கிடுகிடு வென்று திரும்பி கூடத் தின் வழியாக முன் அறையில் உள்ள கயிற்றுக் கட்டிலில் விழுந்தார். கூ கூவென்று குழந்தை மாதிரி அழுதார், வாய்க்குள்தான்.



மறுநாள் சாயங்காலம் செல்லையா ஒரு வண்டியில் சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தார். எப்படித்தான் வீடு கிடைத்ததோ?

திக் திக் கென்று காயப்பிள்ளை, சாமான்கள் ஏறு வதைக் பார்த்துக் கொண்டே நின்றார்.

## 4

## நாலாம் ஆழாக்கு

அப்போது நாலு மணி இருக்கும்...காயப் பிள்ளையின் மகன் இன்னும் ஆபீசிலிருந்து வரவில்லை.

வாத்யார் கங்காதரசாமியும் பள்ளிக்கூடத்திலிருந்து வரவில்லை.

"என்னங்க திடீர்னு காலிபண்றீங்க?" என்று கங்கா தரசாமியின் மனைவி, மீனாட்சியைக் கேட்டாள்.

"முன்னாடி சொல்லவே இல்லியே" என்றார் காயாப் பிள்ளையின் மருமகளும்.

"என்னாது அப்படி புசுக்குனு?" என்று கேட்டாள் சாலாட்சியும். அவர்கள் கேட்ட மாதிரியிலிருந்து அவர் களுக்கு காரணம் தெரியாது என்று மீனாட்சிக்குத் தோன்றிற்று.

"நல்ல இடமாகக் கிடச்சுது. திடீர்னு இப்படிக் கிடைக்குமா" என்று மழுப்பிவிட்டாள் மீனாட்சி. முதலில் என்னமோ குழந்தையின் கேவலைப் பார்த்து

அவளுக்கு மனசு கொதித்ததே தவிர, மற்றபடி செல்லை யாவைப் போலவே அவளும் பெரும்போக்குத்தான். அல்ப சொல்பமாக வம்பை வாங்கமாட்டாள். வந்த வம்பையும் விடேன் கொடேன் என்று பிடித்துக் கொண்டு தொங்கவும் மாட்டாள்.

காயாப்பிள்ளை முன் அறையின் சன்னலிலிருந்து வண்டியில் சாமான்கள் ஏறுவதைப் பார்த்துக் கொண்டு நின்றார். பெட்டி, கங்காளம், வெந்நீர், அண்டா அகப் பைக்கூடு, கறுப்பாக மண்ணெண்ணெய்த் தகரங்கள், இரண்டு ஸ்டூல், அரிவாள்மணை, கொடிக்காம்பு, வாரு கோல், இரண்டு கள்ளிப்பெட்டி, பச்சையும் நீலமுமாக இரண்டு ட்ரங்குப் பெட்டி—எல்லாம் மொட்டை வண்டி யில் ஏறி, பயணம் கிளம்பத் தயாராகக் காத்துக்கொண்டு நின்றன.

''மத்யானம் வரைக்கும் ஒரு வார்த்தை சொல்லிச்சா, பாத்திங்களா, அராமித்தனத்தை — ஆம்படையானும் பொண்டாட்டியுமா லொங்கு லொங்குண்ணு படம் பாடி யெல்லாம் ஏத்துறாங்களே, ஒரு வார்த்தை சொல்லணுமே'' என்று சாலாட்சி பின்னால் நின்று சொல்லிக் கொண்டி ருந்தாள். அவள் இடுப்பில் சூணா வயிறு லச்சுமணன் உட்கார்ந்திருந்தது.

திரும்பினார் பிள்ளை.

''போவுது போ. ஒளிஞ்சுது. வாயை மூடிக்கிட்டு இரு......'' என்றார்.

என்னமோ தோன்றவே பெட்டியைத் திறந்து ஒரு ரூபாயை எடுத்தார். மனைவியிடம் கொடுத்தார்.

''இந்தா இதபாரு அதுங்க போறப்ப எரிச்சலா ஏதா வது சொல்லும். இதை போய் எடுத்துக்கிட்டு குழந்தைக்கு ஏதாவது வாங்கிக் குடு. நீயும் வேணும்னா ஏதாவது வாங் கித் தின்னு.''



''ஆமாங்க...துக்கிரிங்க...போறப்ப ஏதாவது சொல் லும். நான் குழந்தையை எடுத்துக்கிட்டு ஒரு நாலு நாளி அப்பாலே போய்ட்டு வரேன்'' என்று ரூபாயை வாங்கிக் கொண்டு பேரப் பிள்ளையுடன் அப்பால் நகர்ந்தாள். அவள் வாசலில் இறங்கிப் போவது தெரிந்தது.

பிள்ளைக்கு ஆச்சரியம் தாங்கவில்லை...ஒரு ரூபாய் என்ன, எட்டணா கொடுத்தாலே அதுக்கு வீட்டில் கால் தரிக்காது. கடைத் தெருவிற்குக் கிளம்பிவிடும். வீடு மாற்றுகிற இந்த வண்டி மாதிரியே கண்டதைப்போட்டு வயிற்றை நிரப்பும். ஒழியட்டும், என்று விடுதலையுடன் பெருமூச்சு விட்டு நின்றார் பிள்ளை.

கூடத்தில் பேச்சு கேட்கிறது.

''கட்டாயம் வாங்கம்மா'' என்று மீனாட்சியின் குரல். கங்காதரசாமியின் மனைவியிடம் சொல்லிக் கொள்கிறாள் போலிருக்கிறது.

''வரேம்மா.''

''ஏண்டா ஏகாம்பரம், சொல்லிக்காமதானே கிளம் பினே. நான் இனிமே உன்னோட பேசலே போ...'' என்று காயாப்பிள்ளையின் மருமகள் குரல் கேட்கிறது.

''தாத்தா, போய்ட்டு வரேன்...தாத்தாட்ட சொல்லிக் கடா. போய்த்து வறேன்னு...சொல்லு. கும்புடு'' என்றாள் மீனாட்சி. திரும்பிப்பார்த்தார் காயாப்பிள்ளை. இடுப்பில் இருந்த ஏகாம்பரம் கும்பிடு என்று சொன்னதும் அவள் இடுப்பிலிருந்து தர தர வென்று இறங்கி அவர் முன் னாலே குப்புற விழுந்து நீண்டு நெடுஞ்சாண்கிடையாக வணங்கிற்று, பளபளவென்று அந்த முதுகும் காலும், பூசனிப்பத்தை மாதிரி தளதளவென்று காலும்...காலில் கொலுசு வேறு...காயாப்பிள்ளைக்கு நெஞ்சில் பிடித்து அமுக்குகிறது, அப்படி ஒருவலி.

''போய்ட்டு வரேன். வீட்டுக்கு வாங்கன்னு சொல்லு.''

''போய்த்து வரேன். ஊத்துக்கு வாங்க.''

அவள் திரும்பி அகன்ற கையோடு செல்லையா வந்தார்.

"தாத்தா...இந்த மாசம் வாடகை ஒன்பது ரூவா பாக்கி...ஆனா திடீர்னு கிளம்பறதினாலே முழுமாச வாடகையும் கொடுத்திடறேன்" என்று பதினாறு ரூபாயை வைத்தார்.

'நான் போய்ட்டு வரேன்' என்று கிளம்பிவிட்டார். பிள்ளை பதிலே பேசவில்லை.

உள்ளே யாரும் இல்லை. அவர் மருமகள் முதல் எல்லோரும் போகிறவர்களை வழியனுப்ப வாசலுக்குப் போய் விட்டார்.

சட்டென்று பிள்ளை சாவிக்கொத்தை எடுத்துக் கண்ணாடிப் பீரோவைத் திறந்தார். அதிலே கீழே உள்ள கள்ள அறையை இழுத்தார்...பழுக்கா பெட்டியைத் திறந்தார். அதிலே அந்த நாளில் அவர் போட்டுக்கொண்டிருந்த சிகப்புக் கடுக்கன், வெள்ளி மோதிரம், நம சிவாயம் எழுதிய ஒரு முக்கால் பவுன் மோதிரம் மூன்றும் இருந்தன. அவர் சொந்தமாகச் சேர்த்து வைத்த ஆறு நூறு ரூபாய் எல்லாம் இருந்தன இந்த ரூபாயை அவர் தொடுகிறதே வழக்கமில்லை. ஒன்று, இரண்டு, நாலு, ஐந்து என்று வெகு வருஷமாகச் சேர்த்த பணம் அது. அவர் கையால் அதை செலவழிப்பதாகவும் அவருக்குத் திட்டம் கிடையாது. செலவழிக்கக் கூடாது என்றுதான் சேர்த்து வைத்திருந்தார். அதை. அதை அவர் மகன்தான் செலவு செய்ய வேண்டும். அவர் போன பிறகு ஈமக்கடன்களுக்காக மகன் செலவழிக்க வேண்டும் என்று அவா வெகு நாள் திட்டம் அது. அதாவது வழிச் செலவுக்கு-பெரிய வழிச் செலவுக்குச் சேர்ந்து கொண்டிருந்த பணம் அது. அந்த அறுநூற்றுச் சொச்சத்தையும் கையில் எடுத்து மடியில் கட்டிக்கொண்டு கள்ள அறையை உள்ளே தள்ளி, பீரோக் கதவையும் சாத்தினார்.



ஜன்னல் வழியாகப்பார்த்தார். வண்டி போய்விட்டது சிறிது நேரம் அப்படியே நின்றார்.

டக் கென்று சத்தம் கேட்டது. மருமகள் காப்பியை வைத்துவிட்டு நகர்ந்தாள். மாமனாரோடு அவள் பேசுகிறதில்லை.

"செல்லையா எல்லாம் போயிட்டாங்களா?"

"ம்."

"எந்தத் தெருவுக்குக் குடிபோறானாம்?"

"தையக்காரத்தெரு—அஞ்சாம் நம்பர் வீடாம்."

"ஓகோ."

மருமகள் போய்விட்டாள். காப்பியைச் சாப்பிட்டு விட்டு எழுந்தார் காயாப்பிள்ளை. அறையைச் சுற்றி ஒரு தடவை நோட்டம் விட்டார். கறுப்பாக ஒரு புகைப்படம், அந்தக் காலத்தில் எடுத்த படம். அவருடைய தகப்பனாரின் படம்-உயிரோடு எடுத்த படம் அல்ல. உயிர்போன பிறகு நாற்காலியில் உட்கார்த்தி எடுத்த படம். அவர் தாயாருக்கு அந்தப் படமும் கிடையாது-மனசிலே உள்ள படம் தான். எதிர்ச்சுவரில் அவர் மகனும் மருமகளும் கலியாணக் கோலத்தில் நின்ற படம் ஒன்று தொங்கிற்று. அதையும் ஒரு தடவை பார்த்தார்.

வெளியே கிளம்பினார். வாசற்படியில் நின்றார். மருமகனிடம் சொல்லிக்கொள்ளலாமா என்று சற்று நின்றார். வேண்டாம் என்று கீழே இறங்கினார். சந்து முழுவதும் நடந்து வீதித்திருப்பம் வந்ததும் திரும்பிப்பார்க்கவேண்டும் போலிருந்தது, பார்க்காவிட்டால் என்ன என்று கேட்டுக்கொண்டே சற்று நின்றார் ஒருநிமிஷம் இருக்கும் வீதியிலே நடந்துவிட்டார். திரும்பிப் பார்க்காமலேயே நடந்துவிட்டோமா என்று அவருக்கே ஆச்சரியம் தாங்கவில்லை.

கடைத்தெருவுக்குப் போனார். காசுக்கடைக்குள் நுழைந்தார். என்ன வாங்குவது என்று தெரியவில்லை.

''என்னங்க வேணும்?''

''குழந்தைக்கு நகைங்க கொஞ்சம் பார்க்கணும்,''

என்ன வாங்குவது என்று புரியாமலிருந்தவருக்கு இப்போது எதை வாங்குவது என்று புரியவில்லை. அப்படி ஒரு பெரிய ஜாபிதா வகை அடுக்கினான் அவன். கடைசியில் நாலு பவுனில் ஒரு சங்கிலி, கைக்கு இரண்டு ஜோடி வளையல்கள், காதுக்கு ஒரு ஜதை ஜிமிக்கி, காலுக்குக் கொலுசு ரோக்கா போட்டபோது ஐநூத்திரண்டு ரூபாய் ஆகியிருந்தது. பணத்தைக் கொடுக்கும்போது கல்லாப்பெட்டிக்குப் பின்னால் உள்ள கண்ணாடி பீரோவில் குத்து விளக்கு பிள்ளையார்கள், லக்ஷ்மி—சரஸ்வதிகள், வேல்கள் எல்லாம் வைத்திருந்ததைப் பார்த்தார்.

''அது என்ன விலைங்க?''

''எதுங்க?''

''அதோ அந்த வேலு—வெள்ளியா...தங்கமா?...''

''வெள்ளிதான்; முலாம் கொடுத்திருக்கு.''

''வெலெ?''

''சல்லிசுதாங்க. நாலரைரூபா...''

''எடுங்க.',

எல்லாவற்றையும் மடியில் கட்டிக்கொண்டு நடந்தார். தையக்காரத் தெரு அஞ்சாம் நம்பர் வீட்டுக்குள் நுழைந்தார். சின்ன வீடு.

''மீனாட்சியம்மா!''

''யாரு?''

' நான்தான்.''

''அடெடெ! வாங்க தாத்தா.''

செல்லையா, மீனாட்சி இரண்டு பேருமே வரவேற்றார்கள். ஏகாம்பரம் வந்து, ''தாத்தா'' தாத்தா—வந்திட்டாங்க —தாத்தா வந்திட்டாங்க''என்று சிரித்தான்.

''தனி வீடா?''



''ஆமாம் தாத்தா.''

''எலிப்பாழா இருந்தாலும் தனிப்பாழா இருக்கணும்னு வந்திட்டாப்பல இருக்கு.''

''சட்டுன்னு கிடைச்சுது.''

''ஆமாமா, தனிப்பாழு எப்பவுமே நல்லது அசிகை இருக்காது. ஆங்காரம் இருக்காது'' என்றார் பிள்ளை.

''அப்படியெல்லாப் சொல்லாதீங்க தாத்தா''

''இஞ்ச வாடா எலே'' என்றார் காயப்பிள்ளை.

''ஏகாம்பரம் அருகில் வந்தான் மடியிலிருந்த சங்கிலியை அவன் கழுத்தில் போட்டார். வளையைக் கையில் போட்டார்.

''என்ன தாத்தா இது?'' என்றாள் மீனாட்சி.

''என்ன மாயா இது?''—செல்லையா.

பிள்ளை பதில் பேசாமல் காது ஜிமிக்கையும், கொலுசையும் போட்டார். ' இந்தாடா, இதைக் கையிலே வச்சுக்க'' என்று வேலைக் கையில் கொடுத்தார். ஏகாம்பரம் அதை வாங்கிவைத்துக் கொண்டு நின்றான். பிறகு நாக்கில் வைத்து ருசிபார்த்தான்.

,'யப்பா முருகா'' என்று குழந்தை மாதிரி அழத் தொடங்கினார் காயப்பிள்ளை.

''என்ன தாத்தா இது?''

''உமியை ஊதிப் பார்த்தேன், இத்தினி காலமா. போகலே. சலிக்க சலிக்க உமி கொஞ்சம் இருந்துகிட்டே இருந்தது —இப்ப எல்லா உமியும் போயிட்டுது... அவல்தான் மிச்சம் என்று குழந்தையை வாரி இறுக அணைத்துக் கொண்டார். உச்சி முகர்ந்தார். கண்ணில் தாரை தாரையாக வடிந்தது,

''மீனாட்சி, செல்லையா, இத பாருங்க—இந்தப்பிள்ளையை அசிகையினாலே கொன்னுடுவேனோங்கற பயத்தினாலே தான் திப்புன்னு காலிபண்ணுங்கன்னு கத்தினேன்.

நான் கொல்ல மாட்டேன். அடிக்க மாட்டேன்.''

''இதெல்லாம் இப்ப என்னாத்துக்கு தாத்தா?''

''இத பாருங்க. என் மவன் என்னைத் தேடிக்கிட்டு வருவான் ராத்திரியோ, காலமேயோ— நான் இஞ்ச வரவே இல்லேன்னு சொல்லிடுங்க... வந்தேன்னு சொல்லப் படாது உங்க புள்ளை மேலே ஆணையாச் சொல்றேன்... ஆமாம் ...இஞ்ச வாடா கண்ணு, ஒரு முத்தா கொடு'' என்று ஏகாம்பரத்தை இழுத்து ஒரு தடவை முத்தமிட்டார். வெளியே விறுவிறுவென்று நடந்தார்

செல்லையா பின்னால் ஓடி வந்தான். ''என்னோட வராதே செல்லையா. வீட்டையே விட்டு கிளம்பியாச்சு. நீ என்ன?'' என்று கடிந்து கொண்டார். திடுக்கிட்டு நின்றார் செல்லையா.

விறுவிறு வென்று நடந்தார் காயாப்பிள்ளை. ஸ்டேஷனுக்குப் போனார். பழனிக்கு ஒரு டிக்கட் எடுத்தார்.

ஏழரை மணியிருக்கும், வண்டி வந்தது ஏறிக் கொண்டார். ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் வண்டி புறப்பட்டது.

''ஐயா' எந்த ஊருக்குப் போறாப்பல?'' என்று பேச்சுக் கொடுத்தார் எதிர் சீட்டில் உட்கார்ந்திருந்த சாயபு

''பழனிக்கு.''

''பழனிதான் ஊரா?''

''இனிமே பழனிதான்.''

''அங்கே யாராவது இருக்காங்களா?''

''என் மவன் இருக்கான்.''

''என்ன பண்றாங்க?''

''சும்மாத்தான் இருக்கான்.''

''சும்மா யிருக்கார்னா?''

''ஆமா...துளியுண்டு புள்ளை,வேலையாப் பாக்கும்? விளையாடத்தான் செய்யும்''



''பழனியிலே இருக்கிற புள்ளைக்கு என்னன்னு பேர் வக்கிறது? தண்டபாணின்னு வைப்பாங்க!'' என்றார் காயாப்பிள்ளை.

''நீங்க வேடிக்கையாப் பேசுறிங்க'' என்றார் சாயபு.

''ஆமாம்' வேடிக்கைதான்'' என்று எதிர்த்து ஓடும் தந்திக் கம்பத்தின் மேல் அமர்ந்திருந்த வலியன் குருவிகளைப் பார்த்தார் காயாப்பிள்ளை. ''ஆமாம், வேடிக்கைதான். அந்தாலெ பாருங்க, அந்த வலியன் குருவீ ஒருச் சாண் நீளம்கூட இல்லை. ஒரு முழ நீளம் இருக்கு அந்தக் காக்கா அதைக் குட்டிக்கிட்டே போவுது பாருங்க'' என்றார். சாயபு பார்த்தார். ஆமாம், ஒரு முழ நீளக் காக்காயைத் துரத்திக் துரத்திக் குட்டிக்கொண்டுபறந்து போயிற்று ஒரு சாண் நீளவலியன் குருவி. □

# தோடு

## முதற் பகுதி

### 1

எந்த ஊரில் இருந்தாலும் சன்னதித் தெருவுக்கு ஒரு தனிக்களை, அழகு. இந்த ஊர் சன்னதித் தெருவின் அழகும் களையும் இன்னும் தனி. அபிமானத்தில் சொல்லுகிற வார்த்தை இல்லை. நேரில் வந்து பார்த்தால் தெரியும்.

சாதாரண அகலமில்லை, பக்கத்தில் பக்கத்தில் நிறுத்தி வைத்தால் முப்பது வண்டிகள் நிற்கலாம். இந்தச் சாரியில் ஒரு முப்பது வீடு, அந்தச் சாரியில் ஒரு முப்பது வீடு. ஒவ்வொரு வீட்டின் முன்னும் பத்தடி தள்ளி ஒரு மரம். ஒரே மரமில்லை. வேம்பு, நாவல், விளா, வில்வம, நாரத்தை, நெல்லி, பன்னீர், பவழமல்லி, நந்தியாவட்டை, நாகலிங்கம், முருங்கை-இப்படிப் பொறுக்கி எடுத்த மரங்கள். அதாவது, ஒரேயடியாகக் கிளையும் கொப்புமாகப் பரவித் தெருவை அடைத்து விடாத மரங்கள். இவ்வளவு அகலமும் தெருவை ஹோவென்று கண்ணுக்கு அடங்காமல் பெருக்கிவிடப் போகிறதே என்று பயந்து, இந்த மாதிரி நடுத்தர மரங்களாக வளர்த்திருந்தனர். நல்ல வெயிலில் பார்த்தால்தான் இந்த அழகு தெரியும். வெயில் நிழலைச் சாப்பிட்டு விடாது; நிழல் வெயிலைச் சாப்பிட்டு விடாது. மரத்துக்கும் வீட்டு வாசலுக்கும் நடுவில் அரிசிமாக்கோலங்கள்— புள்ளிக்கோலம், அச்சுக் கோலம், குழாய்க்கோலம், தேர்க் கோலம்— போட்டி போட்டு வரைந்த கோலங்கள். கோவிலில் திருவிழா, சுவாமி புறப்பாடு என்று தூண்டுதல் தேவையில்லை. வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து



நாளும் இந்தக் கோலங்களைப் பார்க்கலாம். தெருவின் விசால அழகின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று வழி வழியாக ஊறிவிட்ட ஆசை. இந்த ஆசையை நேரில் காண விடியற்காலையில் கண் விழித்துக் கொள்ள வேண்டும். விழியற்காலையென்றால், காற்றுக்கூடக் கண்ணை அமட்டி வந்து, நட்சத்திரங்களின் மௌன ஒளியின் கீழ் உறங்குமே, அந்த விடியற்காலை அல்ல; இருட்டு மெதுவாக அவிழத் தொடங்கி, கிழக்கில் நரை கண்டு, காற்றும் விழித்து மெதுவாக தவழத் தொடங்குமே, அந்த சிறு காலை. அப்பொழுது பார்த்தால் சன்னதித் தெருப் பெண்டுகள் நின்று குனிந்து கோலம் போடுகிறதை வாசல் வாசலாகப் பார்க்கலாம். கரிச்சான் கத்துகிறபொழுதே எழுந்து, பல் தேய்த்து, சாணம் கரைத்து, வாசலில் தெளித்து, பெரிய சதுரமாக அல்லது நீள் சதுரமாகப் பெருக்கி, துப்புரவு செய்திருப்பார்கள். அப்பொழுது கரிச்சானின் குழைவோடு இன்னும் பல கூவல்களும் சேர்ந்திருக்கும். நாரத்தங்குருவிகள், தினைக்குருவிகள், காடைகள், கோவில் கோபுர மாடத்தைவிட்டுப் பறந்து தெருவில் நடைபோடும் புறாக்களின் கூவல், சாலியத் தெருவிலிருந்து புழுக் கொத்துவதற்காக வரும் இரண்டு மூன்று சேவல்கள் தொண்டைக்குள்ளேயே பாடிக் கொள்ளும் கொரிப்பு-எல்லாம் சேர்ந்து விடும். லேசான குளிர் காற்றும் வேறு.

திண்ணையில் படுத்திருந்த ஆண்பிள்ளைகள் விழித்து, பாயைச் சுருட்டாமல், கால் விழிப்பும், அரைக்கால் விழிப்புமாக, எழுந்து உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள். எதைப் பார்க்கிறார்கள், எதைப் பார்க்க வேண்டும் என்று அவர்களுக்கே புரியாது. தலையை ஆட்டி. தாளத்தை முனகிக் கொண்டு தெருவைக் கொத்துகிற சேவல்களைப் பார்க்கிறதா, படபடவென்று அடுத்து வந்து கூட்டமாக ஒரு வாசல்முன் இறங்கி கூவிக் கொத்தும் புறாக்களைப் பார்ப்பதா, கோலம் போடுகிற கைகால்களைப் பார்க்கிறதா, தென்றல் வீசுகிறதை அனுபவிக்

கிறதா, அமிருதம் போல உள்ளும் புறமும் குளிர்விக்கும் இந்த அமைதியை அனுபவிக்கிறதா... ஒன்றுமே புரியாமல் அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். வயசுக்கேற்றாற்போல பக்குவத்திற்கு ஏற்றாற்போல, துணிச்சலுக்கு ஏற்றாற்போல எதை எதையோ பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் புறாக்களையா, சேவல்களையா, கால்களையா— எதை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத ஒரு பார்வை அது. தெரியும் கால்கள், எத்தனையோ வகை— கொலுசுக் கால்கள், உருட்டுக் கால்கள், எலுமிச்சம் பழக் கால்கள், சந்தனக் கட்டைக் கால்கள், மாநிறக் கால்கள், கறுப்புக் கால்கள், குச்சிக் கால்கள், சப்பைக் கால்கள், பித்தவெடிக் கால்கள், வெண்ணெய்க் கால்கள் சொறிந்துவிட்ட வெள்ளைக் கோடு மறையாத கால்கள், எலும்பிலிருந்து பற்றுவிட்ட சதை தளர்ந்த கால்கள், கிழக்கால்கள், மசக்கை மெருகு பூத்த கால்கள்— இத்தனையையும், எழுந்து ஆற்றங்கரைக்குப் போகிறவர்கள் பார்த்து மனசில் போட்டுக் கொண்டுதான் போவர்கள்.

கிழக்கேயிருந்து வந்தால் வடவண்டைச் சரகில் நாலாவது வீட்டு வாசலில் தெரிகிற இரண்டு கால்கள் மாநிறக் கால்கள், உருட்டுமில்லை; கொலுசுமில்லை. குதிகாலுக்கு மேல் பின்னெலும்பும் தெரியவில்லை. மொழு மொழு வென்று பூசின வகையான பாதங்கள், கணுக்கால், ஆடு சதை, ஏன், முழங்கால் சில்கூடத் தெரிகிறது. பட்டுக் குட்டி சீட்டிப் பாவாடை நுனியை எடுத்து இடுப்பில் செருகியிருக்கிறாள். அப்பாவின் ஐந்துமுழ, ஒற்றைச் சீர்ஜரிகை போட்ட அங்கவஸ்திரத்தையே சிற்றாடையாக மேலே போட்டுக் கொண்டிருக்கிறாள். அந்த ஜரிகைச் சீர்கூட வெறும் மஞ்சள் கோடாகத்தான் மிஞ்சியிருந்தது. நீரில் பல மாதமாகத் தோய்த்துத் தோய்த்து ஜரிகை கரைந்து விட்டது.

'ஏண்டி பட்டு, எத்தனை நாழிடீ கோலம் போடறே? சட்னிக்கு எப்ப அரைக்கிறதாம்?' என்று குரல் கேட்கிறது



'இதோ வந்துட்டேம்மா, ஆரமிச்சாச்சு; பாதியிலே எப்படி விட்டுட்டு வரது? நீ போ. ஒரு நிமிஷத்திலே அத்தனையும் அரச்சுத் தரேனா இல்லியா, பாரு' என்று திரும்பிப் பாராமலேயே கத்துகிறாள் பட்டு.

'இன்னிக்கி வியாழக் கிழமையாச்சேடி? கொத்ஸுக்குக் கத்தரிக்காய் நறுக்கணும், வெங்காயம் நறுக்கணும்.'

'பச்சை மொளகாயை விட்டுட்டியே...சரி. சரி... போ... எல்லாம் ஒரு நொடியிலே ஆயிடும். இதோ கொஞ்சம்தான் பாக்கி, வரேன் போ.'

'இன்னிக்கு என்ன சப்பரக் கோலம் வேண்டிக்கிடக்கு? சப்பரம் போடறாளாம் சப்பரம்! உன் ஆம்படையானை ஏத்தி வச்சு இழுத்துண்டு போப் பறியோ?'

'கலியாணத்தைப் பண்ணி வையேன், அவனை வச்சு இதிலே இழுத்துண்டுப் போறேனா இல்லையா, பாரேன்.'

அதைக் கேட்டு அடுத்த வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த சிவகாமு அம்மாள் சிரித்தாள்.

'போடு சக்கை?' என்றார் திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த நடேசு— சிவகாமுவின் கணவர்.

'பின்னே பாருங்களேன், மாமா! பாதிக் கோலத்திலே வந்து இப்படி மொலு மொலுன்னு பிடுங்கினா நான் என்னத்தைச் சொல்றது?'

'அப்படிச் சொல்லுடி, தகிடிகேன்னானாம்!' என்றான் கீழண்டைப் பக்கத்து வீட்டுக் குறட்டில் பாயில் உட்கார்ந்திருந்த பையன்— பன்னிரண்டு வயதிருக்கும் அவனுக்கு.

பட்டுக் குட்டி குனிந்த தலை நிமிராமல், திரும்பாமல் சொன்னாள் 'யார்றாது-தண்டுவா? என்ன சொன்னே...?'

''தகிடிகேயா? ம்ஹ்ம்! என்ன துளுத்துப்போச்சு கட்டை! தகிடிகேயாமே தகிடிகே! வாயை மூடு, அதிகப்ர சங்கி, வாயை மூடு!—'தண்டம்'னு பேர் வக்யணும் உனக்கு! தண்டுன்னு வச்சுப்பிட்டால்-ஏந்திர்றா! ஏந்திருந்து பாயைச் சுருட்டி, ஆத்தங்கரைக்குப் போய் பல்லைத் தேச்சுக் குளிச்சுப்ட்டு படிக்கிறதுக்கு வழியைப் பாரு, மோரக் கட்டை!''

'என்னமோ விளையாட்டாச் சொன்னா ப்ரமாதமா முறைக்கிறியே? சாயங்காலம் மகிழம்பூ யார் எடுத்துக் கொடுப்பா, பார்ப்பம்' என்றான் தண்டு.

'நீ போடா தண்டம்—நீ பொறுக்கிக் கொடுக்காட்டா, என் கை எங்கே—போச்சு?'

தெருவில் 'ச்லங் ச்லங்...ச்லங் ச்லங்' என்று சின்ன மணியோசை கேட்டது. பட்டு இடுப்பில் தூக்கிச் செருகியிருந்த அங்கவஸ்திரத் தாவணியைச் சற்று தொங்கவிட்டாள். இழுத்துக் கட்டியிருந்த அங்கவஸ்திரத் தாவணியைச் சற்று முதுகை மூடினாற் போலப் பரத்திவிட்டாள். ஆனால் இதெல்லாம் ஏதோ அசைப்பில் செய்வது போலவே இருந்தது.

'ச்லங்...ச்லங்'—ஓசை நெருங்கி வந்தது. சின்ன ரேக்ளா வண்டி அது. புங்கனூர்க் குட்டை ஒன்று அதை இழுத்து வந்தது. மாடு என்பதை விட கன்றுக்குட்டி என்றே சொல்லலாம்.

'ச்லங் ச்லங் ச்லங் ச்லங்'

உடம்பை வளைத்துக் குனிந்து நின்ற பட்டு, கடைக்கண்ணால் பார்த்தாள். தலையைச் சற்று நிமிர்த்திப் பார்த்தாள். மார்பு படபடத்தது. ஊன்றி நின்ற உள்ளங்



காலில் ஒரு குறுகுறுப்பு. ஆடுசதை, துடையெல்லாம் லேசாக ஒரு நடுக்கம் ஓடி மறைந்தது — மறைய வில்லை. திரும்பித் திரும்பி நடுங்கிற்று.

முத்துராமு, 'ஹேய்...போடா கண்ணு' என்று சிலுக்சிலுக்கென்று ஓடிய கன்றின் முதுகில் விரலை வைத்தான். லேசாகப் பாயத் தொடங்கிற்று கன்று.

'ச்லங்—ச்லங்—' என்று பாய்ச்சலுக்கு ஏற்ப ஒலி மாறிற்று.

மறுபடியும் அசைப்பில் பார்க்கிறாற்போலப் பார்த்தாள் பட்டு. மொழு மொழுவென்று கிருஷ்ண பரமாத்மா மாதிரிப் போய்க் கொண்டிருந்தான் முத்துராமு. நிகு நிகுவென்று உடம்பு. வாழைப் பூவை உரித்துக் கொண்டே போனால் முதல் உள் தண்டு தெரியுமே—அந்த மாதிரி—மஞ்சளுக்கும் வெள்ளைக்கும் நடுவான வர்ணம். காதில் எட்டுக்கல் வெள்ளைக் கடுக்கன், கழுத்தில் சங்கிலி—இடையில் பட்டையாக ஒரு பெல்ட். கருகருவென்று கட்டையாக வளர்ந்திருந்த குடுமி. ஆனால் குடுமியாகக் கட்டிக் கொள்ளவில்லை. அப்படியே அள்ளிச் செருகியிருந்தான். அந்தத் தலை மயிரும் நெற்றியிலிருந்தே வளர்க்கப்பட்டிருந்தது. அதை அப்படியே அள்ளி பின்னந் தலைமேல் சற்று இடது பக்கமாக, சொருக்கு முடிச்சாகச் செருகியிருந்தது.

அந்தச் சொருக்கோடு, காதில் எட்டுக் கல் கடுக்கனோடு வழவழவென்ற அந்தக் கன்னத்தோடு பார்த்தால் பெண் மாதிரிகூட இருக்கும். வாட்டசாட்டமான அந்த உருவம் பெண்ணாயிருந்தால், தஞ்சாவூர், பங்களூர் கிருஷ்ணன் படங்களில் யசோதை நிற்பாளே, அந்த மாதிரி இருக்கும். முகத்தில் அப்படி ஒரு களை, வழவழப்பு—பால் வடிகிற தோல். கிருஷ்ணன் கூட ஆண் மாதிரியும் பெண் மாதிரியும் தான் இருக்கிறார். முத்துராமு? முத்து

ராமு?... அவனைப் பார்க்கிறபொழுது, கிருஷ்ணன் நினைவுதான் வருகிறது.

பட்டுவுக்கு ஏன் என்று தெரியவில்லை. தொண்டையை லேசாக அடைத்தது. இன்று மட்டுமல்ல; அடிக்கடி—தினமும் என்றுகூடச் சொல்லலாம்.

'ச்லங்...ச்லங்...' என்று பாய்ந்த ஓசை தெருக்கோடியில் திரும்பி, மறைந்து தேய்ந்து விட்டது. சப்பரத்திற்கு விறு விறுவென்று இரண்டு சக்கரங்களைச் சுழித்துவிட்டு, கோலக் குழாயை மாவு டப்பியில் போட்டுக் கொண்டு உள்ளே போனாள் அவள்.

## 2

மாடத்தில் மாப்பெட்டியை வைத்து விட்டு அடுக்களைக்குள் நுழைந்தாள் அவள். பந்தமாக எரிந்து கொண்டிருந்த அடுப்பின் மீது அந்தப் பழைய இட்லிப் பானை சன்னதித் தெருவுக்கும் மடவிளாகத் தெருவுக்குமாக வெந்து கொண்டிருந்தது. பெரிதும் இல்லை, சிறிதும் இல்லை, இரண்டு தட்டிலுமாக இருபத்திரண்டு இட்டிலி குத்தலாம். அவளுக்கும் அவள் தாயாருக்கும் சோறு போட்டுக் கொண்டிருந்தது, இந்த இருபத்திரண்டு குழிகள் தான். இன்று வெந்தால்தான் நாளைக் கந்தாயம் நடக்கும்.

'இன்னும் முத ஈடே எடுக்கலியாம்மா?' என்று கொத்சுக்குக் கத்தரிக்காயும் வெங்காயமும் நறுக்கிக் கொண்டிருந்த தாயாரைப் பார்த்துக் கேட்டாள் பட்டு.

'எடுக்கிற சமயம்தான். நீ முதல்லெ—சட்னியை அறச்சு வையி. கலியாணமா, கார்த்திகையா, வெண்



ணெத்தாழியா. குதிரை வாகனமா—என்னமோ பெரிசா வரிஞ்சு கட்டிண்டு கோலம் போடறியே என்னத்துக்கு? தலைக்கு மேலே வேலை கெடக்கு. மணி ஆறடிக்கப் போறது.

'கோலம் போடறது மாத்திரம் வேலையில்லாக்கும்? என்று தேங்காய்த் துருவலையும் பொட்டுக் கடலையையும் அம்மி மீது கொட்டினாள் பட்டு.

'அதுக்காக எத்தனை பெரிசு? நீ கொட்டற மாவிலே தினமும் ரண்டடுக்குத் தோசை வாக்கலாம்; போலிருக்கு?'

'ஆமாம் தோசை வார்க்கலாம்; காசாக்கலாம்; எப்பப் பார்த்தாலும் காசு காசுன்னு பறப்புதான் உனக்கு!'

'காசு காசுன்னு பறக்கிறேனா? நானா? காசில்லாம உனக்கு மான்யம் எழுதி வச்சிருக்கானோ ராஜாங்கத்திலே? கோலத்தை சின்னதாப் போட்டு சட்டு புட்டுனு வாடின்னா வியாஜ்யமாடக் கிளம்பறயே!...அரதல்!'

'கோலம் பெரிசாப் போட்டாத்தான் லக்ஷ்மிகரமாயிருக்கு பாந்தமாயிருக்கு கோவில் வாசல் நேர இருக்கு; கோலம் போட்டா புண்யம்தானே!...குருவிகொத்தும், எறும்பு தின்னும், புறாக் கொத்தும், ஸ்வாமிக்கும் சந்தோஷம் '

'சமர்த்தில்லாம குடித்தனம் பண்ணிண்டு வாரி இறைச்சா சாமி சந்தோஷப்படமாட்டார்டீ. ரொம்ப தலை கீழ நிக்காதே. வயசு பதினாலு ஆச்சு. உடம்பைப் போத்து மாதிரி வளத்துண்டு வாசல்லெ நிக்கவாண்டாம்னு சொன்னா, மேலே மேலே பதில் பேசிண்டிருக்கியே, என்ன?'

பட்டுவுக்கு இப்பொழுது பதில் பேசத்தான் முடியவில்லை. பட்டென்று ஏதாவது சொல்லி வாயில் போட வேண்டும் என்று துடித்தது. ஆனால் நாக்கு சுருண்டு விட்டது. உடம்பை நினைத்தால் அவளுக்கே நமநம

வென்றது! போன வருஷம் தேங்காய் எண்ணெய், பெருங்காயம், நல்லெண்ணெய், காப்பிப்பொடி, ஓமம், மிளகு, சீரகம், காசு டப்பா, கணக்குப் புஸ்தகம்—எல்லாம் வைத்து அடைத்த இந்த பீரோ அவள் உயரம் தான் இருந்தது. அதன் மேல் வைத்திருக்கிற சர்க்கரை சம்புடத்தையும் சூர்க்கத்தியையும் எடுக்க வேண்டும் என்றால் கால் விரல் மீது நின்று எம்பி பீரோவின் மேல் குசலியைப் பிடித்தவாறு எட்டிப் பார்த்துக் கையை நீட்டி துழாவி எடுக்க வேண்டும். இந்த வருஷம் அதே பீரோ அவள் மோவாய்க்குக் கீழே போய்விட்டது. பல சமயங்களில் மோவாயை பீரோ ஓரத்தில் வைத்து அழுத்தி தன் உயரத்தை அளந்து கொள்வாள் அவள். உயரம்மட்டுமில்லை, எல்லாமே மாறிக்கொண்டிருந்தது பாதம் நீண்டு விட்டது. கை நீண்டுவிட்டது. வளையல் போட முடியவில்லை. இந்த வருஷம் பிரம்மோத்சவத்தின் பொழுது வளையல், ரவிக்கை, பாவாடை எல்லாமே புதிதாக மாற்ற வேண்டியிருந்தது. போன வருஷத்துப் பாவாடையைத் தூணில் சுற்றி அம்மா கைதுடைக்க வைத்திருந்தாள். இரண்டு மாசத்துக்குப் பிறகு அதுவும் தூணை விட்டு இறங்கி சாப்பிட்ட தரையைத்துடைக்கும் சுருணையாகிவிட்டது.

கறி நறுக்க உட்காரும்பொழுதும் அப்பளம் உலரக் காவல் காக்கும் பொழுதும்தன் பாதத்தைப் பார்ப்பாள் பட்டு. தொட்டுத் தடவிப்பார்ப்பாள், ஒரு புது வழவழப்பு. மினுமினுப்பு. குளிக்கும்பொழுது ஆடுசதை, துடை, புஜங்களை எல்லாம் தேய்த்து விட்டுக்கொள்கையில்... இதெல்லாம் போன வருஷ புஜமா, காலா? வெள்ளரிப் பழத்தைத்தடவுகிறாற் போல ஒரு அழுத்தம். வர்ணம் கூட மாறிவிட்டது. அவள் அப்படி மாநிறம் என்று கூடச்சொல்ல முடியாது. மாநிறத்துக்கும் ஒரு மாற்றுக் குறைந்த சருகுப் பழுப்பு. ஆனால் அது இப்பொழுது புளியும் விபூதியும் போட்டுத் தேய்த்த ஏனம் போல மாயமாக மாறிக் கிடந்தது. அவளும் இப்பொழுது



நல்ல சிவப்புதான் என்று யாரும் சொல்வார்கள். பிற்பகலில் கூடத்தில் உட்கார்ந்து தலை வாரிக் கொள்ளும் பொழுது ரசம் போன கண்ணாடிகூட அப்படிச் சொல்லுகிறது. என்ன இருந்தாலும் முத்துராமுவின் நிறம் மாதிரி வராது. அவன் நிறம், சுரைக்காயின் நிறம்—பழுத்த சுரைக்காயின் நிறம், உடம்பில் ஒரு எலும்பு தெரியாது அவனுக்கு. முன் கழுத்து எலும்பு கூடத் தெரியாது. அப்படியே பழம். பாத எலும்பு கூடத் தெரியாது; மழமழப்பு. அதற்காக புஸுபுஸு வென்று குண்டாகவா இருக்கிறான்! அதுவுமில்லை. மையமான உடம்புதான். அது பிறவி—கிருஷ்ணன் மாதிரி அவன் கண்கூட எப்பொழுதும் மையிட்டது போல இருக்கும். அப்படி ஒரு கறுப்பு இப்படிப் பால் வடிகிற முகத்துக்கு இந்த மாதிரி பெரிய, கறுத்த, நீர் மிதக்கிறாற் போல கண்ணுமிராவிட்டால் இப்படி கிருஷ்ணன் மாதிரி எப்படியிருக்க முடியும்? அவனும் திடீர் என்று எப்படி வளர்ந்து விட்டான்! பெரியவனாகி விட்டான்! மூன்றாவது வருஷம் வரை சடுகுடு ஆடவந்து கொண்டிருந்தவன், அந்த மூன்றாம் வருஷ பிரம்மோத்சவத்துக்குப் பிறகு அப்படியே நின்று விட்டானே! பெரியவர்களாகி விட்டால் இப்படித்தான் தனியாகி விடுவார்களா எல்லாரும்?

அவளுக்குக்கூட இப்பொழுது இந்த ஒதுக்கம் வந்து விட்டது. பத்து நாளாயிற்று. சலாங் குடுகுடு ஆடப் போகவில்லை. போன பௌர்ணமியன்று அம்மா கத்து கத்து என்று கத்தினாள், 'ஏண்டி பட்டு! உனக்கு உடம்பிலே வெக்கம், சொரணை ஏதாவது இருக்கோ? மேலாக்கையும் போட்டுக்கிண்டு புருஷப் பசங்களோட சலாங்குடு ஆடறே! மணல்லெ விழுந்து பெரள்றே! ஏண்டி, நீ என்ன பொம்மணாட்டி, ஜன்மமா, குதிரையா? துளிகூச்ச நாச்சம் இல்லாம இது ஏதுடீம்மா! ஊர்லே யாராவது பொண்ணாப் பிறந்தது ஏதாவது இந்த மாதிரி ஆம்பிள்ளைகளோட விளையாடறதோ? உனக்குத் தெரியறதோ அது! நீ மட்டும்

ஏண்டி இப்படி சுத்தறே! பொண்குழந்தைன்னா பொண் குழந்தைகளோடு கலந்துக்கும், பாண்டி ஆடும்— பல்லாங்குழி ஆடும்— புளியங்கொட்டை ஆடும். இப்படியா நாய் மாதிரி ஆம்பிள்ளைப் பசங்க மேலே தெருவிலே புரளும்!... என் வயித்துலெ புளியைக் கரைக்கிறதுடீ. இதெல்லாம் கண்ணாலெ பார்த்தா!... இத பாரு! நீ சொன்னதைக் கேட்டுண்டு வீட்டோட கிடக்கப்போறியோ இல்லையோ? வாசப்படி இடிக்கலாச்சு! உசரம்! உடம்பானா மொச்சக்கொட்டை ஊர்றாப்பல ஊறிக்கிடக்கு! சொன்னதைக் கேட்கமாட்டேன், என் இஷ்டப்படிதான் சுத்துவேன்னு சொல்லிப்பிடு. ஆறோ, குளமோ, கிணறோன்னு என் காரியத்தைப் பார்த்துக்கறேன். அப்புறம் அக்கடான்னு தாந்தோணியாத் திரியலாம்... என்னடி வாயைத் திறக்க மாட்டேங்கிறியே?'

பட்டு வாயைத் திறக்கவில்லை. சுருக்கு சுருக்கென்று தோலில் ஏறின இந்த ஊசிகளைச் சகித்துக்கொண்டு, கல்லாக நின்றாள். உள்ளே மட்டும் மனசு கரைந்துகொண்டிருந்தது.

அம்மா சொன்னதவ்வளவும் உண்மை. விவரம் புரிந்த நாள் முதல், பெண் குழந்தைகளோடு எப்போது விளையாடிணோம்? ஒரு காலை மடக்கி ஒரு காலைப் பரத்தி பாவாடையில் புளியங்கொட்டைகளைப் போட்டு, தூக்கி எறிந்து புறங்கையில் பிடிக்கிற குட்டிகளை அவள் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள். பார்த்தாலும் போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றாது. அவளுக்கு ஜமா சன்னதித் தெரு, மடவிளாகத் தெருப் பையன்கள் தான். அரிச்சுவடியிலிருந்து, அப்பா செத்துப்போன நாலாம் வருடம் ஐந்தாவது பரீட்சை எழுதி முடித்த வரையில் பையன்கள் தான் அவள் தோழர்கள். அப்புறமும் மூன்று வருஷமாக அந்தத் தோழமை தான் சமத்தியாக அடி விழுகிற பிள்ளையார்ப் பந்து, பேய்ப்பந்து— இந்த மாதிரி விளையாட்டுகள் தான் அவளுக்கு உயிர்.



அவள் குறி தப்பாது. ஒரே அடியில் பிள்ளையார் செங்கல் மல்லாந்து விடும். பந்தை எடுத்து எந்தப் பயல் முதுகிலாவது குறி வைத்தாளானால், கண் வைத்த இடத்தில் குத்தித் திரும்பும் அது. நொண்டியாடினால், இரண்டு எல்லைக் கோட்டுக்கும் நடுவே மூலையில் நெருக்கி மடேர் என்று தலையில் கையால் போடுவாள். எந்தப் பயலும் தப்ப முடியாது பட்டு நூல்காரத் தெரு தஸ்மா மகன் சோகைத் தோலையும் பழுப்புப் பல்லையும் காட்டிச் சிரித்துக்கொண்டே அவள் கைக்கு அகப்படாமல் நழுவிக் கொண்டிருந்தான். மூலையில் நெருங்கிக்கூட, தலையைத் தாழ்த்தி ஓடிவிட்டான். எல்லாப் பயல்களும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். 'பட்டுக்குட்டி, அவன கிட்ட உன் ஜம்பம் சாயாதுடீ. சோகை புடிச்சாப்பல இருக்கான்னு நெனச்சியா! பாம்புக் குட்டியாக்கும்— ப்க்கும்!; என்று மொட்டு காலை அகட்டி நின்று கத்தினான். நீ சும்மா இர்றா கிடக்கு' என்று நொண்டிக் காலை இடது முழங்காலில் ஊன்றி சற்று நின்று நெற்றி வேர்வையையும் மூக்கின் கீழ் முத்திட்ட வேர்வையையும் துடைத்துக் கொண்டாள் பட்டு: ஹெஹ்ஹெ ஹோ ஹோ என்று சிரிப்புக் கிளம்பிற்று. இத பார்றா உங்க தஸ்மா என்ன ஆறான் பாரு இப்ப! என்று நொண்டிக்கொண்டே பாய்ந்தாள். வேகம் இரட்டித்துவிட்டது. சிரித்துக்கொண்டே ஓடிய தஸ்மா மகனுக்கு முகத்தில் சிரிப்பு மறைந்தது கவலை வந்துவிட்டது. இப்படியும் அப்படியும் ஓடி மூலையில் சிக்கிக் கொண்டான். ஒரு பக்கமும் போக முடியவில்லை. கையை முறம்மாதிரி வீசிக்கொண்டிருந்தாள். அவள். கடைசியில் நெருங்கி நெருங்கி அந்தப்பயலின் மார்பில் இரண்டு உள்ளங் கைகளையும் விரித்து சதக்கென்று ஒரு அடி வைத்தாள். அந்தப் பயல் அப்படியே மல்லாந்து எல்லைக்கோட்டுக்கு அப்பால் மடார் என்று விழுந்தான். பின்னந்தலை தரையில் மோதிற்று. அவன் எழுந்து கொள்ளப் பத்து விநாடி ஆயிற்று, கண் கலங்கிவிட்டது. பட்டு பார்த்தாள்; தூ அம்பேல்' என்று காலை கீழே

போட்டு அவனிடம் ஓடி 'ரொம்ப வலிச்சுட்டுதாடா தஸ்மா?' என்று அவன் தலையைத் தடவிக் கொடுத்தாள். 'இல்லை' என்று சிரித்துக்கொண்டு ஓரமாகப் போய் உட்கார்ந்தான் அவன். அன்று போனவன் மூன்று நாள் விளையாட வரவில்லை. நாலாம் நாள் காலையில் இட்லி வாங்க வந்தவன், துணியால் செய்த ஒரு புதுப்பொம்மை யையும் ஒரு சுருட்டு பழைய அசல் ஜரிகைகளையும் கொண்டு கொடுத்தான் அவளுக்கு. அவனுக்கு மூன்று நாளாக உடம்பு சரியில்லையாம். 'இன்னிக்கி விளையாட வருவேன்; ஆனா நம்பளை ஒன் கச்சிலேதான் ஸேத்துக் கணும்' என்று சொல்லி வைத்தான். அவளுக்குப் பாவமாயி ருந்தது. நல்ல பயல். போன மாசம் காலரா வந்து பொட் டென்று செத்துப் போகிறதற்கு முதல் நாள் வரையில் அவள் கட்சியில் தானிருந்தான் அவன்—எந்த விளையாட் டிலும் கட்சி பிரிக்கும் பொழுது சூதுவாதெல்லாம் செய்து அவன் தன் கட்சியில் இருக்கும்படியாக சமர்த்துப்பண்ணி விடுவாள்பட்டு.

நொண்டியாட்டம், பேய்ப் பந்தெல்லாம் விட, அவ ளுக்கு சலாங்குடுதான் உயிர். மூச்சுப்பிடித்து காலால் எட்டி ஒரு பயலின் மூக்கில் கால்விரலால் தேய்த்து விட்டு ஓடி வருவாள். தன் பக்கம் மூச்சுப் பிடித்து வருபவனைக் காலைப் பிடித்து இழுப்பாள், ஒரே கட்டாகக் கட்டி வீசி எறிவாள். அவளைக் கட்டினாலும் உயிர் போனால் கூட மூச்சை விடமாட்டாள். திமிறிக்கொண்டு கோட்டை எட்டி விடுவாள். அப்படி எட்டாதது இத்தனை வருஷங் களில் ஒரு இருபது தடவை இருக்குமோ என்னவோ; அதற்குமேல் இராது.

அம்மா சொல்கிறது உண்மைதான். போன மாசம் ஒரு நாள் அந்த வீதியூரார் வீட்டு கணேசன் பயல் சலாங் குடு ஆடும்போது அவளைக் கட்டிப்போடுகிறேன் என்று இறுகக் கட்டிக்கொண்டு விட்டான். எப்படித்தான் நடந் ததோ விரல்களோடு விரல்களை வேறு கோர்த்துக் கொண்



டான். மேல் கையைப் பிடித்துப் பார்த்தான். 'தூம்மா... மூச்சை விட்டுட்டேன்; புடிச்சிண்டே நிக்கிறியே! நீ ஒரு ஆம்பளை மாதிரி' என்று மேலாக்கை சரிப்படுத்திக் கொண்டு வந்து நின்றாள் அவள். அன்று முதலே அவளுக்கு என்னவோ போலிருந்தது. சடுகுடு விளையாடக்கூடாது என்று லேசாக ஒரு பயம் கூட வந்துவிட்டது. எல்லாப் பையன்களும் அப்படி இல்லை. ஆனால் இந்த ஆராமுது, மௌளி, முழியன்—இந்த மூன்று பயல்களும் வந்து கட்டி னால் என்னமோ போலிருக்கும். இனிமேல் சடுகுடு வேண்டாம் என்று தோன்றிற்று. ஆனால் தண்டு' சப்பாணி, சாரதி—இவர்களுடைய நச்சரிப்புத் தாங்காமல் தான் அவள் போய் வந்து கொண்டிருந்தாள். அவளுக்கும் வீட்டில் உட்கார முடியவில்லை.

அந்த வீதியூரார் வீட்டு கணேசன் பயல் கட்டினதை நினைத்தால் எதையோ மிதிக்கக்கூடாததை மிதித்தாற் போல மூக்கும் புருவமும் சுளித்தன. காலிப்—பயல்! அது சிரிக்கிறதும் பார்க்கிறதுமே என்னமோ பண்ணும், இந்த ஊர்கூட இல்லை அதற்கு. இருந்தால் இப்படி இருக்குமா? வீதியூர் மாமா, பிள்ளை இல்லையென்று தங்கை பிள்ளை யான இதைக் கொண்டாங்குடியிலிருந்து அழைத்து ஸ்வீகாரம் எடுத்து பூணூல் போட்டு, ஊரோடு வீட்டோடு வைத்துக் கொண்டு விட்டார். நல்ல கறுப்பு—எப்போதும் எண்ணெய் வழிகிற முகம்-அசட்டுச் சிரிப்பு, கள்ளப்பேச்சு, எண்ணெய்ச்சிக்கும் அழுக்கும் முடிச்சுமாக ஒரு பூணூல்— இதெல்லாம் போதாதென்று ஒரு கால் வேறு வீக்கம். ச்சீ... கட்டிண்டுது பாரு, சனி!

அம்மா சொல்கிறது உண்மைதான். இனிமேல் புருஷப் பயல்களின் சங்காத்தம் கூடாதுதான். அன்று தண்டு வந்தான். கூப்பிட்டான். போடா வேலை மெனக்கெட்ட வனே' என்று அம்மா இரைந்தாள். வாசலிலேயே பத்து நிமிஷம் நின்று பார்த்துவிட்டுப் போய்விட்டான் அவன். ஒரு நாள், இரண்டு நாள், நாலு நாள்— பதினைந்து

நாளுக்கு மேலாகிவிட்டது. பட்டு வீட்டோடு தான் கிடந்தாள். இதுவும் பழக்கமாகிவிட்டது.

முதலில் கால் தரிக்கத் தானில்லை. வீதி மண்ணை நினைத்து நினைத்துக் கால் பறந்தது. ஆனால் அந்த வீதி யூரார் வீட்டுப் பயலை நினைத்ததும் துவண்டுவிட்டது. அந்தப் பயலை நினைத்து நினைத்தே, உடம்பு வீட்டுக்குள்ளேயே கிடக்க பழகிக் கொண்டது.

ஆனால் அம்மா அப்படி அடியோடு கட்டை போட்டு விடவில்லை. கோயிலுக்குப் போவதைத் தடுக்கவில்லை. கோயில் பிரகாரத்தில் உள்ள மகிழ மரத்தடியில் பூக்களைப் பொறுக்கி அங்கேயே உட்கார்ந்து ஒரு மாலையாக தொடுத்து புவனேச்வரிக்குக் கொடுத்துவிட்டு வருவதைத் தடுக்கவில்லை. கோயில் பெரிய கோயில். பிராகாரம் ஹோவென்று கிடக்கும். தெற்குப் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி சன்னதியின் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டால் எழுந்து வரமுடியாது. எதிரே நந்தவனத்து மரங்களை விட்டு இறங்கி பிரகாரத்தில் நடை பழகும் நார்த்தங் குருவிகளையும் புறாக்களையும் பார்த்துக் கொண்டேயிருந்தால் நாம் எங்கே யிருக்கிறோம், யார், எங்கே போக வேண்டும் என்ற ஞாபகமெல்லாம் அழிந்து கிடக்கும். மனசு எங்கேயோ போய் ஒட்டிக்கொண்டு திரும்பி வர இஷ்டமில்லாமல் கிடப்பதுபோல் கிடக்கும். மேலண்டைப் பிரகாரத்தில், அதாவது புவனேச்வரி கோவிலுக்குப் பின்பக்கம் மகிழ மரம் இரண்டு உண்டு. மாலைக் காற்றில் அசைந்து அசைந்து மகிழ மலர்கள் தோடு தோடாகக் கொட்டிக் கிடக்கும். தோடு தோடாக என்று இவளுக்கு முதலில் தோன்றியதில்லை, ஏதோ நாலு வருஷம் பழக்கம். அந்தப் பூக்களை நூலில் கோத்து புவனேச்வரிக்குப் போட வேண்டுமென்று ஒரு நாள் தோன்றிற்று. அப்பா ஒரு நாள் மாயவரம் போய்விட்டு வரும்போது திருவிடைமருதூர், ரயிலடியில் விற்றான் என்று ஒரு மகிழம்பூ மாலையை வாங்கிக் கொண்டு வந்திருந்தார்.



மகிழம்பூவை மாலையாகத் தொடுத்தால் இவ்வளவு அழகாக இருக்குமா? அன்றிலிருந்து அவள் மேலண்டைப் பிராகாரத்து மகிழ மரத்தடியில் மாலை வேளையில் பாவாடையைப் பரத்திக்கொண்டு உக்கார்ந்து விடுவாள். விளையாடிவிட்டு வந்ததுமே அதுதான் வேலை. கையைக் காலை அலம்பி, முகத்தைக் கழுவிக் கோயிலுக்குப் போய் விடுவாள். அதே விளையாட்டுப் படையும் அவளோடு வந்து பூக்களைப் பொறுக்கி பாவாடை விரிப்பில் போடும். மூன்று மாலை காணும். இரண்டைக் கோயிலுக்குக் கொடுத்து விட்டு, மூன்றாவதை வீட்டில் அலமாரியில், வாயில் கால்விரலைப் போட்டு உட்கார்ந்திருக்கும் ஆலிலைக் கிருஷ்ணன் படத்துக்காகக் கொண்டு வருவாள். இந்த மகிழம்பூ தோடு மாதிரியாக இருக்கிறது என்று அவளுக்குத் தோன்றுவதில்லை. ஆனால் நவராத்திரியின் பொழுது கோயிலில் ஒருவர் வந்து கதை சொல்லும் பொழுதுதான் அது தோடு மாதிரியிருப்பதாகத் தோன்றிற்று. சிவனுடைய பெருமை, அவன் ஆலகால விஷத்தைக் கூடச் சாப்பிட்டுவிட்டுப் பிழைத்தது எல்லாவற்றுக்கும் யார் காரணம்? எல்லாம் உன்காதுத் தோட்டின் மகிமை தானம்மா தாயே என்று யாரோ பாடினாராம். அதைக் கேட்டது முதல் அந்தக் காதுத்தோடு அவள் நெஞ்சில் ஒரு ஜிலுஜிலுப்பைக் கிளறும். கண்ணை மூடும் பொழுதெல்லாம் கிரீடம் வைத்த முகம் ஒன்று தோன்றும். அழகான அழகில்லை. அந்த அழகைக் கூட்ட ஒரு புன்னகை. அந்தப் புன்னகையை நினைத்துக்கொண்டே அவள் கண்ணை மூடிப்படுத்திருக்கும் பொழுது, "என்னடீ சிரிக்கிறே !" என்று அம்மா ஒரு நாளிரவு கேட்டாள். அப்படித் தொற்றுகிற புன்னகை அது. ஆனால் அந்தப் புன்னகையை விட காதில் பளீர் பளீர் என்று பூக்கிற அந்தத் தோடுதான் அவள் கண்ணிலும் நெஞ்சிலும் பூத்துப் பூத்து நின்றது. அன்று அவர் சொன்னதைக் கேட்டுவிட்டு வந்து படுத்துக்

கண்ணை மூடியபோது, நீலம் பூசின கண்மூடு வெளியில் ஒரு பூமாதிரி தெரிந்தது. மகிழம்பூதான் அது. அந்த மகிழம்பூவே அவளறியாமல் பச்சையும் நீலமும் கொட்டும் தோடாக மாறிற்று. அந்தத் தோட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். தோட்டைத் தவிர வேறு ஒன்றுமில்லை, தோடு தோடு தோடு! அவளே தோடாக மாறிக் கிடந்தாள்.

அந்தத் தோடு தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தது. ஒரு காது தெரிந்தது. யாருடைய காது அது? எந்தக் காதில் இந்தத் தோடு இருக்கிறது? வழவழவென்று, மினுமினுவென்று, பூனை மயிர் மின்னும் கன்னம் தெரிந்தது. குழந்தையைப் போன்ற முற்றாத, கொழுந்துத் தோல். அதைப் பார்த்துப் பார்த்து அந்தத் தோடு விம்மிற்று, வியந்தது. அந்த வியப்பை பளீர் பளீர் என டால் வீச்சாக வீசிற்று. யாருடைய முகம்? கூர்ந்து கவனித்தாள் —தெரிந்த முகம்தான்... முத்துராமுவின் முகம்—ஆமாம், முத்துராமுவின் முகம். கல்யாணத் தாத்தாவின் பிள்ளை முத்துராமுதான். மூன்றாவது வீட்டு கல்யாணத் தாத்தாவின் பிள்ளை முத்துராமுதான். முத்துராமு! முத்துராமு! பட்டுவின் உடலெல்லாம் ஏதோ ஜில்லென்று பால் பொங்கி வழிவது போலிருந்தது. உடம்பு மட்டும்-இல்லை உள்ளே, எலும்பு, வயிறு, குடல், மார்பு—எங்கு பார்த்தாலும் பொங்கி வழிந்தது—நகக்கணுவெல்லாம் ஜிலீர் என்றது. மயிர்க் காம்பெல்லாம் மலர்ந்தது. படுத்திருந்தவள் எழுந்து உட்கார்ந்தாள். சுவரில் பெட்ரூம் விளக்கின் கோழி முட்டைக் கண்ணாடிக்குள் தீப்பொட்டு மினுங்கிற்று. அம்மா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மார்பின்மீது கையை வைத்து, காலைச் சற்றுப் பரப்பி, மல்லாந்த அடித்துப் போட்ட உறக்கம். பட்டு மீண்டும் கண்ணை மூடினாள், நெஞ்சு கொள்ளவில்லை. ஏதோ அடைத்தது, உதட்டைக் கடித்துக் கொண்டாள். கரகரவென்று கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டே



மெதுவாக எழுந்து, பூஜை அலமாரியைத் திறந்தாள். ஒரே இருள்! ஆனாலும் ஆலிலைக் கிருஷ்ணன் முகம் அவள் மனசுக்குத் தெரிந்தது. அதன் முன்னால் விழுந்து வணங்கினாள், 'நான் பெரியவளாகக் கூட இல்லையே? ஏன் இப்படியெல்லாம்...' என்று கிருஷ்ணனைப் பார்த்து ஏதோ தவறு செய்துவிட்ட மாதிரி கரைந்தாள் அவள். வணங்கிவிட்டு எழுந்து நிற்கும்பொழுது முழங்கால் சொடுக்கிற்று. அந்தச் சொடுக்கலைக் கேட்டு அம்மா விழித்துக்கொண்டு விடுவாளோ என்று திரும்பிப் பார்த்தாள். நல்ல வேளை, அம்மா எழுந்திருக்கவில்லை.

திரும்பி பாய்க்கு வந்தவள் இப்படியே உட்கார்ந்திருந்தாள். பாலில் நீரை விட்டாற்போல, துளி வெளிச்சத்தைக் கலந்து கரைத்த அந்த முக்கால் இருளைக்கூட அவளுக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை. முழு இருளாக வேண்டியிருந்தது அவளுக்குக் கண்ணை மூடிக் கொண்டாள். கண்ணை மூடினதால் தான் தோடு தெரிந்தது. அதன் பூரிப்பைப் பார்க்க முடிந்தது.

எப்பொழுது தூங்கினோம் என்று தெரியவில்லை. மறுநாள் காலையில் ஒருநாளும் இல்லாத திருநாளாக அம்மா அவளை எழுப்ப வேண்டியிருந்தது. அவ்வளவு அயர்ந்த தூக்கம், ஆனால் அப்படிச் சற்றுக் கூடுதலாகத் தூங்கியது கூட நல்லதாகப் போய்விட்டது. கோலமாவு டப்பியுடன் அவள் வாசலில் அடியெடுத்து வைப்பதற்கும் 'போடாகண்ணு' என்று நல்ல வார்த்தை சொல்லி மாட்டைத் தடவிக் கொண்டு ரேக்ளாவில் முத்துராமு வாசலோடு போவதற்கும் சரியாக இருந்தது. ஏதோ சொல்லி வைத்தாற் போலல்லவா அவள் வரும் சமயம் பார்த்து வாசலைக் கடக்கிறான் அவன்!

கோலம் போட்டுவிட்டு உள்ளே வந்தவள், பூஜை அலமாரியின் முன் ஒரு கோலம் போட்டாள். என்றுமில்லாத ஒரு புதுக்கோலம். எட்டு வட்டம் வைத்த தோடு. ஆனால்

மாத்தோடு இது! அந்த மாத்தோட்டைக் கொடுத்து ஒரு வரம் கேட்டாள் அவள். மனத்துக்குள் கேட்டாள். கேட்கக் கூட இல்லை. நினைத்துக் கொண்டாள், 'இந்த மாத்தோடு மாத்திரம் இல்லை; மகிழம்பூத் தோட்டால் தினமும் ஒரு மாலை போடுகிறேன். அப்புறம், அது ஆன பிறகு, புவனேச்வரிக்கு...புவனேச்வரிக்கு, அவள் காதுக்கு பளிச் பளிச்சென்று! ஒரு ப்ளுஜாகர் தோடு போட வேண்டும்... எது ஆன பிறகு? அதை எதற்காகச் சொல்ல வேண்டும்?... அவரை விட்டு, முத்துராமுவை அந்தத் தோட்டைப் போடச் சொல்ல வேண்டும். அவர் வாங்கிக் கொடுத்து, நான் அதை என் கையால் கொடுக்க வேண்டும்...இல்லை... அவரேதான், அவர் கையாலேயே கொடுக்கட்டுமே? நான் கொடுத்தால் என்ன? அவர் கொடுத்தால் என்ன?'

'ப்ளுஜாகர்' தோடு என்ன விலை இருக்கும்? இரு நூறு இருக்குமா? முன்னூறு இருக்குமா? மளிகை விச்வகய்யர் வீட்டிற்கு இட்லி கொடுக்கும் போது அதையும் விசாரித்து விட்டாள். 'நெளு'வாக அவள் விசாரித்த சமர்த்து அவளுக் குத் தெரியும்.

'இப்படி வச்சூட்ரீ குழந்தே!' என்று ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்த விசாலத்தம்மாள், தூணோர மாகச் சுட்டிக் காட்டினாள். பட்டு இட்டிலித் தட்டை வைத்து விட்டுப் பார்த்துக்கொண்டே யிருந்தாள்.

'என்னடி குழந்தே பார்க்கறே?'

'ஒண்ணுமில்லே, மாமி.'

'என்னடி, சொல்லேன்?'

'இன்னிக்கு உங்களைப் பார்த்த ரொம்பக் களையா இருக்கு, மாமி. அதுவும் அந்தத் தோடு பளீர்னு உங்க கன்னமெல்லாம் விளக்கேத்தி வைக்கிறாப் போல அப் படியே கொட்றது' என்றாள் பட்டு.



'என்னடி குழந்தே இது! இத்தனை நாளா கவனிக் கலியே நீ!...'

'பார்க்கிறேன் மாமி. இன்னிக்கு என்னமோ பூத்துக் கொட்றது அது.'

'எல்லோரும் அப்படிதான் சொல்றா. திருவேங்கடம் செட்டி பெண்டாட்டிகூட இது மாதிரி ஒண்ணு வாங்கிக் கொடுங்களேம்மா எனக்குன்னா. இது மாதிரின்னா இது என்ன ரங்கூன் வைரமா? ஒரே தினுசா வச்சிருக்கும்' வாங் கிண்டு வரலாம்னு சொல்றதுக்கு! ஏதோ அகஸ்மாத்தா கிடைச்சது! சக்கரமய்யங்கார் கிட்ட யாரோ திருஷ்ணாப் பள்ளிக்காரா வித்துக்குடுன்னு கொடுத்தாளாம். அவர் இவர் கிட்டே காமிச்சிருக்கார். என்ன விலையானாலும் எனக்குத்தான்னு இவர் வாங்கிண்டு வந்துட்டார். மூவா யிரத்தி இருநூறு ரூபா ஆச்சு... திருவேங்கடம் பொண்டாட்டி நாலாயிரம் தரேம்மா—எனக்குக் கொடுத் துடுங்கோம்மான்னா எப்படிக் கொடுக்கிறது, சொல்லு. கேக்கறதுதான் நிய்ாயமோமா? ஏதோ நல்லதாக் கிடைச்சிருக்கு. அவாளே வச்சுக்கட்டும்னு இருக்கவாண் டாமோ? வாயைத் திறந்து கேட்பாளோ!—'

'அவளுக்கு என்ன மாமி! லட்ச லட்சமாக் கொட்டிக் கிடக்கு.'

லட்சகணக்கா கொட்டி வச்சிருந்தா கேட்டுப் படறதோ!'

'கேட்டாலும் கொடுப்பாளோ யாராவது இந்தச் சாமானை?'

'நான்தான் கொடுக்கலையே... பணம் இருந்தா என்ன வானாலும் கேக்கறதோன்னேன். கேட்டாகிடைச்சுருமோ. கிடைக்கணும்னு இருந்தாத்தான் கிடைக்கும்.'

'ஆமாம் மாமி' என்று அவள்முகத்தையே சற்று நேரம் பார்த்துவிட்டு வந்தாள் அவள். ஆனால் விலை சொன்ன

துமே நறநறவென்று உள்ளே ஏதோபாய்ந்து குடைந்தது. மூவாயிரம் நாலாயிரத்துக்கு அவர் எங்கே போவார், முத்துராமு?...அதுவும், அப்படி வாங்கி கோவிலுக்குக் கொடு என்றால்!...

வீட்டுக்கு வந்தபொழுது கூடத்துக்கு முன்னால் தாழ்வாரத்தில் வெளியில் விழுந்து கிடந்தது; கத்தரித்தாற்போல் விழுந்த நிழலில்லை. மேலண்டைச் சுவர் இடிந்து பூச்சி வெட்டின தலைமயிர் மாதிரி மேல்பக்கம் ஒருசமனாக இன்றி புள்ளலும் பொக்கையுமாகக் கிடந்தது. அந்த நிழல் தான் அவளைப் பார்த்து சிரித்தது.

'விடிஞ்சா இட்லியை வித்து ரண்டு ரூபாய் மிச்சம் காண இடுப்பொடியறது. புவனேச்வரிக்கு ப்ளூஜாகர் தோடு பண்ணிப் போடறாளாம். கல்யாணத் தாத்தா ரண்டு மாடி வச்சு வீடு கட்டிண்டிருக்கார். அவருக்கு ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரு பிள்ளை. அவனுக்கு உன்னைத்தான் கலியாணம் பண்ணிவச்சு அழச்சுக்கப் போறாராக்கும்? மகா மகாலட்சுமியாச்சே! தட்டு தட்டா வெள்ளியும் பவுனுமா சீர்வச்சுடுவள் பாரு உங்கம்மா? அப்பனையும் முழுங்கிப்பிட்டு நிக்கறே நீ! உங்கம்மா என்ன சீர் வச்சுருவ! இட்லிப்பானையிருக்கே ஒண்ணு, கரியும் நசுங்கலுமா அதைக் கொண்டு வச்சு கலியாணத் தாத்தா பிள்ளை கழுத்திலே ஒரு மாலையைப் போட்டுடலாம்னு பாக்கிறியாக்கும்.

'...ஒரு சித்தாடைக்கு நாதியில்லை. அப்பன் மேல் வேட்டியைச் சுத்திண்டு அலையறே!... அதெல்லாம் கிடக்கட்டும்... நீ அதுக்குள்ளியும் இந்தக் கேட்டையெல்லாம் என்னத்துக்குடி உனக்கு?' என்று அந்த இடிசுவரின் நிழல் நகைப்பது போலிருந்தது அவளுக்கு. அதைக் காலால் மிதித்தது நசுக்கவேண்டும் போல ஆத்திரம் ஆத்திரமாகக் குமுறிற்று. இதெல்லாம் என்ன சொப்பனம்! என்ன அசட்டுத்தனம்? முத்தராமுவுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?



எதற்கு இந்த அவல ஆசை?... சோர்ந்து போய் அவள் நடந்தாள்.

ஆனால் அந்தக் தோடு! நானே தோடாக மாறி அவள் காதில் பூரித்தேனே! அது பொய்யா, தப்பா?...

புவனேச்வரி! நான் உன்னை விடமாட்டேன்' என்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்டாள் அவள். உள்ளுக்குள்ளே புவனேச்வரியின் நாமம் ஒலித்துக்கொண்டேயிருந்தது. அவள் சொல்லாவிட்டாலும், அது ஒலிக்கிறாற்போலிருக்கும்.

விளையாடப் போகாமல் மாலைப்பொழுது வீட்டுக்குள் வெறிச்சோடித்தான் கிடந்தது. ஆனால் புவனேச்வரியின் பெயரைச் சொல்லிக்கொண்டேயிருந்தால் முத்துராமுவின் காதில் நான் தோடாக இருந்ததை நினைத்துக் கொண்டேயிருந்தால்? இரண்டு நாளில் அந்தப் பொழுது போகாத சுமையெல்லாம் இருந்த இடம் தெரியவில்லை. அப்புறம் கோயில் பிராகாரத்துக்குப் போய் மகிழ மரத்தினடியில் உட்கார்ந்து பூக்கோக்கும் பொழுது, அந்தத் தோட்டுப் பூவைக் கோக்கும் பொழுது... அம்மாவைப் போல் யார் கிடைப்பார்கள்! நல்ல வேளையாகத் தடுத்தாள்! அம்மாவுக்கு இல்லாத கொடுமை தான்! அதனால் தான் இந்தக் கூப்பாடு, எரிச்சல் எல்லாம்! அதுவும் என்னோடு பேசுவதென்றால், எரிந்து விழவேண்டும், சுடச்சுடக் கொடுக்க வேண்டும். அப்படி ஒரு பழக்கமாகப் போய் விட்டது அவளுக்கு! மற்ற பேரோடெல்லாம் சாதாரணமாகச் சிரித்துசல்லோபில்லோ என்று பேசுகிறஅம்மாதான்! என்னைக் கண்டதும் அவள் நாக்கில் உப்பும் காரமுமாக விழுந்து விடுகிறது! பாவம்! அப்படிப் பேசினால் தான் திருந்துவேன் என்று அவள் எண்ணம்... அதுவும் உண்மை தான்! நானுப் அப்படித் தான்தோன்றியாக 'ஆண் பிள்ளைப் பசங்க'ளோடுதானே லூட்டி யடித்துக் கொண்டிருந்திருக்கிறேன்? நான் பெண்ணாகப் பிறந்தவளாக,

அத்தும் அடக்கமுமாக இருந்தால் இவள் இப்படிக் கத்து வாளோ? பாவம்...

## 3

சட்னியை அறைத்து வழித்து ஜோட்டியில் வைத்து விட்டு உட்கார்ந்திருந்தாள் பட்டு. கொடியடுப்பில் பக்கத்துக் கொடியில் கத்திரிக்கால் கொத்ஸு கொதித்துக் கொண்டிருந்தது. கொத்ஸைக் கிளறிக்கொண்டே அம்மா கத்தினாள், 'ஏண்டி, முழங்காலைக் கட்டிண்டே உட்கார்ந் திருக்கே! முதல் ஈட்டை எடுத்து ஸ்வாமிக்கு நைவேத்யம் பண்ணேன், நன்னா வெந்திருக்கும் போலிருக்கு. கலி யாணத் தாத்தா, விசாலம், ட்ரெஷரர் மாமா—எல் லோருக்கும் கொண்டு கொடுத்துட்டு வாயேன் ஏன் பிரமை பிடிச்சு உட்கார்ந்திருக்கே?'

முதல் ஈட்டு இட்லி இருபத்திரண்டையும் பட்டுதான் எடுத்துக்கொண்டு போவாள். கலியாணத் தாத்தா, மளிகைக் கடை விச்வமய்யர், கோவில் பொக்கிஷதாரர் அண்ணாசாமி—இந்த மூன்று வீடுகளுக்கும் போய்க் கொடுத்துவிட்டு வருவாள். விச்வமய்யர் உளுந்து, எண்ணெய், அரிசியெல்லாம் கணக்கெழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தார். மாதத் தொடக்கத்திலோ, இரண்டு மூன்று மாதங்களுக்கொரு முறையோ அந்தக் கணக்கைத் தீர்த்தால் போதும். கோவில் பொக்கிஷதாரர் அண்ணா சாமி கோவில் மரங்களில் பறிக்கிற தேங்காய்களையும், தனக்கு தினமும் கோவிலிலிருந்து வரும் அர்ச்சனைத் தேங் காய் மூடிகளையும் முறையே சகாய விலைக்கும் பாதி விலைக்குமாகக் கொடுத்து வந்தார். கலியாணத் தாத்தா நாள் கிழமை என்று முடைவந்தால் பத்து இருபது கடன் கொடுப்பார். தானாகக் கொண்டு கொடுத்தால் ஒழிய வாயைத் திறந்து கேட்கமாட்டார். அதனால் இந்த மூன்று



பேருக்கும்தான் இந்தக்கொண்டு கொடுக்கிற சலுகை. வேறு யாருக்கும் இப்படிப் பழக்கப் படுத்திக் கொள்ள வில்லை அம்மா. அப்படிச் செய்ய அவசியமும் இல்லை. இந்த மூன்று பேர்கூட இந்தச் சலுகையை எதிர் பார்க்க வில்லை. அவளாக ஏற்படுத்திக் கொண்டதுதான் இது. கோட்டூர் அம்மா வீட்டு இட்லிக்கு அவ்வளவு நிலையும் பெயரும் உண்டு. பூப்பூவாக வாயில் கரையும் அந்த இட்லிக்கு சன்னதித் தெருவும் மடவிளாகத் தெருவும், சாலியத் தெருவும் காலையில் கூடத்திலும் தாழ்வாரத் திலும் வந்து காத்துக் கிடக்கிற கிடையிலிருந்து அது தெரியும்.

முதல் ஈட்டை எடுத்துத் தட்டில் போட்டுக் கூடத்தில் ஸ்வாமி அலமாரியின் முன் வைத்து வணங்கினாள் பட்டு. ஆலிலைக் கிருஷ்ணன் புன் சிரிப்புச் சிரித்தான். உள்ளே புவனேச்வரி, புவனேச்வரி என்று முனகல் கேட்டுக் கொண் டிருந்தது. கண்ணை மூடினாள் அவள். தோடு தெரிந்தது. தட்டை எடுத்து உள்ளே வந்து அலுமினியத் தூக்கில் இட்லியை எடுத்துக்கொண்டு சட்னியையும் கொத்ஸையும் கொத்துச் சட்டியில் போட்டு இலையால் மூடிக்கொண் டாள்.

''சுருக்க வந்துடேடீ'' என்றாள் அம்மா.

பட்டு அடுக்களை நிலையைக் கடந்த பொழுது பூஜை அலமாரிக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தான் மூன்றாவது வீட்டு சங்குரு.

'எப்படா வந்தெ சங்குரு?'

சட்டென்று எதையோ மறைத்துக்கொண்டான் அந்தப் பயல். எதை மறைக்கிறான்?

''இப்பதாண்டி வந்தேன்'' என்று அவன் சிரித்தான்.

''நீ வந்ததே தெரியலியே! பட்டுக்குட்டீ, பட்டுக் குட்டீன்னு வீடு இடியறாப்பல கத்திண்டு வருவியே?...

என்ன அது கையிலே?...'' என்னத்தை இப்படி மறைத்துக் கொண்டிருக்கிறான்?

''ஒண்ணுமில்லேடீ.''

''பின்னே என்னத்துக்கு மறைக்கிறே?''

''கலியாணத் தாத்தாவாத்துக்குத்தானே போறே இப்ப—''...என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு, 'எங்க வீட்டுக்குன்னா கொண்டு வருவியா... கலியாணத் தாத்தான்னா கொண்டுபோய்க் கொடுப்பே' என்று பின் னால் கட்டியிருந்த கையை அசைத்தான். கடுதாசி மாதிரி இருந்தது. சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள் பட்டு. அப்படி வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்ள வில்லை. மனசு கடித்துக் கொண்டது.

அப்படியே தூக்குகளைக் கீழே வைத்தாள். சரே லென்று ஓடி அவன் கையிலிருந்த கடுதாசைப் பிடுங்கிக் கொண்டாள். ''வந்தவனுக்கு பூஜை அலமாரிகிட்டே என்னடா வேலை? பேசாம இட்லியை வாங்கிண்டு நடை யைக் கட்டுவியா! அலமாரியைக் குடையறது, மாடத்தைக் குடையறது! சீ! நீங்கள்ளாம் ஒரு மனுஷா மாதிரி!'' என்று சீறினாள்.

ஆனால் உள்ளே பயம் படபடவென்று நெஞ்சில் மோதிற்று. என்ன அவமானம்!

''இதுமாதிரி குடையறதுன்னா நீ இனிமே இந்த வீட்டுக்குள்ளே நுழையாதே'' என்று உள்ளே கேட்காமல் பல்லைக் கடித்தாள்.

''இல்லேடி—இல்லேடி—தெரியாம—செஞ்சுட்டேன்.''

'என்னடீ அங்கே?' என்றாள் அம்மா உள்ளேயிருந்து.

புருவத்தைத் தூக்கி ''சொல்லாதே'' என்று ஜாடை காட்டினாள் பட்டு.



''இல்லே'' என்றாற்போல ஜாடை காட்டினான் அவனும். அதற்குள் அம்மாவே வந்துவிட்டாள்.

'என்னடா சங்குரு?'

''ஒண்ணுமில்லே மாமி. பூஜை அலமாரியிலே இந்தப் புஸ்தகத்தைப் பிரிச்சு என்ன புஸ்தகம்னு பார்த்தேன்... அதுக்குத்தான் கோச்சுண்டா பட்டு.''

அம்மா அதை நம்பினாளோ நம்பவில்லையோ. தெரிய வில்லை. நம்பவில்லை போல்தான் தோன்றிற்று, அவள் இருவரையும் மாறி மாறிப் பார்த்த பார்வையில்.

''புஸ்தகத்தைப் பார்த்தா அதுக்கு ஏண்டி கோவிச்சுக் கணும்?''

''ஏதாயிருந்தா என்ன? பிறத்தியார் வீட்டுக்கு வந்து அலமாரியைக் குடையவாவது?''

''ஏண்டா சங்குரு! நீயும்தான் இப்படியெல்லாம் பண்ணலாமோ! இங்க ஒண்ணும் ஆயிரம் ரண்டாயிரம், தோடு மூக்குத்தின்னு போட்டு வைக்கலே—கிழிசல் புஸ்தகம்தான் வச்சிருக்கும். இருந்தாலும் இது நல்ல பழக்கம் இல்லை பாரு. வேற யார் வீட்டிலியாவது இப்படி குடைஞ்சு, அங்கே ஏதாவது கெட்டுப் போயிருந்துது துன்னா, உன் தலையிலெ தானேடா வந்து விடியும்—ம்!''

ஆமாம் மாமி!''

''நீ போயேண்டி, நாழியாச்சே.''

அவனை ஒரு தடவை முறைத்துப் பார்த்துவிட்டு தூக்குச் சட்டிகளை எடுத்துக்கொண்டு வெளியே போனாள் பட்டு. வெளியே போய் இரண்டு வீடு தாண்டிய பிறகும் அவளை விட்டு அச்சம் விலகவில்லை. இருந்து அந்தப் பயலை இட்லியைக் கொடுத்து அனுப்பிவிட்டு, பிறகு வந்திருக்கக் கூடாதா என்று தோன்றிற்று. ஆனால்,

ஒன்றும் சொல்ல மாட்டான். சொல்லட்டும்! நாளைக்கு
முழங்கால் முட்டியை உடைத்துவிட மாட்டேனா? அப்
புறம் கோட்டூர் அம்மா வீட்டு இட்லி வாயில் மண்தான்
விழும் என்று சமாதானப் படுத்திக்கொண்டே நடந்தாள்.

ரவிக்கைக்குள் கசக்கிப் போட்ட கடுதாசு நெஞ்சை
உறுத்திக் கொண்டே இருந்தது. கிழித்துப் போட்டு
விட்டால் என்ன? முடியாது. கை இரண்டிலும் தூக்குகள்.

கலியாணத் தாத்தா வீட்டிற்கு முதலில் போகிற
வளுக்கு இன்று கால் வெட வெடத்தது. மளிகைக் கடை
யார் வீட்டிலும் பொக்கிஷதார் வீட்டிலும் இட்லியைப்
போட்டு விட்டுக் கடைசியில்தான் அங்கே போனாள்.

வழக்கம்போல கலியாணத் தாத்தா வாசல் திண்ணை
யில் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார். பக்கத்தில்
நாலைந்து குழந்தைகள். அவரைப் பார்க்கக்கூடக் கூசிற்று
அவளுக்கு. ''காலே அரைக்கால் ரூபாய்க்கு நாலேரைக்
கால் வாழைக்காய்னா, நாலேரைக்கால் ரூபாய்க்கு
எத்தனை வாழைக்காய் கிடைக்கும்'' என்று குழந்தை
களுக்குக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த அவர் பட்டு
வைப் பார்த்ததும் ''இத பாரு பட்டுக்குட்டி இட்லி
கொண்டுவரா, நாலு இட்லி விலை மூணணான்னால், ஒரு
ஆழாக்கு சாம்பார் என்ன விலை? ஒரு கரண்டி சட்னி
என்ன விலை?'' என்று கேள்வி கேட்டார் அவர். அவர்
கணக்கெல்லாம் இப்படித்தானிருக்கும்...மூணு வெள்ளைப்
பசுமாடு முந்நூறு ரூவா. நாலு சேப்புப் பசுமாடு என்ன
விலை? மேற்குத்திக் காளைக்கு லாடம் அடிக்க மூணுரூவா
கேட்கிறான் தெக்கால் தெரு இப்ராஹிம். தெக்குத்திப்
பசுமாட்டுக்கு லாடம் அடிக்கிறதுன்னா என்ன கேப்
பான்?...இப்படிக் கணக்குகள், புதிர்கள் போட்டுக் கொண்
டிருப்பார். குழந்தைகள் மூளையைப் போட்டுக் குழப்பிக்
கொண்டிருக்கும்; திடீர் திடீர் என்று சிரிப்பு வெடிக்கும்.
புரியாத குழந்தைகள் தலையிலடித்தாற் போல விழிக்கும்.



இட்லியைப் போட்டுவிட்டு கால் நிலைகொள்ளாமல் வெளியே வருவதற்காக நடந்தாள் பட்டு. இடைகழிக்கு வந்ததும் உள்ளேயிருந்து குரல் வந்தது. ''என்னடி பட்டு, பேசாம போறே? மறந்து போயிட்டியா?'' என்று கையில் கலியாண பேடாவை எடுத்துக் கொண்டு வந்தாள் கலியாணப் பாட்டி. இட்லி போட்டுவிட்டு வரும் போதெல்லாம் தினமும் ஒரு பேடாக் கொடுப்பாள் அவள். ஒரு சின்ன நெருப்புப் பெட்டியளவு இருக்கும் அது. அதில் பாதி கனம் இருக்கும். வாயில் போட்டால் கரகரவென்று கரையும். நெய் மணக்கும் ஓமம் மணக்கும். ஏலம் மணக்கும். ஜாதிக்காய் மணக்கும். இஞ்சி லேசாக தொலைவில் மணக்கும். இதையெல்லாம் தவிர இன்னொரு மணமும் அதில் உண்டு. அது என்ன மணம், எந்தப் பொருளின் மணம் என்று யாருக்குமே தெரியாது. கண்டுபிடிக்க முடிய வில்லை. இந்த அதிசய பட்சணத்திற்கு கலியாண பேடா என்றே பெயர் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந் தார் கலியாணத் தாத்தா. பட்டுவுக்கு விவரம் தெரிந்த நாளாக இந்தக் கலியாண பேடாவைத் தின்று கொண் டிருக்கிறாள். ஆனால், அதை எப்படிச் செய்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. அது அவருக்கும் கலியாணப் பாட்டிக்கும்தான் தெரியும். அந்தப் பேடா ஜில்லா ஜில்லா வாக, நகரம் நகரமாகப் போய்க்கொண்டிருந்தது. தஞ்சாவூர் கலெக்டர், திருநெல்வேலி கலெக்டர், ஜமீன் தார்கள், வெள்ளைக்காரர்கள்கூட இந்தக் கலியாண பேடாவைத்தான் டிபனுக்கு நாலு ஐந்து என்று தின்று விட்டுக் காபி குடிப்பார்களாம். இப்படி ஊர் ஊராக அனுப்பி அனுப்பி கலியாணத் தாத்தாவுக்குப் பணம் குவிந்து கொண்டே வந்ததாம். அந்தப் பணம்தான் இப்படி இரட்டை மாடி வைத்த வீடாக நிகுநிகுவென மின்னுகிறது. சன்னிதித் தெருவில் இதைத் தவிர இரண்டு வீடு கலியாணத் தாத்தாவுக்கு உண்டு. ஆற்றங்கரைக்குப் போகிற பாதையில் சிவன் கோயிலுக்கு இப்பால் இருக்கிற மாந்தோப்பு, பாதைக்குத் தெற்கே உள்ள மூன்று வேலி

நிலம் எல்லாம். கலியாணத் தாத்தா கடைத் தெருவில் ஒரு சின்னக் கடையே வைத்து அதில் முத்துராமுவை உட்கார்த்தி வைத்து விட்டார். விடிய விடிய அந்தக் கடையைத் திறக்கத்தான் ரேக்ளாவில் கோலம் போடுகிற அத்தனை பேர்களையும் கடந்து செல்வான் அவன். அச்சோ! அச்சோ! என்ன அழகு! என்ன அழகு! கிருஷ்ண பரமாத்மா மாதிரி! மேலே படிக்கவில்லை அவன். வியாபாரத்தில் உட்கார்ந்து விட்டான். எதற்காகப் படிக்க வேண்டும் அவன்! இல்லை அவர்!

பேடாவை வாங்கிக்கொண்டு "வரேன் மாமி', என்று சொன்ன பட்டுவை கலியாணப் பாட்டி விடவில்லை.

"இருடி..." என்று உள்ளே போனாள்

மறுபடியும் என்ன கொண்டு வரப் போகிறாள்? பாட்டி சமையல் உள்ளில்தான் போனாள் அடுத்த அறையில் போகவில்லை. அடுத்த அறையில் யாருமே போக முடியாது. அங்கேதான் கலியாண பேடாவுக்கு சாமான் இடிக்கிறது, கலக்கிறது எல்லாம் நடக்கிறது. அந்தக் கதவு எல்பொழுதும் சாத்தியே இருக்கும். பாட்டியைக் கூப்பிட்டால் ஒரு நிமிஷம் கழித்துக் திறந்து கொண்டு வருவாள். வெளியே வந்துதான் பேசுவாள். வரும்போது கதவை ஞாபகமாகச் சாத்திக் கொண்டுதான் வருவாள். அப்படிச் சாத்தும் பொழுது பார்த்த பார்வையில் அது ஒரு தனிக்கட்டு என்று தெரியும். முன்னே ஒரு அறை. அதன் கோடியில் ஒரு நிலை. அதற்குப்பால் ஒரு அறை அதற்குமப்பால் இன்னொரு அறை. அது தூர இருந்து பார்க்கும்போதே கரியும் பழுப்புச் சுவருமாகத் தெரியும். பேடா பண்ணுகிற அடுப்பு அங்கேதான் இருக்கிறதோ என்னவோ? இந்தப் பரமரகசியக் கட்டுக்குள் மனுஷப் பிறவி யாரும் அடி எடுத்து வைக்க முடியாது—கலியாண பாட்டியையும் கலியாணத் தாத்தாவையும்—முத்துராமுவையும் தவிர! ஒரே ஒரு பிள்ளை. அவனுக்குக் கூடவா கட்டுப்பாடு இருக்கும்! அவருக்குக்கூடவா! செல்லப்பிள்ளை! ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை! அவன்தான் பிடிவாதம் பண்ணி போன வருஷம் அப்பாவை ஒரு காலண்டர் போடச் சொன்னானாம். அதிலே ஒரு பிள்ளையார் பொம்மை பல வர்ணங்களில் போட்டிருந்தது. மேலே கலியாண விலாஸ் என்று சிவப்பாக எழுதியிருக்கும். பிள்ளையாருக்குக் கீழே "கலியாண் பேடா'' என்று கொட்டை எழுத்துக்கள். கீழே, ஈடற்ற மணம், இணையற்ற ருசி, யாருக்குமேற்ற இனிய உணவு, சுத்தமானது, ஆரோக்கியமானது— என்று மூன்று வரியில் எழுதியிருக்கும். ஒரு நாளைக்கு இட்லி போட்டுவிட்டு வரும்பொழுது தாத்தா, பாட்டிக்கு ஒரு உத்தரவு போட்டு ஒரு காலண்டரைப் பட்டுவிடம் கொடுக்கச் சொன்னார். அந்தக் காலண்டரைப் பூஜை அலமாரிக்கு மேலே மாட்டிவைத்தாள். அதைப் பார்த்துப் பார்த்து அந்த வாசகமெல்லாம் நெட்டுருவாகிவிட்டது அவளுக்கு.



சமயலறையிலிருந்து ஒரு அலுமினியத் தூக்கு டப்பாவோடு வெளியே வந்தாள் கலியாணப் பாட்டி.

"இதபாரு பட்டு! இதிலே அரைப்படி உளுந்து வச்சிருக்கேன்! மிளகு, மிளகாய், உப்பு எல்லாம் கூட கட்டிவச்சிருக்கேன், இன்னிக்கு வியாழக்கிழமையா? வடைமாலை சாத்தறேன்னு அனுமாருக்கு வேண்டிண்டேன், எனக்கோ கடைப் படலே, உங்கம்மாக்கிட்ட சொல்லி இதைக் கொஞ்சம் வழுமுணா அறச்சுக் கொடுக்கச் சொல்லு. கோடி புண்யம் உண்டு' என்றாள் பாட்டி.

"அதென்ன பாட்டி பிரமாதம்! நான் அறச்சுக் குடுக்கறேன்'' என்று சொல்லும்போது பட்டுவுக்கு உள்ளெல்லாம் சந்தோஷத்தைப் போட்டுத் திணித்து அடைக்கிறாப் போலிருந்தது. "நான் அறச்சுக் கொடுக்கிறேன், பாட்டி, அனுமாருக்கு செய்யக் கொடுத்து வச்யணுமே!''

'நீ மகராஜியா இருக்கணும்டீம்மா! உங்கம்மாவுக்கு எத்தனையோ பாடு! எப்படிடாப்பா சொல்றதுன்னு நெனச்சிண்டேயிருந்தேன்...''

''நான் இல்லியா பாட்டி! எனக்கு இதைவிட என்ன வேலையாம்!... நீங்க கவலைப்படாதீங்கோ. இன்னும் சித்தெ நாழியிலே கொண்டு கொடுக்கிறேன்.''

'குளிச்சிட்டியோ?'

''குளிக்கப் போறேன்.''

''குளிச்சுட்டு அறைக்கணும்டீம்மா. ஸ்வாமிக்குச் செய்யறது.''

''ஆமாம் பாட்டி. நன்னாத் தலைக்கு ஸ்நானம் பண்ணி விட்டு மடியா அறைச்சுக் கொடுக்கறேன்.''

''ஆமாண்டி கண்ணு! நீ மகராஜியா இருக்கணும் டீம்மா'' என்றாள் பாட்டி.

பட்டு வெளியே வரும்பொழுது கலியாணத்தாத்தா வின் குரல் மறித்தது. குழந்தைகள் ஹோவென்று சிரித் துக் கொண்டிருந்தன.

''பட்டுக்குட்டீ!''

''என்ன தாத்தா!''

''என்னடி பேசாம நீ பாட்டுக்குப் போயிண்டே இருக்கே. அழகுசிங்கு பட்பட்பட்னு கணக்கு போட்டிண்டி ருக்கான். நீ பார்க்க வாண்டாமோ அதிசயத்தை! சித்தெ நில்லுடீ... இதோ பாரு எப்படி டக்கு டக்கு ஆன்சர் சொல்றான் பாரு'' என்றார் தாத்தா!''

பட்டு திண்ணையில் பார்த்தாள். தூணில் சாய்ந்ததும் சாயாததுமாக, குட்டைக் கையை மேலே தூக்கி பின் பக்க மாகத் தூணை அணைத்தவாறு உட்கார்ந்திருந்தான்



அழகு சிங்கு. அழகுசிங்கு குள்ளன். உயரம்—நாலு ஐந்து வயதுக் குழந்தையின் உயரம்தான். ஆனால், வயசு அவனுக்கு நாற்பதோ முப்பதோ தெரியாது. குட்டைக் கால், குட்டைக்கை, குட்டை உடம்பு. ஆனால், கால் கை எல்லாம் மொத்தமாக நாற்பது முப்பது வயசுக்கால் கையாகவே இருக்கும். மார்பில், புஜத்தில், கணுக்காலில் கண்டு கண்டாகச் சதை. குடுமி, பட்டையாக நாமம். மொத்தமாக ஒரு பூணூல். பட்டைக்கரை போட்ட வேட்டி. அந்த வேட்டியின் நீளத்தைப் பாதியாக மடித்து அந்த மடிப்பையும் ஓரமாக இன்னொரு மடிப்பு மடித்துக் கட்டிக்கொண்டிருந்தான்.

எல்லோருக்கும் வேட்டி பார்டர் கீழே இருந்தால் இவன் கட்டில் முந்தி கீழே இருக்கும். அந்த முந்தியின் நூல் பிசிறுகள் மண்ணில் பட்டுவிடப் போகிறதே என்று கவலையாக கணுக்காலுக்குக் கீழே போகாமல் கட்டிக் கொண்டிருப்பான். தோளில் ஒரு இரண்டு முழத்துண்டு. கண்ணில் கோலிசோடா பாட்டில் இரண்டை உடைத்து அடிப்பக்கத்தைக் கண்ணுக்கொன்றாக மாட்டினாற் போல் ஒரு மூக்குக்கண்ணாடி. அப்படியும் கண் சரியாகத் தெரியாமல் கண்ணை இடுக்கிப் பார்ப்பான் அழகுசிங்கு. கணக்கில் அவன் சூரப்புலி. சன்னதித் தெருவில் அவனுக்குப் பொழுது போகவில்லை என்றால் கலியாணத் தாத்தாவிடம்தான் உட்கார்ந்து கொண்டிருப்பான்.

''சொல்லுங்கோ தாத்தா'' என்று அத்தனைப் பல்லை யும் காட்டி, கண்ணை இடுக்கிக்கொண்டு கணக்குப் போடத் தயாரானான் அழகுசிங்கு.

''போடட்டுமா— கேள்றீ பட்டு— அறுபத்தெட்டும் முப்பத்தெட்டும்?'' என்று நறுக்கென்று ஒரு கூட்டல் போட்டார் கலியாணத்தாத்தா.

'நாப்பத்தெட்டு'— நறுக்கென்று விடை வந்தது.

'இருபத்திநாலும் அம்பத்திநாலும்?'

'பதினாலு'— பட்டென்று விடை.

''கரெக்ட். நாப்பத்தேழும் இருபத்தஞ்சும்?'

''அம்பத்தஞ்சு.''

''தொள்ளாயிரத்தெட்டும் தொள்ளாயிரத்தெட்டும்?''

''நாலாயிரத்தெட்டு''

''நாலாயிரத்து அறுபத்திநாலும் மூவாயிரத்து முப்பத்திநாலும்?'

''ரண்டாயிரத்து எழுபத்திநாலு.''

''முப்பதும் முப்பதும்.''

''அறுபது.''

''ச்சே, தப்பிப் போயிட்டுதேடா. இத்தனை நாழி கரெக்டாப் போட்டுண்டு வந்தே?''

குழந்தைகள் ஹோவென்று சிரித்தன. ஒரு பயல் குப்புற விழுந்து சிரித்தான். அவன் கண்ணில் நீர் கட்டி விட்டது.

''எப்படிச் சொல்றான் பாத்தியா ஆன்சர்லாம், கன்னத்திலே அறையறாப்பல?'' என்று பட்டுவிடம் சொன்ன தாத்தா ''என்ன இந்தக் கையிலே?'' என்றார்.

'பாட்டி இன்னிக்கி அனுமாருக்கு வடைமாலை சாத்தப் போறாளாம். உளுந்து அறச்சுக் கொடுக்கச் சொன்னா. எடுத்துண்டு போறேன்.''

''எத்தனை படி?''

''அரைப்படி.''

''சட்னு சொல்லுடா அழகுசிங்கு— அரைப்படி உளுந்துக்கு எத்தனை வடை தட்டலாம்?''



'அறுநூறு'— டக்கென்று பதில் சொன்னான் அழகுசிங்கு.

''அறுநூறு வருமா? பலே. அப்படீன்னா எல்லாரும் வந்துடுங்கடா சாயங்காலம்'' என்றார் தாத்தா.

மீண்டும் இரைச்சல்.

பட்டு தாத்தாவிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினாள். கலியாணத் தாத்தா மாதிரி யாருமே இருக்க முடியாது. குழந்தைகள் என்றால் அவருக்கு உயிர். குழந்தைகளும் அவரைக் கண்டால் விடாது. அதே சமயம் அண்ணாசாமி, இருக்கிறதே, கோவில் ட்ரெஷரர் அதற்குக் குழந்தைகள், குட்டிகள் என்றாலே வேப்பங்காய்.

முன்பெல்லாம் கோவில் பிராகாரத்தில் ஒரே குழந்தைக் கூட்டமும், பையன்கள் கூட்டமுமாகத் தானிருக்கும். ஊருக்கு விளையாட்டு மைதானம் இந்தக் கோவில் பிராகாரம்தான். இவ்வளவு பெரிய பிராகாரத்தில் வேறு என்னதான் செய்கிறது? பேய்ப் பந்து, சுவர்ப்பந்து, கிட்டிப்புள்— இப்படி. குருவி இரைச்சல் காக்காய் இரைச்சலாக இருக்கும் கோயில். இந்த அண்ணாசாமி ட்ரெஷ்ரராக வந்தாலும் வந்தது, நாலு வருஷகாலமாகக் கோயில் பக்கம் ஒரு குழந்தை தலைகாட்ட முடியாமல் பண்ணிவிட்டது. ஊளைச் சதை மார்பிலும் கையிலும் ஆட ஆட, ஓடிஓடி வரும். அடிக்க அடிக்க வரும். நாலைந்து பையன்களை வசமாகப் பிடித்துக் கிள்ளிக்கூட விட்டது. கிள்ளினால் கையில் 'தவக்ளை' புடைக்கும். அப்படி ஒரு பிசாசுவிரல்! தண்டு ஒரு தடவை அகப்பட்டுக் கொண்டு, இந்தப் பிசாசு ரத்தம் கசியத் துடையில் கிள்ளிவிட்டது. அது மூக்குப் பொடி வேறு போடுமாம். நக இடுக்கில் இருந்த பொடி வேறு புகுந்து தண்டு எரிச்சல் தாங்காமல அப்பா அப்பா என்று கொஞ்ச அவதிப்பட வில்லை. அந்த அண்ணாசாமிக் கடுவன் பூனைக்கும் இந்தக் கலியாணத் தாத்தாவுக்கும் எவ்வளவு தூரம்!... கலியாணத் தாத்தா பட்டுக்குட்டி

என்று கூப்பிடும்போதே, எத்தனை வாஞ்சை; எத்தனை வாத்சல்யம்! ஆனால், பட்டுக்குட்டி என்று அப்போது கூப்பிடுவாரோ? மாட்டுப்... அப்போது...!

பட்டுவுக்கு இப்பொழுது உடலெல்லாம் குன்றிற்று. அவரை நினைத்து இல்லை. இந்த சங்குருப்பயல் கண்ணில் படும்படியாக ஒரு கடுதாசி எழுதி அதை பூஜை அலமாரியில் வைத்தேனே! என்ன அவமானம்! அவன் சொல்லாமல் இருக்கவேண்டும் என்று வயிற்றில் சந்தேகம் நெளிய நெளிய நடந்தாள். ரவிக்கைக்குள் அந்தக் கடுதாசு அப்படியே கிடக்கிறது.

வீட்டில் நுழையும்பொழுது கூடத்தில் சற்றுக் கூட்டமாக இருந்தது— வழக்கம்போல. சன்னிதித் தெருப் பயல்கள் நாலு பேர்; மடவிளாகத் தெருக் குட்டிகள் இரண்டு, சாலியத் தெரு கிஷ்டம்மா, கும்டாவின் இரண்டாம் பெண்டாட்டி ருக்குமணி— எண்ணெய் கடை மகாலிங்கம் செட்டியார்— எல்லாரும் தட்டும் குவளையும், பேலாவும் கிண்ணமுமாக நின்றுகொண்டிருந்தார்கள்— இட்லிக்கும் கொத்சுக்கும் நாக்கை நீட்டிக்கொண்டு.

'தாளம் என்னடா தாளம்— எதுக்குத் தாளம் போடறே! சோத்துக்கா?' என்று தட்டில் காசால் தாளம் போட்டுக் கொண்டிருந்த ஒரு பயல் மீது எரிந்து விழுந்து கொண்டே உள்ளே போய் தூக்குகளை வைத்துவிட்டு, உடனே கொல்லையில் காலலம்பப் போவது போல் போய் ரவிக்கைக்குள் கிடந்த கடுதாசைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து வாழை மரங்களின் இடுக்கில் எறிந்துவிட்டு, காலைக் கழுவிக் கொண்டு உள்ளே வந்தாள் பட்டு.

கூடத்தில் வந்த கும்பல் கூடுவதும் குறைவதுமாக இருந்தது. முற்றிலும் கலைந்து கூடம் ஒழிய ஒன்பது மணியாகி விட்டது. அதுவரையில் அம்மா வாயைத் திறக்கவில்லை. மூலையில் வைத்திருந்த தூக்குக்கூட எல்லாம் ஒழிந்த பிறகுதான் அவள் கண்ணில் பட்டது.



'ஏதுடீ உளுத்தம் பருப்பு?'

'இன்னிக்கு சாயங்காலம் அனுமாருக்கு வடைமாலை சாத்தறாளாம் கலியாணிப்பாட்டி. தள்ளலையாம். சித்தெ அரைச்சுக் கொடேன்னாள். ஸ்நானம் பண்ணிப்பிட்டு அரைக்கப் போறேன்.'

எல்லாம் நீயா நிச்சயம் பண்ணினுடுவே போலிருக்கே.'

'என்னம்மா!'

'அரைச்சுக் கொடுக்கலாமான்னு ஒரு வார்த்தை என்னைக் கேக்கலாமேடி. அம்மான்னு, ஆத்துக்குப் பெரியவள்னு என்னை ஒருத்தியை வச்சிருக்கே!'

'உனக்கு சிரமமாயிருக்குமேன்னுதான் நான் அரச்சுக் கொடுக்கறேன்னு எடுத்துண்டு வந்தேன்.'

'அதுக்குத்தாண்டி நானும் சொல்றேன். என்னை ஒரு வார்த்தை கேட்கப்படாதான்னு. என்னமோ மாட்டுப் பொண் மாதிரி நீ எடுத்துண்டு வரதும், அவ சொல்றதும்... ரொம்ப நன்னாயிருக்கு.'

'நீ என்ன சொல்றே!...'

'கல்யாணிப் பாட்டியும் நீயுமா பேசிண்டேளாக்கும், நான் மாமியாரா இருக்கேன், நீ மாட்டுப் பொண்ணா இருடீன்னு—'

'என்ன திப்பு திப்புன்னு என்னமோ சொல்லக் கிளம்பிட்டே.'

'நான் என்னத்தைடி கண்டேன்! நீதான் அலமாரியிலே கடுதாசு எழுதி வச்யறே! வடைக்கு அரச்சுக் கொடுக்கறேன்னு வாங்கிண்டு வரே. நான் எதைக் கண்டேன்!'

பட்டு ஒன்றும் பேசவில்லை. அம்மாவைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. ஆனால் அம்மா தன்னைத் துருவி,

துளைத்துப் பார்ப்பது, அவள் கண் தோல் மீதெல்லாம் உரைத்தது.

'சும்மாக் கிடக்கற சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டிங்கற மாதிரி இருக்கு. ரண்டு பேர் சமர்த்துன்னு சொன்னவுடனே, அப்படியெல்லாம் நெனச்சுக்க வாண்டாம்னு அசடு வழிஞ்சியாக்கும். கலியாணத் தாத்தா மாட்டுப் பொண்ணா என்னைக் கொண்டு சேர்த்துடுன்னு எழுதி வச்சிருந்தியாமே அலமாரியிலே—'

'——'

''ம்?'

——'

'பதில் சொல்ல மாட்டியோ?'

'——'

பட்டு பேசவுமில்லை, அவளைப் பார்க்கவுமில்லை. பயந்து கொண்டிருந்தவளுக்கு ஏதோ மார்புக்குள் கிளுகிளு வென்றது. அந்தக் கிளுகிளுப்பு முகத்திற்கு வந்து உதட்டிலும் ஒரு புன்னகையின் சாயலாக வழிந்தது. அதை அடக்கி அடக்கிப் பார்த்தாள், முடியவில்லை.

முகத்தை இன்னும் அப்பால் திருப்பிக் கொண்டாள்.

'யாருக்குடி அதை எழுதி வச்சே?'

'——'

சட்டென்று அம்மா வளைத்து அவள் முகத்திற்கு முன்னால் வந்து நின்றாள்.

'யாருக்குடி எழுதி வச்சேங்கறேன். என்னமோ குரவளையை முறுக்கிண்டு நிக்கறியே!'

அம்மாவின் முகம் மலர்ந்து கிடந்தது. அவளும் சிரிக்கிற மாதிரி இருந்தது.



'யாருக்கு எழுதினே? சொல்லேண்டி!'

பட்டு இரண்டு கைகளையும் முறுக்கிக்கொண்டு நின்றாள். அவள் முகம் இன்னும் மலர்ந்துவிட்டது.

'யாருக்கு எழுதினேடி? சொல்லேன்! ஸ்வாமிக்கா?'

'போம்மா.'

'ஸ்வாமிக்குத்தானே?'

'ஆமாம்—அப்படித்தான்—போ!'

அம்மா வாயை விட்டுச் சிரிக்கவில்லை. ஆனால் வாய் மலர்ந்து உடம்பு குலுங்கிற்று.

'எழுதினதுதான் எழுதினே! சங்குரு கண்ணிலே படும்படியா அலமாரியிலே வக்யணுமா? ஏண்டி! அது தெருவெல்லாம் போய்த் தம்பட்டம் அடிச்சு உன்னைச் சிரிக்க அடிக்குமே!'

'அதெல்லாம் மாட்டான்.'

'எங்கிட்ட சொன்னாப்பல அவன் தெருவிலியும் போய்ச் சொன்னா? தரித்ரமே—இனிமே இதெல்லாம் பண்ணி வக்யாதே. இப்படியெல்லாம் எழுதியும் வக்யாதே ...முத்துராமுக்கு மூணு வீடு, மூணு வேலி நிலம், கடையெல்லாம் வரப்போறது. பதினாயிரம் இருபதினாயிரம்னு வச்சுண்டு ஆயிரம் பேர் காத்துண்டிருப்பா அவனுக்குப் பொண்ணு கொடுக்க. இனிமேல் இப்படியெல்லாம் கேக்க மாட்டேன் தாயே. எனக்கு யோக்யதை இல்லாத பண்டத்துக்கெல்லாம் ஆசைப்படமாட்டேன்னு ஒரு கடுதாசியை எழுதி அலமாரியிலே வச்சுப்பட்டு வடைக்கு அரைச்சுக் கொடுத்துப்பட்டு, ரண்டணா கூலியை வாங்கிண்டு வந்து சேரு, கலியாணிப் பாட்டிக் கிட்டேருந்து' என்று சொல்லிக் கொண்டே அம்மா அப்படியே தூண்மீது சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கொண்டாள்.

பட்டு குளிக்கக் கொல்லைக்குப் போனவள், கொல்லை நிலையின் இறக்கத்தில் கால் தடைப்பட்டாற்போல் நின் றாள். வெளியைப் பார்த்தாள். குமுறிக் குமுறி வந்தது, இறக்கத்திலிருந்து கொல்லைத் திண்ணை மீதேறி சுவர்ப் டக்கும் திரும்பி, பல்பொடி வைக்கும் மாடத்தைப் பார்த்துக் கொண்டு அழுதாள். உதட்டைக் கடித்து அழுகையை விழுங்கப் பார்த்ததெல்லாம் பலிக்கவில்லை. மூக்கு, அவள றியாமல் உறிஞ்சிற்று. அந்தத் திண்ணை மூலையில் தேங்காய் உறிக்கிற குத்துப்பாறை, மரத்தில் செருகி நின்றது—கூராக, கறுப்பாக மின்னிக் கொண்டு—அந்தக் கூரில் அப்படியே வயிற்றைக் கொடுத்துக் குதித்து விட்டால்...

காலடி கேட்டது. சட்டென்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

'என்னத்துக்குடி அழறே!'

'——'

'அழு, அழு— இப்பவே அழுது தீத்துப்பிடு. அப்பறம் இந்த அசட்டு ஆசையெல்லாம் வராம அழுது கரைச்சுத் தொலை என்று சொல்லி விட்டு, 'வடைக்கு நானே அரச்சுக் கொண்டு கொடுத்துட்டு, வரட்டுமா?' என்று கேட்டாள் அம்மா.

'நானே அரைக்கிறேன்—குளிச்சுப்ட்டு.'

'அரைக்கிறதுன்னா, சுருக்க அரை—போடி, அசடு! அப்படியெல்லாம் எம்பி எம்பிப் புடிக்கிறதுக்கு இஞ்ச என்ன வச்சிருக்கு?' என்று சொல்லிக்கொண்டே நகர்ந் தாள் அம்மா. அவளுடைய குரலும் கம்மிக் கரகரத்தது. உள்ளே போய் அவளும் இப்படித்தான் அழப்போ கிறாளோ என்னவோ?

அப்படி ஒரு துணை கிடைத்ததும் தான் பட்டுவுக்குக் கால் நின்றது. தரையில் ஊன்றி நகர முடிந்தது. கிணற்



றண்டை போய் பாவாடையை அவிழ்த்து, தாவணியைச் சுற்றி செருகிக் குளிக்கத் தொடங்கினாள்.

# 4

வடைக்கு அரைத்து, கலியாணிப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு வந்தாள் பட்டு. மாலையில் அனுமார் கோயிலுக்கும் போனாள். அனுமாரிடம் கூட வேண்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவளுக்கு.ஆனால் மன செல்லாம் மழையாக அடித்து, அசட்டுத்தனங்களை யெல் லாம் கரைத்துக் கழுவி விட்டாற்போலிருந்தது. மறுபடியும் ஒரு மழை பெய்து சூறையாடப் போகிறதே என்றுஒன்றும் வேண்டிக் கொள்ளாமல் பேசாமல் நின்று கும்பிட்டு விட்டு, பாட்டி தாம்பாளத்தில் போட்டுக் கொடுத்த வடை களையும் துளசியையும் வாங்கிக்கொண்டு வீடுவந்து சேர்ந் தாள். கோயிலுக்குப் போனாள்; மகிழம்பூ கோத்தாள். மகிழம்பூ, தோடு மாதிரிதான் இருக்கிறது. இருந்துவிட்டுப் போகட்டும். நான்கூட அவள் காதில் தோடு மாதிரிதான் இருக்கிறேன்—இல்லை— இருந்தேன்—இருந்ததாக சொப் பனம் மாதிரி கண்டேன். கண்டால் என்ன?—புவனேச் வரியின் சன்னிதியில் குங்குமார்ச்சனை செய்து கொண்டி ருந்தான் பஞ்சு. அர்ச்சனை முடிந்ததும், செய்ய வந்த வருக்கு பிரசாதத்தைக் கொடுத்துவிட்டு, 'மாலை கொண்டு வந்திருக்கியா?' என்று மகிழ மாலையை வாங்கிக்கொண் டான். பட்டு புவனேச்வரியைப் பார்த்தாள். தலை முடியைப் பார்த்தாள். முகத்தைப் பார்த்தாள். கழுத்தைப் பார்த்தாள். அகன்ற மார்பகத்தைப் பார்த்தாள். வளைந்த இடையைப் பார்த்தாள். காலை ஒட்டிக் கட்டி யிருந்த புடவையைப் பார்த்தாள். முழங்கைக்குக் கீழே சற்று வெளியே வளைத்த அபயகரத்தைப் பார்த்தாள். காலில் பசும் பொன்னாக மின்னிய கழலைப் பார்த்தாள்.

தோட்டைப் பார்க்கவில்லை. பார்க்காமல் கண்ணை வேறு பக்கமெல்லாம் ஓட்டிக்கொண்டு நின்றாள். நிற்க முடியாமல் திரும்பினாள். 'ஏண்டி' பட்டு! கிளம்பிட்டே?' என்று கர்ப்பக்கிருகத்திலிருந்து குரல் கொடுத்தான் பஞ்சு. திரும்பினாள் அவள். 'மாலை கொண்டு கொடுத்தே. உனக்காகக் கர்ப்பூரம் காட்டப் போகிறேன். பார்த்துட்டுப் போக வாண்டாமோ?' என்று கர்ப்பூரத்தை ஏற்றி புவனேச்வரியின் முகத்திற்கு முன் பிடித்தான் பளீர் என்ற தோடு ஒரு நீலவீச்சு வீசிற்று. கண்ணைக் குத்திப் பாய்ந்து உள்ளே குருத்தைக் குத்திற்று—தேன் துளிவிட்டால் கண் எரியுமே, அந்த மாதிரி. தலையைக் குனிந்து கொண்டாள் பட்டு. பஞ்சு கற்பூரத் தட்டுடன் வந்தான். சுடரைக் கண்ணில் எடுத்து ஒற்றி, குங்குமத்தையும் நாலுவிரற் கடை ஜாதிப் பூவையும் வாங்கிக் கொண்டு திரும்பினாள் அவள்.

சாப்பாடு, படுக்கை, சுவரில் முத்தொளியிட்ட பெட் —ரூம் விளக்கு. படுத்தவுடனே கட்டை போட்டாற்போலத் தூங்குகிற அம்மா. ஆனால், இன்று தூங்கவில்லை போலி ருக்கிறது. நெஞ்சைக் கமறிக் கனைத்துக் கொண்டிருந் தாள். பேச்சில்லை, மூச்சில்லை.

திடீரென்று அம்மாவின் குரல் மொணமொண வென்று கேட்டது. 'பிராப்தம் எப்படியிருக்கோ...ஒண்ணும் சொல்றதுக்கில்லை. இருந்தாலும் நடக்கிற சங்கதிக்கு ஆசைப்பட்டால்தான் பாந்தமாயிருக்கு' என்றது அம்மா வின் குரல். பட்டு திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அப்படியே மோட்டு வளையின் இருளைப் பார்த்துக் கொண்டே மல்லாந்து படுத்திருந்தாள், அம்மாவின் குரல் அப்புறம் கேட்கவில்லை.

தோடு பளிச்சிட்டது...அம்மா கனைக்கிறாள்—கமறு கிறாள்...அன்றிரவு மட்டுமில்லை. மறுநாளும் அப்படித் தான் கனைத்தாள், கமறினாள் மூன்றாம் நாளும் கனைத்



தாள், கமறினாள். நாலாம் நாள் கனைக்கவில்லை. கமற வில்லை மகிழமாலையைக் கொடுத்துவிட்டு இருட்ட இருட்ட வரும் பொழுது, அந்தப் பெரிய கல்லுரல் முன்னால் உட்கார்ந்திருப்பவளும் அங்கே இல்லை. பூஜை அலமாரிக்கு முன் உட்காந்து தூணில் தலையைச் சாத்தி யிருந்தாள். அடுக்களைக்குள் போன பட்டு, பெரிய ஜோட்டி இரண்டையும் திறந்து பார்த்துவிட்டு வந்தாள்.

'உடம்புக்கென்னம்மா? உளுந்து, அரிசியெல்லாம் அப்படியே ஊறிண்டிருக்கு. நான் அரைக்கட்டுமா?' என்றாள், அடுக்களை நிலையில் நின்று கொண்டு.

'இனிமே அரிசி, உளுந்து அரைக்கிறதெல்லாம் வாண் டாங்றார்டீ கலியாணத் தாத்தா.'

'என்னது!'

'ஆமாண்டி. சாயங்காலம் போனேன். கலியாணப் பாட்டிக்கிட்ட போய் மென்னு மென்னு முழுங்கிண்டே நின்னேன் கடைசியிலே என்னவாணா நினைச்சுக் கட்டும்னு 'இந்த மாதிரி குழந்தை எழுதி வச்சிருந்தா பாட்டி. பூஜை அலமாரியிலே'ன்னு சொன்னேன். 'என்னது! என்னது! நன்னாச் சொல்லுடீ சுந்தராம்பா!'ன்னு பரந்தா பாட்டி. சொன்னேன். 'அப்படியா, அப்படியான்' னாள். திண்ணையிலே படுத் திண்டிருந்த தாத்தாவை உள்ள அழச்சிண்டு வந்தாள். அவர் முகம் விளக்கை அஞ்சு முகமும் ஏத்திவச்சாப்பல ஆயிட்டுது. 'அப்படியா, அப்படியா!'ன்னு மலைச்சுப் போனாப்பல நின்னார். 'கோட்டூர் அம்மா, எனக்கு இத்தனை நாளாத் தோணாமலே போயிடுத்தே! குழந்தை வந்து வந்து போறா—தினமும் நானும் பாத்துண்டே யிருக்கேன்...எனக்குத் தோணவே இல்லியே...ம்... அப்படியா எழுதி வச்சா குழந்தை? அவ இஷ்டப்படியே நடக்கட்டும்—ஏண்டீ, என்ன சொல்றே?' ன்னார் பாட்டி யைப் பார்த்து. 'நான் என்ன வாண்டாம்கறேனா'ன்னாள்

பாட்டி. 'அதுக்கில்லேடீ சீரு செனத்தின்னு ஆரமிப்பியே'ன்
னார் அவர். 'என்னிக்கி நான் ஆரமிச்சு, என்னிக்கு இங்கே
கேட்டிருக்கு? முன்னாலெ இரண்டு புள்ளே, மூணு புள்
ளேன்னு கலியாணம் பண்ணிருக்கா? என்ன பேச்சு இது'ன்
னாள் பாட்டி. 'அப்படிச் சொல்லு...சரி சரி சரி. கோட்
டேரம்மா—சம்பந்தியாகப் போறேள்! இன்னியோட இந்த
இட்லிப் பானையைத் தூக்கி உள்ளே போட்டுடணும்...
யோகக்ஷேமம் எல்லாம் இனிமே தானா நடக்கும்'னார்
தாத்தா எனக்கும் ஒண்ணுமே புரியலெ. பரக்கப் பரக்க
முழிச்சேன். என்ன கேக்கறோம், என்ன இது, எங்க இருக்
கோம்னு ஒண்ணுமே புரியலெ. 'என்ன தயங்கறேள்?
சொல்லியாச்சு. அவ்வளவுதான். சரின்னு சொல்லுங்
கோ'ன்னார். 'பிராப்தம் இருந்தா ஸ்வாமி நடத்தி வைக்
கறார்'னு சொல்லி வச்சேன். 'அதான் எழுதியே வச்சு...
டாளே குழந்தை?...ஏண்டி, விளக்கேத்தி வையேண்டி
ஸ்வாமிக்கு'ன்னார். பாட்டி விளக்கேத்தி வச்சா. நமஸ்
காரம் பண்ணினார் தாத்தா. பாட்டியையும் பண்ணச்
சொன்னார் கொஞ்ச நாழியாச்சு 'சரி,நீங்க போகலாம்.
ஏற்பாடெல்லாம் ஆரம்பிக்கலாம். பண்டாபீஸிலே
எத்தனை பணம் போட்டியிருக்கேள்?'னார். 'ஐநூத்தி
சொச்சம்' என்றேன். 'சரி, முந்நூறு ரூபாயை ஒரு தட்டிலே
வச்சு, பழம், பாக்கு—வெத்திலையோட நாளைக்கு
காலமே ஒன்பது மணிக்கு அப்புறம் வந்துடுங்கோ'ன்னார்.
அவருக்கும் பாட்டிக்கும் ஒரு நமஸ்காரத்தைப் பண்ணிட்டு
வந்து உட்கார்ந்திண்டிருக்கேன்' என்றாள் அம்மா

பட்டு அதிர்ந்து போய் நின்றவள், வாயை இறுக மூடிக்
கொண்டு உட்கார்ந்தாள். என்னமோ அம்மாவிடம்
நெருங்கி உட்கார வேண்டும்போல் உடலெல்லாம் நமநம
வென்றது. நெருங்கினாள். நெருங்கி உட்கார்ந்ததும்
உட்காராததுமாக அம்மா, அவளை அப்படியே சாத்திக்
கொண்டாள். அப்படியே அந்த மடியில் தலை வைத்துப்
படுத்தாள் பட்டு.



முன்னந்தலையை வருடினாள் அம்மா. 'என்ன இது! நம்ப அம்மாவா இது!...' அம்மாவுக்கு சொர சொரவென்ற விரல்கள் கடலை மாவு, எண்ணெய் எல்லாம் கலந்த ஒரு பட்சணக் கடை வாசனை நிரந்தரமாக வீசும் கை அது!

இருவரும் பேசவில்லை.

'நான்கூட வேண்டிண்டேம்மா... நடந்தா அம்மனுக்கு ஒரு ப்ளு ஜாகர் தோடு பண்ணிப் போடறேன்னு...' என்று எத்தனையோ நேரம் கழித்து வாயைத் திறந்தாள் பட்டு.

'ப்ளு ஜாகா என்ன? கவசமாத்தான் வச்சு இழையேன்' என்றாள் அம்மா.

சற்றுக் கழித்து அடுத்த வீட்டுக் கடிகாரத்தில் மணி அடித்தது. 'மணி பதினொண்ணும்மா' என்றாள் பட்டு. மத்தியானச் சாதத்தையும் வற்றல் குழம்பையும் சாப்பிட எழுந்தாள் பட்டு. பலகாரம் பண்ண மறந்துபோன சுந்தராம்பாள், சத்து மாவை வெள்ளத்தில் பிசைந்து வாயில் போட்டுக்கொண்டாள்.

# இரண்டாம் பகுதி

## 1

கீழண்டைச் சுவர்மீது வெயில் பாதிக்குமேல் மேலே ஏறிவிட்டது. வெள்ளை வெயில். ஆனால், கிழட்டு வெயில் —இன்னும் கொஞ்ச நேரம் போனால் மஞ்சள் பூத்துவிடும். கொல்லை முற்றம் முழுவதும் நிழல் விழுந்து கிடந்தது. தரையில் மட்டும் சூடு லேசாக வெதும்பிற்று. கிணற்றிலிருந்து நாலு வாளி தண்ணீரை இழுத்து அங்கே கொட்டி விட்டு, அவனுடைய வேட்டியைத் தோய்த்துக்கொண்டிருந்தாள் பட்டு. தோய்த்து உலர்த்திவிட்டு, மத்தியானப் பத்துப் பாத்திரங்களைத் தேய்க்க வேண்டும்.

தோய்க்கிற கல்மீது வேட்டியை உருட்டினாள். கல் சுட்டது. சகிக்க முடியாத சூடில்லை, வெளுக்க முடியாத

வேட்டியுமில்லை, வேட்டியில் ஒரு அப்பழுக்கு, ஒரு தூசி இருக்கவேண்டுமே! அவர் உடம்பு மாதிரியே இருக்கிறது வேட்டியும். அவர் உடம்பில் ஒரு மச்சம்கூடக் கிடையாது. அப்படி ஒரு உடம்பு—வெண்ணெய் மாதிரி, புதுக்கடுதாசி மாதிரி. கடுதாசிலாவது ஒரு நார், பிசிறு எடுத்துவிடலாம் ...வேட்டியும் அப்படித்தான். நீலம் போட்ட வண்ணான் வெளுப்பு. உட்காரும் இடத்தில் மட்டும் லேசாக ஒரு பழுப்பு. ஓரத்தில் ஜரிகை கையில் சற்றுக்கொரகொரத்தது. வேட்டியைக்கூட எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டிருக்கிறார்! சாந்திக் கலியாண வேட்டி. நாலு மாதம் முன்னால் கோடியாகக் கட்டி, அப்புறம் மூன்று தடவை சலவைக்குப் போய் வந்தும், புதிது மாதிரி அலுங்காத, ஒரு ஜரிகை இழை பெயராத நாசூக்கு!

ஆனால், மகா முரடு—கையைப் பிடித்தால் ஜவந்திப்பூ மாதிரி ஒரு ஜிலுஜிலுப்பும், மெத்தென்று ஒரு அழுத்தமும். ஆனால், கையை நெருக்கினால்...பிராணன் போகும்-கட்டிலில் எறிந்ததே... நல்ல வேளையாக மெத்தை ஒரு சாண் கனம், தலையணை ஒரு சாண் கனம்—இல்லா விட்டால் எந்த எலும்பு நொறுங்கியிருக்குமோ?—மெத்தை தாங்கினாலும், விழுந்த அதிர்ச்சி தணியவில்லை. படபட வென்று-ஜுரம் வருகிறாப்போல—நடுநிசி வரையில் படபடத்தது.

வேட்டியை முற்றத்துக் கம்பியிலேயே உலர்த்திவிட்டு பத்துத் தேய்க்க உட்கார்ந்தாள் பட்டு. பத்துத் தேய்த்துக் கூட நாலு மாதமாகிவிட்டது. சாந்தி கலியாணத்துக்கு முதல் நாளுக்கு முதல் நாள் சாயங்காலம் தேய்த்ததுதான். மறுநாள் அம்மா விடவில்லை. அதற்கு மறுநாள் இங்கே வந்தாகிவிட்டது. இங்கும் அந்த வேலை கிடையாது. சின்னம்மா திடீர் என்று நிற்காவிட்டால், இந்த வேலை கூட எப்படிச் செய்யக் கிடைக்கப்போகிறது? எதற்காகத் திடீர் என்று நின்றாள் சின்னம்மா...?...இல்லை—அவளாக



நிற்கவில்லை. மாமியார்தான் நேற்றிரவு அவள் வீட்டுக்குப் போகும்பொழுது வெற்றிலை சீவலை வைத்து இரண்டு ரூபாய் பணத்தையும் வைத்து, ‘சின்னம்மா, நாளையிலேர்ந்து நீ நின்னுக்கோ’ என்றாள், திடீர் என்று. பட்டுவுக்கு யாரோ திடுமென்று பிடித்துத் தள்ளுகிறாற் போலிருந்தது. அந்த அசடுதான் ‘ஏனம்மா நிக்கச் சொல்றே?’ என்று ஒரு வார்த்தை கேட்கப்படாதோ—என்னமோ இரண்டு விநாடி திகைத்தாற்போல் பார்த்தது. பேசாமல் திரும்பிப் போய்விட்டது. அது போன பிறகு ‘ஏம்மா, சின்னம்மாவை நிக்கச் சொல்லியாச்சு?’’ என்று பட்டு கேட்டதற்கு, ‘ஒழுங்காத்தான் இருந்துது, இத்தனை நாளா. ஆனா, இப்ப இப்ப எனக்கு என்னமோ சந்தேகமாயிருக்கு—கை நீளமோன்னு. நாலு நாள் முன்னாலெ காலமே கடைத் தெருப் பக்கம் போயிட்டு வந்து குளிக்கப் போனேனேல்லியோ? தலைப்பிலே முடிஞ்சிருந்திருந்தேன் பாக்கி நாலணாக் காசை. கொல்லை மாடத்திலெ வச்சுட்டு குளிச்சவ, மறந்துட்டு வந்துட்டேன்; மத்யானம் அதைக் காணும் இவதான் அப்ப பேடாவாணலியைத் தேய்ச்சிண்டிருந்தா. அப்புறம் மூந்தா நாள் ஒரு ரூபாயை வேணும்னே தேய்க்கிற கல்லுகிட்ட நழுவ விட்டுட்டு வந்தேன். நெனச்சாப்பலவே காணும். திக்குன்னுது எனக்கு. சரி, நாம் ஊருக்குப் போறதுக்கு முன்னாலெ இதைத் தொலைச்சு முழுகிட்டுப் போயிடணும்னு தீர்மானம் பண்ணிண்டேன். நாங்க ரண்டு பேரும் ஊர்லெ இல்லாத போது, நீ சிறுசு, மூக்குத்தி, திருகாணின்னு எதையாவது அசதி மறதியா வச்சுடுவே—இது வாரிண்டு போயிடுத்துன்னா? அதான் தொலைச்சேன் இப்ப...‘ஏம்மா நிக்கச் சொல்றீங்க?’ன்னு ஒரு வார்த்தை கேட்டுதோ, பாத்தியோ! நிஜமா இவ நல்லவளா இருந்தா திடுக்குன்னு போகச் சொன்னவாகிட்ட கோபம் வராதோ? பேசாமல் காசை வாங்கிண்டு சாரைப் பாம்பு மாதிரி விர்ர்ருன்னு நடையைக் கட்டித்தே—பாத்தியோல்லியோ! என்று இடது உள்ளங்கையில் கன்னத்தைச் சாய்த்துக்கொண்டாள் பாட்டி.

'சனியன்!...ஆனாலும், ரெண்டு வார்த்தை சொல்லி கண்டிக்காம போகச் சொல்லிருக்கப் படாதும்மா?' என்றாள் பட்டு.

'அதுகளோட நமக்கென்னடி வம்பு? சகதியிலே கல்லெ விட்டெறிவாளோ? 'ஏண்டி எடுத்தியா?'ன்னா, காளே மூளேன்னு கத்தும்—அழும்—மாய்மாலம் உள்ளதும் பண்ணும்.' பாட்டி லேசுப்பட்டவளில்லை என்று அப்போதுதான் பட்டுவுக்குத் தெரிந்தது. கண்டிப்பு, காய்தாவெல்லாம சகஜமாகவே உள்ளவள்தான். பேடா உள்ளைத் திறந்த கையோடு மூடிக்கொண்டு வருகிறது, கறிகாய், மூட்டை, விறகு வண்டிக்காரர்களோடு நறுக்குத் தெறித்தாற்போலப் பேசி அவர்களை காலில் விழ விழப் பண்ணுகிற சாமர்த்தியம்—எல்லாம் ஒரு அளவுக்கு பட்டுவுக்கு நன்றாக உரைத்திருந்தது. இருந்தாலும் இவளை நிறுத்தின சுருக்கும் நறுக்கும்! அன்று கொல்லையில் ஒரு மரவட்டை ஊரும் பொழுது தொப்பென்று தென்னை மரத்திலிருந்து கழன்ற ஒரு தேங்காய் குறி பார்த்து அதன்மேல் விழுந்து உருண்டது. அந்த மரவட்டை, பாவம், புளிக்காய்ச்சல் சிந்தினாற்போல வெறும் பிசுபிசுப்பாகக் கிடந்தது. ஒரு நொடிக்கு முன்னால் அது இப்படியாகும் என்றா நினைத்திருக்கும்? அப்படியல்லவா நசுக்கி வெளியே தூக்கி எறிந்து விட்டாள் சின்னம்மாவை!

'புருஷப் பசங்களோடு விளையாடி விளையாடி உனக்குத் துணிஞ்சு போயிடுத்துடி' என்பாளே அம்மா. எனக்கு இப்படி திடீர் என்று, மடார் என்று காலை வாரி விடத் தெரியுமோ, துணியுமோ?... மரவட்டைக்கு வந்த மாதிரிதான் வருகிறது எல்லாமே. உயிர் போவது மட்டும் இல்லை; உயிர் வருகிறது கூட—எனக்குக்கூட அப்படித்தானே வந்தது? தேங்காய் விழுந்தாற்போல, திருமங்கல்யமும் வந்து கழுத்தில் விழுந்தது. அம்மா என்னை அழ விட்டு விட்டு நாலு நாள் கமறிக் கனைத்து விட்டு, பாட்டியிடம் வந்து சொன்னதும், அவள் சன்னதம் வந்தாற்போல பிரமித்ததும், தாத்தா திகைத்ததும், இட்லி



வார்க்கிறதை நிறுத்தச் சொன்னதும், பந்தல்கால் நட்டதும், பாட்டிக்குத் தங்கைகள், அத்தை பிள்ளைகள் வந்ததும் மேளம் கொட்டினதும்—எல்லாம் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போகிறாற்போல்தானே நடந்தது? கலியாணமாகி நாலு நாள், ஒரு மாசம் வரை திருமங்கல்யத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டேனே—இதெல்லாம் உண்மையா, பிரமையா?' என்று—பாவம், மரவட்டை எதைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறதோ? சின்னம்மா எப்படி அதிர்ந்து போனளோ? களையான முகம்—கட்டுமயிர்—தலையை அவிழ்த்து விட்டாளானால் முழங்கால் வரையில் பாம்புச் சுருட்டு பிரிந்து நழுவினாற்போல் விழும். கண்தான் எத்தனை நீளம்! எத்தனை பெரிது! முதலில் பார்த்தால், முதலில், இரண்டாம் தடவை, மூன்றாம் தடவை, எப்பொழுது பார்த்தாலும் ஒரு நிமிஷமாவது பார்க்கவேண்டும் போலிருக்கும்—இவ்வளவு இருந்தும்... இவ்வளவு இருந்தும்...இந்தப் பட்டு மரவட்டைக்கு அடித்தாற்போல அதிருஷ்டம் அடிக்கப் படாதோ? நூல் முறுக்குகிற வேலையாம் அவள் அகமுடையானுக்கு...பத்தணா கூலிகூட வராதாம்—நூல் முறுக்குத் தான் உடம்பில் தெம்பு-வேறு என்ன முடியும்? குச்சிகாலும் குச்சிக்கையும் சப்பையுமாக ஒட்டி உலர்ந்து எலிக்குஞ்சு மாதிரி... கலியாணத்துக்குப் போட்ட நகையெல்லாம் விற்று விட்டாளாம் சின்னம்மா, காது மாட்டலையும் மூக்குத்தியையும் மட்டும் விடவில்லை. இனிமேல் என்ன செய்யப் போகிறதோ? இங்கே என்ன தீனிக்குக் குறைச்சலா? சோறு, பட்சணம், புடவை—இவ்வளவு இருக்கிறபோது கை நீளுவானேன்? அல்பம்! கீழே கிடக்கிறதை எடுத்து எச்சில் செருகிக்கொள்ள எப்படித் தோன்றும்? பிறவிப் புத்தி! முகக்களை தான் எல்லாவற்றையும் காப்பாற்றி வருகிறது! நான் சும்மா இருப்போனா என்று புத்தி கிளம்பி இப்போது மண்ணை அள்ளிப் போட்டு விட்டது... ஆனால், வேலை ரொம்ப சுத்தம்.

வாசல் கதவை இடிக்கும் ஓசை கேட்டது. கையைக் கழுவி விட்டுத் திறந்தாள். அவள் அம்மா.

'என்ன பண்ணிண்டிருக்கே?'

'பத்துத் தேச்சுண்டிருக்கேன்.'

'சின்னம்மா வரலியா?'

கதையெல்லாம் சொன்னாள் பட்டு.

'நல்ல வேளையா ஒழிஞ்சுது' என்று உதவியாகத் தானும் சேர்ந்து பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டே சொன்னாள் அம்மா.

மீண்டும் வாசல் கதவை இடிக்கும் சப்தம்.

முத்துராமு சாட்டைக் குச்சியும் கையுமா உள்ளே வந்தான். கொல்லையில் மாமியார் பாத்திரம் அலம்பு வதைப் பார்த்தவன் உள்ளே வந்து தோசைத் தட்டுமுன் உட்கார்ந்து கொண்டே 'ஏன் உங்கம்மா தேய்க்கிறா? அவ வரலியா?'

'சின்னம்மாவா?'

'ம்.'

'அவளை நிறுத்தியாச்சு!'

'ஏனாம்?'

மறுபடியும் கதையைச் சொன்னாள் அவள். பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த முத்துராமு, கடைசியில் 'காசைக் கீழே போட்டால் எடுக்கத்தான் தோன்றும். வேண்டும் என்று போட்டு, எடுக்கத் தூண்டினால் நாமத் திருடத் தூண்டினதாகத்தானே அர்த்தம்?—நாம் ஜாக்கிரதையா இல்லாட்டா பிறத்தியார் திருடர்களாக மாறாமலிருப்பார் களோ?' என்றான்.

'கீழே போட்டா எடுக்கனும்னு தோணுமா என்ன?' என்றாள் பட்டு.



'ம்?' என்ற கேள்விக் குறியைக் கேட்ட அவன் முகத்தைப் பார்த்தாள். ஜிவுஜிவு என்று முகம் கனிந்தது, சிவந்தது—அவனுக்கு லேசாகக் கோபம் வந்தாலே முகம் சிவக்கும். மூக்கும் கண்ணமும் பளபளக்கும்—கண்ணில் இரண்டு ஈட்டி கருகரு வென்று கிளம்பினாற் போலிருந்தது.

'ஏன் கீழே போடணும்?' என்று திடீர் என்று உரக்கக் கத்தினான் அவன். தூக்கிப் போட்டது அவளுக்கு. எதற்கு இந்தக் கத்தல்? மண்டையில் அடிக்கிற மாதிரி! 'இல்லாத கொடுமை! பார்த்தா நப்பாசை வந்துடற தோல்லியோ?' என்றான் சிறிது நேரம் கழித்து. 'ஹம்'—தொண்டைக்குள் ஒரு சிரிப்புச் சிரித்தான் அவன். சிரிப்பு இல்லை அது. எரிப்பு. அடுத்த தோசையைக் கொண்டு வருவதற்குள் கையை நீட்டித் தடுத்தான். எழுந்தான். நின்றுகொண்டே காபியை மளமளவென்று குடித்து விட்டு வெளியே போனான். இடைகழிக்குப் போனதும் 'இல்லாதவா எல்லாரும் பொல்லாதவாதான். வேலைக்காரியா இருந்தா என்ன? வேற யாராயிருந்தா என்ன?' என்று உள் பக்கம் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு வெளியேறினான். ரேக்ளா உருண்டது.

'மாமியார் பாட்டுக்கு சின்னம்மாவை நிறுத்தி, துலாஸ்னானம் பண்றேன்னு மாயவரம் போயிட்டார், தாத்தாவோட! இங்கே யார் தவிக்கிறது?' என்றாள் பட்டு.

அம்மா பதில் சொல்லவில்லை. தரையை, சூன்யத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'மாமியார் இப்படி அபாண்டமாச் சொல்றாரேன்னு அப்பவே திக்குன்னுதும்மா எனக்கு. பேசாம அவளை வரச் சொல்லி விடும்மா நீ' என்றாள் பட்டு.

'என்னது?'

'ஆமாம்மா.'

'பேசாம இர்றீ நீ! மறுபடியும் கொண்டு வைக்கிறாளாம். குலுக்கி மினுக்கிண்டு கள்ளச் சிரிப்புச் சிரிச்சுண்டு அவ கூடத்திலெ நின்னுண்டிருக்கட்டும்; நீ சிரிப்பாச் சிரிக்கலாம்...அசட்டுப் பொணமே! வாயை மூடிண்டிரு! மாமியார் தப்பாச் சொல்லமாட்டார். நீ இளகி வழிய வாண்டாம்.'

என்ன இதெல்லாம்!...பட்டுவுக்கு ஒரே இருட்டாக இருந்தது.

'ஒண்ணையும் காதுலே போட்டுக்கலெ—நன்னாக் கத்தினாண்டி!...என்ன வாணா கத்தட்டும்—சொல்லட்டும்! மறுபடியும் அந்தச் சனியனைப் படியேத்திப்பிடாதே! ஆமாம். சொல்லிப்டேன்...முன்னாடி இடம் கொடுத்துட்டியோ; அப்புறம் ஐயான்னாலும் நிக்காது, அப்பான்னாலும் நிக்காது. ஜாக்ரதை!'

பட்டுவுக்கு இப்போதுதான் ஏதோ புரிகிறாற் போலிருந்தது. மாமியார் தேவலை போலிருக்கிறது, இவள் படுத்துகிற பாட்டுக்கு! என்ன என்னவெல்லாம் சொல்லுகிறாள்! முத்துராமுவா! இப்படியா! ச்சீ! அவன் உள்ளங்காலில் கூடத் தூசி இராது! இவள் கைவிரல்கூட அழுக்கும் கறுப்பும் மண்டியிருக்கிறது! விஷம்! முதலில் இவளைப் படி ஏற விட்டதுதான் தப்பாகிவிட்டதோ என்னவோ?

'என்னம்மா சொல்றே நீ!' என்று சூடு பிடிக்கக் குரலை உயர்த்தினாள்.

'சொல்றதைத்தான் சொல்றேன்.'

'நாக்கு அழுகிப் போயிடும்.'

'என்ன சொன்னே! எனக்கா! எனக்கா!'

'ஆமாம்! உனக்குத்தான்.'



அம்மா சிறிது நேரம் வாயடைத்து நின்றாள். பிறகு 'இத பாரு—நீயாச்சு, உன் ஆம்படையானாச்சு. நான் ஒண்ணும் சொல்ல இஞ்ச பாத்யம் கிடையாது. நாக்கு அழுக அழுக நான் இஞ்ச நிக்கவும் தயாராயில்லை. ஆனா உன்னைப் பெத்திருக்கேனோல்லியோ...' அம்மாவின் குரல் உடைந்து தளர்ந்தது—நடுங்கிற்று— 'அதுக்காகச் சொல்லிட்டுப் போறேன். ஜாக்ரதையா இரு. மாமியார், மாமனாரைக் கேக்காம, நீயா, எதையாவது செஞ்சு மணணை அள்ளிப் போட்டுக்காதே......ஆமாம். நான் போயிட்டு வரேன். கதவை சாத்திக்கோ,' என்று விர்ரென்று இடைகழியைக் கடந்து வாசலில் இறங்கி விட்டாள்.

## 2

பட்டுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. முத்துராமு பிறகு நாலு நாள்வரை சாப்பிடவில்லை. வெள்வெள்ளென்று எரிந்து விழுகிறான். 'நீ போய்ப் படுத்துக்கலாம்...சரி, போகலாம்' இப்படித்தான் பேச்சு. குளிக்கப்போனால் தானே வேட்டியைத் துவைத்துக் கொள்கிறான் பால் கொண்டு கொடுத்தால், 'வாண்டாம், ஏன்?வாண்டாம்...' அதை வைத்துவிட்டு வந்தால்—'வாண்டாம்னா எடுத்துண்டு போயிடணும் — இல்லாட்டா' என்று ஒரு அதட்டல். ஒருநாள் பகல் சாப்பாடு, டிபன், இரவுச் சாப்பாடு—எதற்குமே வரவில்லை. கேட்டபோது 'நான் சாப்பிட்டாச்சு' என்று சுருக்கு சுருக்காக விடை.

'எங்கே?'

'சொல்லித்தான் ஆகணுமோ?'

'நாலைந்து நாள் முகம் கொடுத்துப் பேசாம இருக்க நான் என்ன தப்புப் பண்ணினேன்?'

'நீ இப்ப இங்கிருந்து போறியா? இல்லே, நான் வெளியே போகட்டுமா?' என்று அதற்குப் பதில். பட்டு அந்த அறையைவிட்டு வந்துவிடுவாள்.

கோபம் மட்டுமில்லை. அவன் முகம் சோர்ந்து கிடந்தது. நிலத்துக்குள்ளேயே பூச்சி வேரை வெட்டினதால், மேலே கொடி கொஞ்சம் கொஞ்சமாக வாடுகிற வாடல். எதையோ பறிகொடுத்தாற்போல முகத்தில் ஒரு இழந்த களை, அப்பா. அம்மாவைப் பிரிந்ததே கிடையாது. பேடாப் போடுவதினின்றும் பாட்டிக்கும் ஒரு நாள்கூட அவள் ஆயுசில் ஒழிவு கிடைத்ததில்லை. இப்பொழுதுதான் வீட்டுக்கு நாட்டுப் பெண் என்று ஒருத்தி வந்ததும் பத்துப் பதினைந்து நாள் துலாஸ்நானம் செய்ய வேண்டும் என்று மாயவரம் போயிருக்கிறாள். பிறந்தது முதல் பிரியாத பிரிவு...அவர்கள் வந்தால் சரியாகிவிடுமோ என்னவோ!

''அப்பாவும் அம்மாவும் என்னிக்கி வரா திரும்பி?'' என்று கேட்டாள், ஐந்தாம் நாள் காலையில்.

''ஏன்? அவா திரும்பி வரதுக்குள்ளியும் மிச்சம் இருக்கிறவாளையும் வெளியிலே விரட்டிவிடலாம்னு யோசனையோ?''... கத்திகத்தியாக இது என்ன பேச்சு! உள்ளே குறுத்தெல்லாம் நடுங்குகிறது. நான் யாரை விரட்டினேன்?

அம்மாவும் வரவில்லை—அன்று போனவள்தான் 'இட்லி வார்த்து வார்த்து உன்னை வளர்த்தாயிற்று. திடீர் என்று நீ பணக்காரியாகிவிட்டாய். நான் இங்கே நிற்கப்படாதுதான்'' என்று சொல்லுகிறது போலிருந்தது, அன்று அவள் விசுக்கென்று போன தோரணை. இப்படி மனசை வெட்டித்தூர எறிகிற அரிவாளா கலியாணம்? நான் பணக்காரி என்று சொன்னேனா? அதுவும் அம்மாவிடமா?

கடைசியில் அடுத்த வீட்டுக் குட்டியைக் கூப்பிட்டு, அம்மாவை வந்து விட்டுப் போகுமாறு சொல்லி அனுப்பினாள் அவள்.



''சாப்பிட்டாச்சா?'' என்று ஒன்றுமே நடக்காதது போல் கேட்டுக்கொண்டே வந்தாள் அம்மா.

''ஆச்சு. அம்மா உன்னை அடிக்கடி வந்து கவனிச்சுக்கச் சொல்லிட்டுப் போனாரே, இது தான் கவனிக்கிற அழகா?''

''நான் என்ன கவனிக்க முடியும்? எல்லாம் அவா அவா சமத்தாயிருந்தாத்தான் சரியாயிருக்கும். நாக்கு அழுகிப் போயிடும்னு பயமுறுத்தினே! இன்னிக்கிக் காலமே கடைத் தெரு வழியாப் போறேன். இந்த சின்னம்மாக்குட்டி கடையைப் பெருக்கிண்டிருந்தது. அப்படியே நேரா அவ வீட்டுக்குப் போனேன். அவ ஆம்படையான் உக்காந்து நூலை முறுக்கிண்டிருந்தான். 'சின்னனம்மா இல்லியா'ன்னு கேட்டேன். மாப்பிள்ளை ஐயா கடைக்குத் தானே போயிருக்கு? அங்கதானே வேலை செய்யுது, நேத்து மத்தியானத்திலேர்ந்து?'ன்னான் அவன். 'அம்மா சொன்னா சொல்லிட்டுப் போறாடா. நீ கடையிலே வந்து வேலை செய்யச் சொல்லு'ன்னு உங்க அகமுடையான் தான் கூப்பிட்டுட்டுப் போனானாம். இந்த அப்பாவியும் சரின்னு அனுப்பிச்சிருக்கு. அவ ஒரு சின்னாளம்பட்டிப் புடவையை கட்டிண்டு பளபளன்னு மாட்டலும் கொலுசு மாப் பெருக்கிண்டு மினுக்கிறா...இத்தனை நாளா வீட்டோட இருந்துது. அம்மாக்காரி மாத்திரம் தெரிஞ்சு போத்திண்டு போயிண்டிருந்தா. இப்ப கடைத்தெருவுக்குப் போயாச்சு. இனிமே சாமியாப் பாத்துத்தான் போத்தி மூடணும்'' என்று ஓய்ந்தாள் அம்மா.

கூனி மாதிரி அம்மா என்னைக் கரைக்கிறாளா என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் பட்டு. ஆனால் அம்மாவுக்கு என்ன ஆகவேண்டும்? அவள் யாரையும் நம்பிக் கொண்டிருக்கிறவள் இல்லையே, ஒரு பருக்கைக்குக்கூட அன்று போனவள் சொல்லியனுப்பிய வரையில் இந்தப் பக்கம் தலைகாட்டவில்லையே!

''ஏம்மா இப்படி என் வயிற்றைக் கலக்கிண்டேயிருக்கே? எனக்கு ஒண்ணுமே தோணமாட்டேங்கறதே'' என்று நெஞ்சு உடையக் கூறினாள் பட்டு.

''வருத்தப்பட்டு என்ன பண்றது? இது ஒண்ணும் புதிசு இல்லை. பணம் சேர்க்கறவாளுக்கு பயம், கூச்சம் ஒண்ணும் இராது. பணம் சேரச்சேர இருக்கிற துளி கூச்சமும் கரைஞ்சிடும், அப்பறம் அந்தப் பணத்தை எந்தக் கோண வழியிலே செலவழிக்காலம்னு அலையும் புத்தி... என்ன பண்றது? அம்பாளை வேண்டிக்கோ. அவ்வளவுக்கு மேலே நான் என்ன சொல்லக் கிடக்கு?''

அம்மா சிறிது நேரம் உட்கார்ந்து விட்டுபோய் விட்டாள்.

கடையில் எதற்காக அவளுக்கு வேலை?—ஏன் வேலை செய்யக்கூடாது!...இது என்ன பிதற்றல்! இந்த அபாண்டம், அசுரத்தனமெல்லாம் அம்மா ஒருத்திக்குத் தான் சாத்தியம்-ச்சை...இவரா...அவளுக்குச் சிரிப்பு வந்தது...வாடி வாடி அம்மாவுக்கு உலகமே நரகமாகப் பூதம் காட்டுகிறது...

அரைமணிச்கெல்லாம் வந்தான் அவன். அவளைப் பார்த்து ஒரு புன்சிரிப்பு தவழ்ந்தது. அப்பாடா! முகத்தில் ஜில்லென்று தென்றல் வீசுகிறது போலிருந்தது. அந்தக் கண்ணில், விழியில் அப்படி ஒரு குளிர்ச்சி. 'அடைக்கு இன்னொரு முட்டை நெய் போடு, வெல்லம் போடு, புளிப்பாக ஏதாவது போடேன்' என்று கேட்டுக் கேட்டுப் போட்டுக் கொண்டு சாப்பிட்டான் அவன். இரவு வரும்பொழுது ''திருவாரூரிலிருந்து ஒரு மொத்த வியாபாரி வந்திருந்தான். சளசளசளன்னு பேசி உசிரை வாங்கிட்டான்'' என்று தாமதமானதற்குக் காரணம் சொல்லிக் கொண்டே வந்தான். பாலை ''வேண்டாம்'' என்று சொல்லவில்லை. காலைப் பிடித்தபொழுது முகத்தைச் சிணிக்கிப் பிடுங்கிக் கொள்ளவில்லை. வழவழவென்று எத்தனை வழவழப்பு!



என்ன நிறம்! பட்டுக்கால்! பெண்கால்! என் காலுக்கு இத்தனை வழவழப்பு இந்த ஜன்மத்தில் வரப்போவதில்லை. 'பட்டு' பெயரோடு நின்று விட்டது எனக்கு...

நாலு நாளாக என்ன உடம்பு உங்களுக்கு என்று கேட்க வேண்டும்போலிருந்தது. வேண்டாம். தெளிந்த நீர் தெளிந்தே நிற்கட்டும்...அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். தூங்குகிறாற் போலவே இல்லை. வெறுமே கண்ணை மூடிக்கொண்டிருக்கிறாற்போல ஒரு தெளிவு. ஆனால் நல்ல தூக்கம்—அயர்ந்த தூக்கம்...என்ன தெளிவு! அழகு! பால் பூசின, நிலா பூசின, தெளிவு...எனக்குத் தூக்கம் வரவில்லை.இவருக்கு எப்படித் தூக்கம் வருகிறது?... என்ன தூக்கம் வேண்டிக்கிடக்கு...தூங்கட்டும். அழகாகத் தூங்குகிறார். முகம் கடுக்காமல் இருந்தால் போதும். தூங்கட்டும் — முத்துராமு அவள் பார்க்கப் பார்க்கத் தூங்கினான். மறுநாள் இரவும் அப்படித்தான் தூங்கினான். மறுநாள், மறுநாள், மறுநாள்...அப்படியே வந்தவுடனே தூங்கினான். அழகாகத் தூங்கினான்...என்ன... தூக்கமோ?...அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு. எதற்காக அழுகிறது?

## 3

அன்று மத்தியான்னம் அவன் சாப்பிட்டுவிட்டுப் போன பிறகு அவள் சாப்பிட்டு இரண்டு வெற்றிலையை மென்று கொண்டு உட்கார்ந்திருந்த பொழுது ''உள்ள யாரு?'' என்று குரல் கேட்டது. குட்டை அழகுசிங்கு ''பட்டுவா? சாப்பிட்டாச்சா?'' என்று குரல் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தது.

''வா, அழகு!''

''தாத்தா, பாட்டி எல்லாம் இன்னும் வரலியா?''

''இல்லியே, நாலஞ்சு நாளாகும்.''

''எல்லாப் பாபத்தையும் கரைச்சுட்டு ஒரு தரியா வந்துடலாம்னு பார்க்கறாராக்கும் தாத்தா?'' என்று தூணைப் பின்னால் கட்டிக்கொண்டு சிரித்தான் அழகு சிங்கு. வாய் முழுவதும் திறந்து சிரித்தது. அந்த சோடா பாட்டில் மூக்குக் கண்ணாடிகூடச் சிரித்தது.

''கரைக்கிறதுக்குப் பாபமில்லாட்டாலும், புண்யமாவது சம்பாதிக்கலாமோல்லியோ?'' என்று சிரித்த பட்டு ' உட்காரேன்'' என்றாள்.

உட்கார்ந்துக்கொண்டே ''நீ சொல்றது சரி. சர்க்கார்லெ பாபத்தைக் கரைச்சுக் கொடுத்துட்டா. இனிமே புண்யந்தான் தேடிக்கணும்'' என்றான் அவன்.

''என்னது? சர்க்காராவது, பாபத்தைக் கரைக்கறதாவது! என்ன சொல்றே நீ?''

''ஆமாம். கோவில்லே திருடின பாவத்துக்காக ஏழு வருஷம் ஜெயில்லே போட்டா அப்புறம் காசிக்கும் போய்ட்டு வந்தாச்சு. இனிமே புண்யந்தானே சம்பாதிக்கணும்?'' என்று வாசலைப் பார்த்துக்கொண்டே சொன்னான் அழகு.

''கோயில்லியாவது திருடவாவது! யாரு? என்னத்தைத் திருடினா?''

''தாத்தாதான். உன் மாமனார்தான்! அம்பாள் தோடு, நவரத்ன கங்கணம், ஒட்டியாணம் மூணையும் தான்...என்னமோ தெரியாத மாதிரிக் கேக்கறியே!''

அழகுசிங்கு அரைப் பைத்தியம். காணங்கி, கணக்குப் போடுகிற மாதிரி இப்பொழுது வேறு என்னவோ பிதற்ற ஆரம்பித்திருக்கிறது.

''சரி, சரி, அசடு வழியாதே...எங்க வந்தே இப்படி?''

''நானா அசடு! நீன்னா அசடு!''



''சரி, நானேதான் அசடு! நீ போய்ட்டு அப்பறமா வா ...போ.''

''என்னை வந்து அசடு அசடுங்கிறியே! நான் உசரமா இல்லெ. பாப்பா'மாதிரி இருக்கேன்னா, ஒண்ணுமே தெரியாதுன்னு அர்த்தமா? நானா அசடு? உனக்குத் தெரியுமா, தாத்தா எப்படி இத்தனை பெரிய வீடு கட்டினார்னு?''

''தெரியவாண்டாம். நீ போ.''

''உனக்குத் தெரியாதுன்னு சொல்லு. எனக்குத் தெரியும். தாத்தா ராத்திரி போய் கோயில்லெ நகை வைக்கிற மரப்பெட்டியைத் திறந்து அம்பாள் தோடு, கங்கணம், ஒட்டியாணம் மூணையும் எடுத்துண்டு ஓடிப் போயிட்டார். கடைசீலே திருநெல்வேலியிலே ஒளிஞ்சிண்டிருக்கிறபோது அகப்பட்டுட்டார். கேஸ் போட்டு ஜெயில்லே ஏழு வருஷம் போட்டா கடுங்காவல். ஜெயில்லே பேடா போடச் சொல்லிக் கொடுத்தா. வெளியிலே வந்தப்பறம் எங்கெங்கேயோ நாலஞ்சு வருஷம் அலஞ்சிப்பிட்டு ஊருக்கு வந்தார். பேடாப் போட்டு தலையிலே வச்சிண்டு தெருத் தெருவா வித்தார். பணம் வந்து கொட்ட ஆரம்பிச்சுட்டுது. மாடி வீடு, படுகைக் கொல்லை, நஞ்சை புஞ்சை வந்தது. இல்லாட்டா, ரேக்ளாவைப் போட்டுண்டு, உங்க முத்துராமு, கடுக்கனும் சங்கிலியுமாப் போக முடியுமோன்னேன்?...என்னை வந்து அசடு அசடுங்கிறியே!''

''பைத்தியம்! இப்படியெல்லாம் உளறிண்டு கிடக்காதே அவா காதிலே விழுந்தா தோலை உரிச்சுப்பிடுவா.'

'என் தோலை உரிச்சா ராஜா அய்யங்கார் மாமா சும்மா விட்டுடுவரோ? அவர் கிட்டே போய் சொல்லிப்பிடுவேன்.'

'ராஜா அய்யங்கார் மாமாதான் இப்படியெல்லாம் சொன்னாரா உன்கிட்ட?'

'என்கிட்ட சொல்லலெ; முத்துராமு சாப்பிட்டுட்டு ரேக்ளாவிலே போறபோது, திண்ணையிலே அய்யங்காரும் வாணக்கார ராவுத்தரும் உட்கார்ந்து பேசிண்டிருந்தா. 'ஏண்டா, முத்து,உங்கப்பாவைக் காணுமே? ஊரிலேயே இல்லியோ'ன்னு கேட்டார் அய்யங்கார். 'இல்லே, மாமா, துலாஸ்நானத்துக்கு மாயவரம் போயிருக்கார்'னு முத்து சொல்லிண்டே போனான். 'பாரும்யா—கோயில்லெ போய் தாயார் தோட்டைத் திருடினான். ஆனா அவ கை விட்டாளோ? ஜெயிலுக்கு அனுப்பிச்சு பேடா பண்ணத் தெரிஞ்சுக்கச் சொன்னாள். வெளியிலே வந்தான். பணமா அரிச்சுக் கொட்றான். தண்டனைக்குத் தண்டனையு மாச்சு! பணத்துக்குப் பணமுமாச்சு. ஜெயிலுக்குப் போன வன், தெரியாம செஞ்சிட்டேண்டியம்மா'ன்னு கதறியி ருப்பன் அம்பாளை நினைச்சு நினைச்சு, 'சரி, தொலைஞ்சுபோ'ன்னு அம்பாள் கண்ணைத்திறந்துட்டா. சரணம்னு விழுந்துட்டா ஸ்வாமி நம்மை விடாதுய்யா, ராவுத்தரே,ன்னு சொன்னார் அய்யங்கார் மாமா. அப்புறம் ராவுத்தர் கேட்டார். விஸ்தாரமாச் சொன்னார். 'கூடத்திருடப்போன மாரியம்பலம்கூட நாலு வருசம் ஜெயில்ல இருந்துட்டு இப்ப மெட்ராஸ்லே ஒர்க்ஷாப் நடத்தறான்னார்...'

ராஜா அய்யங்கார் மூக்குக் கண்ணாடியும் ஆறடி உயரமும் கையில் தடியுமாகத் தலையை அண்ணாந்து பேசுவது போலவே, அவராகவே ஆகி, சொல்லிக் கொண் டிருந்தான் அழகுசிங்கு. தலை தூக்கல், கூப்பிடுகிறது,குரல் எல்லாம் அப்படியே அச்சாக இருந்ததைப் பார்த்து, அவனே ஆறடி உயரம் நின்றாற்போலப் பிரமித்தாள் பட்டு.

'சரி, மாமா ஏதாவது வேடிக்கை பண்ணியிருப்பர். நீ போ. இப்படியெல்லாம் வேற எங்கியாவது போய்ச் சொல் லிண்டிருக்காதே?...'



'நான் ஏன் சொல்றேன்? அதான் எல்லாருக்கும் தெரியுமாமே?...,

'சரி போ.'

'பட்டு, ஒரு பேடா தாயேன். பசியாயிருக்கு, என்று இளித்தான் அவன்.

வாங்கிக்கொண்டு கஜகஜவென்று நடந்து வெளியே போனான்— சற்று முன்னால் கேட்ட செய்தியை உடனே வந்து இங்கே சொல்லி, தனக்கும் தெரிந்த பூரிப்பைத் திருப்திப் படுத்திக்கொண்டு, அதற்கு ஒரு பேடாவையும் வாங்கிக் கொண்டு...! அதை நினைத்தபோது சிரிப்பு லேசாக ஒரு தடவை அவள் உடலில் குலுங்கிற்று. குலுக்க லோடு நின்று விட்டது. அழகு சிங்கு சொல்கிறது இன்னும் காதில் விழுந்து கொண்டேயிருக்கிறது— மரவட்டைமேல் தேங்காய் விழுந்தாற்போல் அவள் சித்தம் நசுங்கி, வெறும் ரத்தச் சக்கையாக பிசுபிசுக்கிற சூன்யம் கண்ணில் இருண்டது.

கதவைப் பூட்டிக்கொண்டு விறுவிறுவென்று நடந் தாள். அம்மாவிடம் போனாள். சாப்பிட்டுவிட்டு அம்மா மத்தியானத் தூக்கம் போடுகிற சமயம்.

'ஏம்மா, உன் பொண்ணை மாட்டுப் பொண்ணா அழைச்சுக்கறேன்னு ஏனம்மா திடீர்னு அவா ஒப்புக் கொண்டா?' என்று ஒரு பீடிகையுமின்றிக் கேட்டாள்.

'என்னடீ திடீர்னு என்னமோ கேக்கறே?, என்று எழுந்து உட்கார்ந்தாள் அம்மா.

'சொல்லேன்.'

'என்னத்துக்குக் கேக்கறே?'

நீ சொல்லு.'

'இதைக் கேக்கவா இப்ப அவசர அவசரமா வந்தே?'

'ஆமாம். நீ சொல்லு.'

'உன்னைப்பிடிச்சிருந்திருக்குது. நீ புவனச்வரிக்குக் கடுதாசி எழுதி வச்சதைக் கேட்டவுடனே அவாளுக்குப் பரவசமாப் போயிடுத்து. அம்பாளே உத்தரவு இட்டாப் போல இருந்துதோ, என்னவோ—'

'என் தோட்டைத் திருடினதுக்குத் தண்டனையா இவளைப் பண்ணிக்கோ—ஒரு நகை நட்டு கிடையாது, இந்தக் கங்காளிக்கு. திருப்பதி மரப்பாச்சி மாதிரி வந்து நிக்கறா. இவளைத்தான் பண்ணிக்கணும்னு அம்பாள் உத்தரவிட்டாப்போல இருந்துதாக்கும்?'

அம்மா ஒன்றும் பேசவில்லை. வெறித்து, குழம்பி அவளைப் பார்த்தாள்.

'ஊர் அறிஞ்ச சேதி தானாமே அது? ஏம்மா?'

'ஊர் அறியாம என்ன பண்ணும்? கோவில்லே வேலை செய்யறவா யாரு திருடலெ? கணக்கிலே திருட்டை மறைச்சு, நல்லவா மாதிரி நாளை ஓட்டறா. இல்லேன்னா. திருட்டு இல்லைன்னு நம்பும்படியாகப் பண்ணிப்பிடறா. இவர் அப்படிச் செய்யலெ. ஒரே ஒரு க்ஷணம் புத்திகெட்டுப் போச்சு. நகைப் பெட்டியைத் திறந்து என்னத்தையோ எடுத்தார். ஓடினார். மாட்டிக்கவும் மாட்டினுட்டார்... சரி, முப்பது நாப்பது வருஷம் முன்னாலெ நடந்ததுக்கு இப்ப என்ன?

'மறந்து போயிருக்கும்னு சமாதானம் பண்ணிண்டு தான் என்னைக் கொண்டு கொடுத்தியாக்கும், இந்த இடத்திலே!'

அவளை ஒரு தடவை முறைத்துவிட்டு, 'நீதானே தவங் கிடந்தே' என்றாள் அம்மா.

'ஆமாம்...அதுவும் சரிதான்.'



அம்மா கிண்டிக்கிண்டிக் கேட்டபிறகு, அழகு சிங்கு வந்து சொன்னதை அவளிடம் ஒப்பித்துவிட்டுத் திரும்பினாள் பட்டு.

டிபனுக்கு வந்தான் முத்துராமு. மலர்ந்து கேட்டுக் கேட்டுச் சாப்பிட்டான்.

திருடன் பிள்ளை!... ஆனால் இவன் என்ன செய்வான். அனாதைக் குழந்தை, தப்புக் குழந்தை மாதிரி! அப்பா செய்த அடத்துக்கு அது எப்படிப் பிணை ஆகும்!

திருட்டுக் கொடுத்த அந்த புவனேச்வரியைப் பார்க்க வேண்டும்போல் துடித்தது அவளுக்கு.

அந்தி மயங்கி புவனேச்வரியின் சன்னிதியில், நுழைந்த பொழுது, வெள்ளிக்கிழமையலங்காரத்துடன் வெள்ளிக் காலும் கையுமாக புவனேச்வரி நிற்பது தூரத்திலேயே தெரிந்தது. நெருங்கி, இரும்புக் கிராதிக்கருகில் போன பொழுது அம்மன் பிராகாரத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்த உருவம் பளிச்சென்று, யானைக் காதில் மாட்டும் அங்குசம்போல, அவள் கண்ணை லாவி இழுத்தது.

அவள் தான்! சின்னம்மாதான். கூட்டுகிற வேலைக்காரி என்று புவனேச்வரிகூடச் சொல்லத் தயங்குவாள். இடையில் கொக்கோக் கலரில் ஒரு ஆரணிப் பட்டுப் புடவை. காதில் புஷ்பராகத்தோடு, மாட்டல்; காலில் கொலுசு வெள்ளைப்பொட்டிட்ட அரக்கு வாயில் சோளி என்ன கை! என்ன மார்பு! என்ன இடுப்பு! இடுப்புக்குக் சீழ், பின் பக்கம் வெல்வட்டு ஜாடி மாதிரி இறங்கின குழைவு! ஐயோ! எப்படியிருக்கிறாள்? முதலில் கண்ணில் பன்னீர் விட்டமாதிரி இருந்தது. அடுத்த க்ஷணம் நெருப்புப் பொறி விழுந்து சுரீர் என்றது. ஏது இந்தப் பட்டுப் புடவை? ஏது இந்தச் சங்கிலி? ஏது இந்தக் கமலத்தோடு? நடுவில் ஒரு பச்சை வேறு! பட்டுக்காலும் தெளிந்த முகமுமாகத் தூங்குகிற முத்துராமு, அதே சமயத்தில் வேறு எங்கோ விழித்துக்கொண்டிருப்பது போல கண்ணை

மறைத்தது. ஆமாம்—அவன் தூங்கவில்லை. புருவத்தைச் சுளித்துச் சுளித்து, கண்ணை மூடிமூடித் திறந்து இந்தத் திரையை விலக்கிப் புவனேச்வரியைப் பார்த்தாள். வெருண்டு போய்ப்பார்த்தாள். கண்ணில் ஒரு வெறி, கிலி.

'புவனேச்வரி! கெடு ஒத்திக்கொண்டே போகிறது. அடுத்த வெள்ளிக்கிழமைக்குள் ப்ளூஜாகர் தோட்டை உன் காலில் கொண்டு வைத்துவிடுகிறேன்... தாண்டினால்... தாண்டினால்...'

என்ன சொல்வதென்று தயங்கினாள் அவள். நினைக்கும்பொழுதே உடம்பு மின்னல் மாதிரி வெட்டிற்று.

திரும்பி விர்ரென்று நடந்தாள்.

## 4

குங்குமப்பூ நாலு திரி விழுந்ததுமே பால் நுரைகூடப் பொன்னாகிவிட்டது. இங்கே வாங்குகிற பூ இல்லை அது. காஷ்மீரிலிருந்து நேராக, பேடாவுக்காகத் தருவிக்கிற பூ.

பாலை உள்ளே எடுத்துக் கொண்டு போனாள் அவள். தூங்கிக் கொண்டிருந்தான் முத்துராமு! புஜத்தைத் தொட்டுக் குலுக்கினாள். கோபத்தில் கொஞ்சம் முரட்டுப் பிடியாகக் கூட்ப் பிடித்தாள். கண் மலர்ந்தது.

'பால்.'

எழுந்து உட்கார்ந்தான் அவன்.

'அதுக்குள்ளியுமா தூக்கம் வந்துட்டுது? மணி பத்து கூட ஆகலையே!'

பாலைச் சாப்பிட்டுவிட்டு படுத்தான் அவன். கண்ணை மூடினான்.

'நான் ஒண்ணு கேட்கணும்.'

'என்ன?'—கண் திறக்காத கேள்வி.



'என்னைப் பார்த்தால்தான் சரியாச்சொல்ல முடியும்.' திறந்தான் அவன். அவள் முகத்தை, கண்ணைப் பார்த்தான். என்ன நினைத்துக் கொண்டானோ சற்று தலையை உயர்த்தி, சாய்ந்தாற்போலப் படுத்துக் கொண்டான்.

'ம்...பார்க்கிறேன். என்ன?'

'இங்கே வரணும்ங்கற சொப்பனம் பலிச்சுதுன்னா, ப்ளூஜாகர் தோடு ஒண்ணு பண்ணிப் போடறேன்னு கலியாணம் ஆறதுக்கு முன்னாலெ புவனேச்வரிக்கு வேண்டிண்டேன்.'

'என்னது?'

மீண்டும் கிளிப்பிள்ளை மாதிரி அதே சொற்கள் முத்துராமு விழித்தான்.

'அம்பாள் என் இஷ்டத்தைக் கொடுத்துட்டா. நான் தான் கொடுக்காம...' என்று தொடங்கிய வாய், அதை மாற்றி 'நாள் கடத்திண்டே போயிண்டிருக்கோம்' என்றது.

'நானும் சேர்ந்து வேண்டிண்டேனா?'

'இல்லை. நான் தானே ஆசைப்பட்டேன்?'

'அதுக்கு நான் எப்படிப் பிணை?'

'வேறு யார் பிணையாயிருக்க முடியும்?'

'முடிச்சு விழுந்து உள்ள கால் வச்சாச்சுங்கற தைரியத் தோடுன்னா பேச்சு வரது—அருக்கா! என்ன கண்டிப்பு! என்ன வேகம்!'

'தைரியமே இல்லை. எனக்குப் பயமாயிருக்கு.'

'என்ன பயம்?'

'அடுத்த வெள்ளிக்கிழமைக்குள்ள உன் காலடியிலே கொண்டு வைக்கிறேன்னு சொல்லிவிட்டு வந்திருக்கேன்.'

'முடியாதுன்னா?'

'உங்களுக்கு முடியும்.'

'நான் அந்த மாதிரி கட்டுப்படுத்திக்கலியே.'

'எனக்காக நீங்க செய்யலாம்.'

'உனக்காகவா? என்னத்துக்குச் செய்யறது?'

'என்னது! என்ன சொன்னேள்?'

'உனக்காக நான் என்னத்துக்காகச் செய்யணும்னேன்.'

'இல்லாட்டா வேறு யாருக்காகச் செய்யறது?'

'...ஊரிலிருக்கறவள்ளாம் யாருக்கோ வேண்டிக்கிண்டு உள்ள நுழைஞ்சா, எதுவும் நடந்துடுமா என்ன?'

திடீர் என்று விளக்கு அணைந்தாற்போல கண்ணை இருட்டிற்று அவளுக்கு. விளக்கை அணைத்து, பின்னந் தலையில் ஓங்கி அடித்தாற்போல ஒரு வலி.

'இங்க என்ன கொட்டியா கிடக்கு?' என்று அந்த இருளில் குரல் கொஞ்சம் தழைந்தது.

'எனக்கு இல்லை. புவனேச்வரிக்கு.'

'புவனேச்வரியா இருந்தா என்ன? வைரத்தோடு இல்லாம நடக்காதோ?'

'சின்னம்மாவுக்கு மாத்திரம் பட்டுப் புடவையும் வைரத் தோடுமில்லாம நடக்காதா?'

'என்னது, என்ன சொன்னே!...என்ன சொன்னே!... இப்ப சொல்றியா இல்லையா?' என்று எழுந்தவன், அவள் கழுத்தை இரு கையாலும் கவ்வி நெறித்துக் குலுக்கினான். என்ன விகாரமான முகம்! கோபத்திற்கு எத்தனை விகாரம்! எத்தனை இல்லாமை! 'இப்ப சொல்றியா இல்லையா?'



கை தளர்ந்தது. 'அது என் இஷ்டம்...தெரிஞ்சுக்கோ' என்றான் அவன். கண்ணில் மின்னல். மூக்கில் புடைப்பு.

'இஷ்டம் எல்லாம் நல்லதாக இராது. கல்லுமாதிரி அவளுக்குன்னு ஒருத்தன் இருக்கான். அவன் கொடுப்பான். நீங்க கொடுக்கறது பாதகம்...அவன் இல்லாட்டாலாவது நான் வாயை மூடிண்டு கிடப்பேன்...இப்ப என் இஷ்டம்னு சொல்றதை என்னாலெ கேக்க முடியலெ. சுரீர் சுரீர்ங்கிறது. குடியைக் கெடுக்கற இஷ்டம் இது...'

சிறிது மௌனம். தலையாட்டல். சூன்யத்தில் ஒரு நட்ட பார்வை.

'...சும்மா இங்கே என்னைத் தொந்தரவு பண்ண வாண்டாம். நான் பாவிதான்...பாவிகிட்ட இருக்கவாண்டாம். போகலாம்...நீயே சம்பாதிச்சு உங்க புவனேச்வரிக்குப் போடலாம்...நீ சம்பாதி, திருடு—என்ன வாணா பண்ணு—'

'நானும் திருடணுமா?'

திரும்பி வெறித்தான் அவன். எழுந்தான். அவளைக் குண்டுக்கட்டாகப் பிடித்து, வெளியே இழுத்து விட்டான். கதவைத் தாழிட்டுக் கொண்டான். ஸ்விச், இருளைக் கவிக்கும் ஓசை கேட்டது.

கூடத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆனால் வெளிச்சம் விழுகிற மாதிரி இல்லை. அவ்வளவு வெளிச்சமும் இருளாக, செயலற்றுக் கிடந்தது. கண்ணில் ஒன்றும் படவில்லை. ஸ்வப்பனமா என்ன இது? கலியாணமாகி விட்டதா எனக்கு! நான் இங்கே வந்திருப்பது கனவில் நடந்து கொண்டிருக்கிறதா? நெறித்த கழுத்து வலிக்கிறது. கை, கால் மூட்டு, சப்பை எல்லாம் நோவுகிறது. பாட்டியும் தாத்தாவும் மாயவரத்திற்கு என்னிடம் சொல்லிவிட்டுத் தானே போனார்கள்? கொட்டு மேளம் கொட்டிற்றே! நலங்கின்பொழுது வெற்றிலையை என் கையிலிருந்து

பிடுங்கிய அவனுடைய கை நகம் என் கட்டை விரலில் அழுந்திற்றே! மஞ்சள் நீராடும்பொழுது கை பற்றிய வன் ஆள் காட்டி விரலால் உள்ளங்கையில் கோடு கிழித்தானே! ஊர்வலத்தின்பொழுது சிவப்பு மத்தாப்பு ஒளியில் அவன் கை அரிதாரம் போட்டமாதிரி பளிச்சென்று கொழுந்து விட்டதே! எப்படிக் கனவாக இருக்கும்?

ஊர் தூங்குகிறது. கொல்லையின் சலசலப்பு தூங்கு கிறது. கூடத்தில் எங்கோ சுவர்க்கோழி கத்துகிறது.

ஜிவு ஜிவு என்று கண் பொங்கிற்று. தலையில் நிமிர முடியாத கனம்.

மெதுவாக எழுந்து நடந்தாள். கொல்லைக் கதவைத் திறந்தாள். உதட்டை அழுத்தி, ஓசையிடாமல் மெது வாகத் திறக்க யுகம் ஆகியிருக்கும் போலிருந்தது. கிணற் றண்டை நின்றாள்.

உன் மேல் ஆசை பொங்க, விரும்பி, வருந்தி, வேண்டி உன்னை இங்கே அழைத்து வைத்துக் கொண்டார்களா? அசடு! அப்பன் திருடினான். விலங்கை மாட்டிக்கொண் டான். கொட்டடிக்குள் கிடந்தான். பாபம் ஜரித்ததும் வெளியே தள்ளி விட்டார்கள். பணம்—வீடு—நிலம் ஆனால்—ஊர் மனசில் நிற்கிற பாவியை யார் அழிக்க முடியும்? கிருஷ்ணன் மாதிரி பிள்ளை பிறந்து விட்டால்— ஊரை ஏமாற்றிவிட முடியுமா? கிருஷ்ணன் மாதிரி பிள்ளை! பளபளவென்று, வழவழவென்று பிள்ளை. அதற்குப் பெண் கொடுக்க இந்த இட்டலிக்காரி ஒருத்தி தான் வந்தாள்? வாசலில் உட்கார்ந்து, மொட்டைத் தலையும் பஞ்சக்கச்சமும் விபூதியுமாகக் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு கதை சொல்லி யாரையோ ஏமாற் றினால், புவனேச்வரியை ஏமாற்ற முடியுமா? 'கோட்டூர் அம்மா, எனக்குத் தோணாமலே போயிட்டுதே...குழந்தை தினமும் வரா... எனக்குத் தோணாமலேயே போயிட்டுதே' என்று பாசாங்கு பண்ணி அம்மாவை ஏமாற்றி, புவனேச் வரி உத்தரவிட்ட மாதிரியும் கட்டுப்பட்ட மாதிரியும்



ஏமாற்றிவிட்டால்...புவனேச்வரியை ஏமாற்ற முடியுமா— என்னை ஏமாற்ற முடியுமா?...புவனேச்வரி! தோடு உனக்கு வராது போலிருக்கிறது...நான்தான் உனக்குத் தோடு... அவன் காதிலிருந்து விழுந்துவிட்டேன். உன் காதிற்கு வந்துவிடுகிறேன்...ஆமாம் உன் காதில் இருந்தால் எனக்குக் கேடு கிடையாது, கவலை இராது, கடன் இராது ...சிலுசிலு வென்று, சின்ன இடுப்பும், கட்டுக் கூந்தலும், அரிசிப் பல்லும், தேன் முகமுமாக என்னை ஏமாற்றின துடைப்பந் தூக்குகிறவளைக் கூடக் கண்டு நான் எரிய மாட்டேன்... நான் தோடாகிவிட்டால் ஒரு சுமைகூட இராது—எனக்கு இராது, உனக்கு இராது—அவன் மன சிலும் இராது...

கிணற்றை எட்டிப் பார்த்தாள். ஜிர்க் ஜிர்க் என்று ஏதோ பூச்சி வெதறுகிற ஓசை. அங்கே கிடந்த வட்ட இருட்டுக் கூடக் கத்துகிறது மௌனக் கத்தல்!...மௌன மாகக் கத்துகிற இருட்டு.

தாத்தா வந்தால்—பாட்டி வந்தால்? தாத்தா கதற வில்லை, 'தாயே தாயே, என்று? அழகுசிங்கு அப்படிதான் சொன்னான்... அய்யங்கார் சொன்னார்... 'தாயே தாயேன்னு கதறியிருப்பன், அம்பாள் கண்ணைத் திறந் துட்டா... நீ தான் சரணம்னு விழுந்திட்டா, சாமி நம்மை விடாதுய்யா! ... அப்பன் திருடினான், பிள்ளை பெண்டாட்டியையே கிணற்றில் தள்ளிவிட்டான்...' அழகுசிங்கு இதைச் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறாற் போலிருந்தது.

ஒரு தடவை உலுக்கிப் போட்டது அவளுக்கு...திரும் பினாள். மெதுவாக நடந்தாள். கொல்லைக் கதவை ஒரு நிமிஷம் நின்று தாழிட்டு, கூடத்திற்கு வந்தாள். அந்த அறைக் கதவை விரலால் தள்ளிப் பார்த்தாள். கெட்டித்த மாதிரி அப்படியே நின்றது அது. கழுத்தில் வலி, பிடரியில் வலி, சப்பையில் வலி...கண் ஜிவு ஜிவு என்கிறது. வயிற்றில் லேசாகக் குமட்டல்.

அப்படியே சுவரோரமாக முடங்கினாள். கண்ணை மூடினாள். தோடு பளிச்சிட்டது. புவனேச்வரியின் காது தான். அந்தத் தோடுதான்.

கண்ணைமூடி வந்த நீல வெளியில் வளையங்களும் கோணங்களும், பூக்களும் சுழலும் நீலமும் செஞ்சிவப்பும் கலந்த வெளியில் தோடுதான் தெரிந்தது. அப்படியே அந்தத் தோடுதான் நின்றது. அவள் அங்கே இல்லை. தோடுதான் இருந்தது. நின்றுகொண்டேயிருந்தது. வேறு நினைவு இல்லை. அவளே இல்லாத போது நினைவு எங்கே இருக்கும்? தோடாக மாறிவிட்டபோது அவள் மட்டும் எப்படித் தனியாக நின்று எதைப் பார்க்க முடியும்?

தோடு மறைந்து விட்டது...

சேவல் கத்துகிறது, சாலியத் தெரு சேவல். சுவர்க் கோழி கத்துகிறது. மணியடிக்கிறது; கோவில் மணி. அதிகாலை விச்வரூப பூஜை மணி. இருள் பிரிந்திராது. கண்ணைத் திறக்கவில்லை அவள்.

சட்டென்று தூக்கிப்போட்டது. தோளில் ஏதோ கை படுகிறது.

'பட்டு!'

கண் விழித்தாள் அவள்.

'ஏன் உடம்பெல்லாம் சுடறது?...இங்கியேவா படுத்திண்டிருக்கே? விளக்கைக்கூட அணைக்காம!... ஏன் உடம்பு இப்படிக் கொதிக்கிறது?' மார்பு, வயிறு, நெற்றியெல்லாம் தொட்டுப் பார்த்தான் முத்துராமு.

'எழுந்திரு' என்று தூக்கிப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்று படுக்கையில் விட்டான்.

பக்தத்தில் உட்கார்ந்து கொண்டான்.

நெற்றியைத் தொட்டான். தடவிக் கொடுத்தான். கையைப் பிடித்தான். 'நெருப்பாக் கொதிக்கிறதேகையி!



அவனையே பார்த்தாள் பட்டு. பார்வையில் வெறிப்பு இல்லை. எல்லாம் கடந்து விட்டாற்போல ஒரு அமைதி—எல்லாம் நின்றுபோனது போல அலையாத தளும்பாத தேக்கம்.

அவளைத் தைரியப்படுத்துகிறது போல— காலமே, டாக்டரை அழைச்சிண்டு வந்துடறேன். ஒருவேளை மருந்திலே சரியாப் போயிடும்' என்றான்.

'வாண்டாம், வாண்டாம்' என்றாள் அவள்.

'என்ன வாண்டாம்? இப்படி நெருப்பா வீசறதே!'

'வீசட்டும்...நான் இப்படியே, இப்படியே...'

'என்ன சொல்றே, பட்டு?'

'நான் யாரைப் பார்த்தும் குறைப்பட்டுக்கலே... அசூயைப் படமாட்டேன். இடைஞ்சலாயிருக்கலே...அம்பாள் காதிலே நான் தோடாகப் போய் ஒட்டிக்கறேன். அங்கேயே இருந்துடறேன்...'

அவன் பதில் பேசவில்லை. சிறிது நேரமாயிற்று. 'பட்டு,நானும் ராத்திரி முழுக்க தூங்கலெ...' என்றான்.

பேசாமல் அவனைப் பார்த்தாள் பட்டு. கூடத்து வெளிச்சத்தின் மயக்கம் அவன் முகத்தில் விழுந்திருந்தது

'நானும் திருடத்தான் திருடிண்டிருக்கேன்...அவளை... இன்னும் திருடிண்டேதான் இருக்கணும் போலிருக்கு... இந்தத் திருட்டு நிற்காது போலிருக்கு...இதை நிறுத்த முடியாதா, நிறுத்த முடியாதான்னு நானும் ராத்திரி முழுக்கக் கேட்டுண்டிருக்கேன்...''

'அவளைத் திருடலெ—அவனைத்தான் திருடியாறது. இப்ப...நகையைத் திருடினா காதிலே போட்டுண்டிருக்கிறவாளுக்குத்தான் மனசு கொதிக்கும்.

'தோட்டைத் திருடினா, தோட்டுக்குக் கோபம் வராது. ...அம்பாளுக்குத்தான் கோபம் வரும்' என்றான் அவன்.

சட்டென்று எழுந்து அவன் கையை அமர்த்தி, 'எனக்குத் தெரியும்' என்றாள் அவள்.

'என்னத் தெரியும்?'

'எல்லாம் தெரியும்...சொல்ல வாண்டாம்' என்று மீண்டும் கையை அமர்த்தினாள் அவள்.

'எப்ப தெரியும்?'

'எப்ப தெரிஞ்சா என்ன?'

'அப்பவே தெரியுமா?'

'அப்ப தெரிஞ்சிருந்தா என்ன? நான் இங்கே தோடா இருந்தாப்பல கண்ணை மூட றபோதெல்லாம் கண்டுண்டே இருந்தேனே, அது எப்படி இல்லாம போயிடும்?' என்று அவன் காதைத் தொட்டாள் அவள். அவன் அவள் முகத்தையே பார்த்தான். 'தோட்டைத் திருடினா ஜெயில்லே போடுவா. வேற மனுஷன் காதிலே இருக்கிற தோட்டைத் திருடினா, அந்த ஜெயிலும் கிடைக்காது.'

அவன் என்ன சொல்கிறான் என்று புரியாமல் பட்டு விழிந்தாள்.

'புவனேச்வரிக்குத் தோட்டைப் பண்ணிப் போட்டா, அந்த ஜெயில் கிடைச்சுடுமோல்லியோ?' என்று கேட்டான் அவன்.

'எந்த ஜெயில்?'

'உன் புவனேச்வரியின் ஜெயில்தான். அவ கண்ணிலேர்ந்து தப்பிச்சுண்டு ஓடி விடாமே, கட்டுப்பட்டுக் கிடக்கிற ஜெயில்' என்றான்.

'அப்ப உங்க காதிலேர்ந்து நான் விழுந்துவிடலியா?' என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டிருந்தாள் பட்டு. அவள் கால் விரலில் குறுகுறுவென்றது. சட்டென்று இழுத்துக் கொண்டு அவன் கண்ணைத் தலைப்பால் துடைத்தாள் அவள்.

★